உதயன்

சுடர் 30 கதிர் 244 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 12. செவ்வாய்க்கிழமை 28.07.2015

## இனவாத சுவரொட்டிகள் கேகாலையில்

*கபீர் காசிம் விசனம்*

கொழும்பு, ஜூலை 28
'எங்கள் வாக்கு சிங்கள - பௌத்தருக்கே' என்ற வாசகம் அடங்கிய சுவரொட்டிகள் கேகாலை மாவட்டத்தில் பரவலாக ஒட்டப்பட்டு வருகின்றது.
இனவாதத்தைத் தூண்டும் வகையிலான இந்தச் சுவரொட்டிகளை சிறுவர்களைக் கொண்டு ஒட்டுவித்து வருவதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் கபீர் காசிம் குற்றஞ்சுமத்தியுள்ளார்.
'கட்சி பக்கம் 24

## புலனாய்வுப் பணிப்பாளராக மெண்டிஸ்

கொழும்பு, ஜூலை 28
ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ் மா அதிபர் சிசிர மெண்டிஸ், தேசிய புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இன்று தனது பதவியை ஏற்றுக் கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
பொலிஸ்துறையின் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகவும், போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பணிப்பாளராகவும் சிசிர மெண்டிஸ் முன்னர் பணியாற்றியிருந்தார். மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் மேஜர் பக்கம் 24

தென்னிலங்கை மக்களுக்கே பயன்தரும் நாடாளுமன்றத் தேர்தல்

பக்கம் 17

# வட்டுக்கோட்டை பிரகடனத்துக்கு நிகர் கூட்டமைப்பு விஞ்ஞாபனம்

## கடுமையாகச் சாடுகின்றது மஹிந்தவின் தரப்பு



கொழும்பு, ஜூலை 28
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுத் தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனமானது 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைப் பிரகடனத்துக்கு நிகரானது - என்று சுட்டிக்காட்டிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், மாத்தறை மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதம வேட்பாளருமான டலஸ் அழகப்பெரும, இது நல்லிணக்கத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும், பிரிவினைவாதத்தைத் தூண்டும் என்றும் குறிப்பிட்டார்.
தமிழ் மக்களைப் பிரதிநிதித் துவப்படுத்தி ஜனநாயக ரீதியில் செயற்பட்டுவந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது சுயரூபத்தை தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூலம் வெளிக்காட்டியுள்ளது. த.தே.கூ. பிரிவினைவாதிகளின் பிடியில் சிக்கியுள்ளது. 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை பிரகடனத்துக்கு நிகரானது இவர்களது தேர்தல் விஞ்ஞாபனம். - என்றும் அவர் தெரிவித்தார்.

பக்கம் 24

## நாட்டைத் துண்டாடுவதற்கு தமிழ் கூட்டமைப்பு முயற்சி

### சிங்கள மக்களை எச்சரிக்கின்றார் மஹிந்த



கொழும்பு, ஜூலை 28
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாட்டைத் துண்டாட நினைக்கின்றது. அது தொடர்பில் சிங்கள மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இதனை ஒரு போதும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அனுமதிக்காது. இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும், தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஷ்டி முறையிலான அதிகாரப் பரவலாக்கம் மூலம் தீர்வு காண வேண்டும் என்று,

பக்கம் 24

## கலாம் காலமானார்



புதுடில்லி, ஜூலை 28
இந்தியாவின் ஏவுகணை மனிதர் என்றழைக்கப்பட்ட முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் நேற்று திடீர் உடல் நலக்குறைவால் உயிரிழந்தார்.
இவருக்கு வயது 83. திடீரென ஏற்பட்ட நெஞ்சுவலி காரணமாக மருத்துவனையில் சேர்க்கப்பட்ட கலாம் அங்கு

பக்கம் 24

## நெற்பயிருக்குள் தங்கையை விட்டுவிட்டு வந்தது நானே!

### நீதிமன்றில் 14 வயதுச் சிறுவன் வாக்குமூலம், பாலியல் துன்புறுத்தலும் நடந்தது என ஒப்புதல்

கிளிநொச்சி, ஜூலை 28
ஒரு மாதத்தின் முன்னர் கிளிநொச்சியில் காணாமற்போன 3 வயதுக் குழந்தையை அவரது உறவினரான 14 வயதுச் சிறுவன் பாலியல் ரீதியில் துன்புறுத்திய பின்னர் நெற்பயிர்களின் நடுவே விட்டு விட்டு வந்ததால், பட்டினியால் குழந்தை உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இதற்கிடையே, குறித்த குற்றச்சாட்டை சிறுவன் நேற்று நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டான். குழந்தையை தானே வயலின் நடுவே தூக்கிச் சென்று பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கிய பின்னர் அங்கேயே விட்டு விட்டு வந்து விட்டதாக நேற்று அவன் நீதிமன்றத்தில் தெரிவித்தான்.
கிளிநொச்சி, எள்ளுக்காட்டைச் சேர்ந்த

பக்கம் 24

## சந்திரிகா இன்று விசேட உரை?

கொழும்பு, ஜூலை 28
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா தேர்தல் தொடர்பில் இன்று விசேட உரையொன்றை ஆற்றவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
தற்போதைய அரசியல் நிலவரங்கள் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான விடயங்களை அவர் அதில் முதன்மைப்படுத்துவார் என்றும் தெரியவருகின்றது.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு பக்கம் 24

## சொத்து விவரம் வெளியிடுவதில் வேட்பாளர்கள் அசமந்தப் போக்கு

### ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நெஷனல் நிறுவனம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 28
சொத்து விவரங்களை வெளியிடுவதில் வேட்பாளர்கள் அசமந்தப் போக்குடன் உள்ளதாக ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நெஷனல் நிறுவனம் குற்றஞ்சாட்டியுள்ளது.
தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளில் ஜனசத பெரமுன என்ற கட்சியின் வேட்பாளர்கள் மட்டுமே, நூற்றுக்கு நூறு வீதம் சொத்து விவரங்களை வெளியிட்டுள்ளனர் என்று அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.
கண்டி, திருகோணமலை, நுவரெலியா, மாத்தறை உள்ளிட்ட சில மாவட்டங்களில் 50 இற்கும் 60இற்கும் இடைப்பட்ட

பக்கம் 24

## 12 கிலோ மாவாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 28
கஞ்சா போதை கலந்த 12 கிலோ மாவா போதைப் பொருளுடன் 21 வயதுடைய இளைஞரை நேற்றுக் கைது செய்துள்ளதாக யாழ். பொலிஸ்

பக்கம் 24

## போதையூட்டிய வெற்றிலை; யாழில் ஒருவர் நேற்று கைது

### போதையூட்டும் திரவங்களுடன் 66 போத்தல்களும் மீட்பு



யாழ்ப்பாணம், ஜூலை 28
வெற்றிலை பாக்குகளுக்குப் போதையூட்டி விற்பனை செய்துவந்த குற்றச்சாட்டில் கடை உரிமையாளர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். அவரது வீட்டில் இருந்து, வெற்றிலையில் பூசிப் போதையூட்டப் பயன்படுத்தப்படும்

பக்கம் 24

## வாக்காளர் அட்டை நாளை தபால் திணைக்களத்திடம்

யாழ்ப்பாணம், ஜூலை 28
நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் நாளை புதன்கிழமை, தபால் திணைக்களத்திடம் கையளிக்கப்படவுள்ளன.
எதிர்வரும் ஒகஸ்ட் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள், யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு தேர்தல்கள் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பக்கம் 23

## போதைப்பொருளை ஒழிக்க இணைவோம்

### தெற்காசிய வலய நாடுகளின் தலைவர்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால அழைப்பு

கொழும்பு, ஜூலை 28
தெற்காசிய வலயத்தின் அனைத்து தலைவர்களும் பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும். - என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தியுள்ளார்.
இலங்கையில் போதைப் பொருளை இல்லாதொழித்தல், கிரமமான உள்நாட்டு உணவு உற்பத்திகளை ஆரம்பித்தல்,

பக்கம் 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும்

## உறுதியளிக்கிறார் சுதந்திரக் கட்சி வேட்பாளர் அங்கஜன்

யாழ்ப்பாணம், ஜூலை 28

நாட்டில் 10 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். அதில் வடக்கில் மாத்திரம் ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்குவது பற்றி அவருடன் கலந்துரையாடி வருகின்றோம் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார் அவர். மேலும் தெரிவித்ததாவது:

யாழ். மாவட்ட மக்களுக்கு கடந்த ஐந்தரை வருடங்களில் பல சேவைகளைச் செய்துள்ளோம். 4 ஆயிரத்து 500 பேருக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்துள்ளோம். எமக்கு நிதி இல்லை. சொந்தப் பணத்தில்



தான் சேவை செய்தோம். இன்னும் மக்களுக்குச் சேவை செய்யக் காத்திருக்கிறோம்.

தமிழ் மக்களின் அமோக ஆதரவுடனேயே ஜனாதிபதி மைத்திரிபால தெரிவு செய்யப்பட்டார். தமிழ் மக்களுக்குத் தான் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும், மக்களுடன் சேவை செய்ய வேண்டும், என்ற அவரது முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்டினர். அவர் கொடுத்த உறுதிமொழிகளை நிறைவேற்றாமல் தடுக்க முற்பட்டனர். எல்லாச் சவால்களையும் சந்தித்தும் அவர் கூறியது போன்றே அரச ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கினார். மேலும் பல கோரிக்கைகளை நிறைவேற்றினார்.

ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு வடக்கில் வேலை வாய்ப்பை வழங்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால இணக்கம் தெரிவித்துள்ளார். அது குறித்து அவருடன் பேசி வருகின்றோம்.

ஒரு லட்சத்து 50 ஆயிரம் வீட்டுத் திட்டங்கள் வழங்கும் நோக்கமும் உள்ளது. இந்திய வீட்டுத் திட்டங்களில் சில கிராம அலுவலர்கள் முகம் பார்த்துப் பக்கச் சார்பாக நடந்துள்ளனர் என்று குற்றச்சாட்டுக்கள் உண்டு. இந்தத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே வீடு உள்ளவர்களுக்கும் வீடு வழங்கப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கூறப்படுகின்றன. இடம்பெயர்ந்தோர் முகாம்களில் உள்ள மக்களுக்கு தொழில் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

ஜனாதிபதி அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற நாம் பக்கபலமாக இருக்க வேண்டும். ஏனெனில் அவர் வெல்வதற்குச் சிறுபான்மை மக்களின் வாக்குகளே பெரிதும் உதவின. அதனை ஜனாதிபதி மறக்கவில்லை.


வலி. வடக்கில் மீள்குடியேற்றத்துக்கான நிலங்களை ஜனாதிபதி மைத்திரிபால விடுவித்திருகிறார். அங்கு முற்றுமுழுதான மீள்குடியேற்றத்துக்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். மீள்குடியேறியவர்களுக்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

தவிர அந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த நலன்புரி நிலையம் ஒன்றின் தலைவர் நலன்புரி நிலையங்களில் தாம் அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந் வருகின்றார் எனவும் அதற்கு இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் குற்றச் சாட்டுத் தெரிவித்தார். அதில் 7 நலன்புரி நலையங்களின் பிரதிநிதி களும் கலந்து கொண்டிருந்தனர்.

(உ-4)

# வியத்தகு படைகள் இருந்த எம்மிடம் இன்று மக்கள் பலத்தின் சக்தி உண்டு

## எனவே அரசுகள் தீர்வைத் தந்தே ஆகவேண்டும் என்கிறார் சுரேஸ்



தென்மராட்சி, ஜூலை 28

ஒரு காலத்தில் எம்மிடம், பலமிக்க உலக நாடுகளே வியந்த பெரும் படை அணிகள் இருந்தன. ஆயுத படை, கடற்படை, விமானப் படை போன்ற படைகள் இருந்ததை நீங்கள் அறிவீர்கள். அவைகள் தற்போது எம்மிடம் இல்லாத போதிலும் மக்கள் பலம் என்னும் பெரும் சக்தி எம் முன்னாலே இருப்பதால் இலங்கை அரசில் இருக்கும் எந்தவொரு கட்சியாயினும் எமது மக்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கியே தீரவேண்டுமென்ற நிலை காணப்படுகிறது.

இவ்வாறு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். சாவகச்சேரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கை வெறுமனே தேர்தலுக்காக மட்டும் உருவாக்கப்பட்டதல்ல. எமது மக்களின் அடிப்படைத் தேவைகளை நன்கு உணர்ந்து தமிழ் மக்கள் சார்பாக வெளியிடப்பட்ட அறிக்கையாகும் அது. இதில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு விடயமும் தமிழ் மக்களின் விருப்பு வெறுப்புகளை சுயநிர்ணய உரிமையைக் குறிவைத்து உருவாக்கப்பட்டவை.

எமக்கு முன்னர் வெளியிடப்பட்ட நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கையில், ஒற்றையாட்சிக்குக் கீழ் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒற்றையாட்சிக்கு கீழ் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது நடைமுறைக்குச் சாத்தியமானதல்ல. அது சாத்தியப்படாது என்பதாலேயே தெற்கிலுள்ள ஒவ்வொரு தலைவரும் தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றனர். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பலத்துடன் எந்தவொரு அரசும் செயற்பட முடியாத அளவுக்கு சிங்கள மக்கள் மத்தியில் மாறுதல் ஏற்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது பலமான நிலையில் நாடாளுமன்றம் சென்றால் எமது மக்களுக்கு கிடைக்கவேண்டியவற்றை பேரம் பேசி பெறக்கூடியதாக இருக்கும்.

தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து தேர்தல் மாவட்டங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுகிறது. தமிழ் மக்களாகிய நீங்கள் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் எதிர்கால விடிவுக்காகப் போராடி வரும் இந்த அணியை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிப்பதிலிருந்து விலகியிருக்க வேண்டுமென ஒரு சாரார் விரும்பினர். ஆனால் அரசியல் மாற்றம் வேண்டுமென மக்கள் அரசியல் சாணக்கியத்துடன் புத்திசாலித் தனமாக வாக்களித்தனர். அதன் பயனாக ஒரு ஜனாதிபதியை மாற்றக் கூடிய சக்தி தமிழ் மக்களுக்குக் கிடைத்தது. இந்த ஒற்றுமையை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் ஒருமித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும் – என்றார்.

கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களான த.சித்தார்த்தன், மாவை சேனாதிராசா, இரா.சம்பந்தன் ந.ஶ்ரீகாந்தா, அருந்தவபாலன் உட்படப் பலர் உரையாற்றினர்.

(உ-9,131)

# திம்புக் கோட்பாடு ஏற்கப்படுவதற்கு காரணம் விடுதலைப் புலிகளேதான்

## ஜனநாயகப் போராளிகள் கட்சி சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஜூலை 28

திம்புக் கோட்பாட்டின் மூன்று அம்சங்களும் இலங்கையில் ஆட்சியிலிருந்த அரசுகளினால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குக் காரணமாக இருந்தது விடுதலைப் புலிகளின் அர்ப்பணிப்பு மிக்க போராட்டம்தான்.

ஜனநாயகப் போராளிகள் கட்சி நேற்று வெளியிட்ட அறிக்கையில் அதன் முதன்மை வேட்பாளர் ந.வித்தியாதரன் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் சுயேச்சைக் குழு 4இல் சிலந்திச் சின்னத்தில் களமிறங்கியிருக்கும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தலைவர் பிரபாகரனினால் வழிநடத்தப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளிகளை ஜனநாயக அரசியலில் ஒன்றிணைக்க மறுத்து, அவர்களை உதைத்துத் தள்ளி, புறம் ஒதுக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்னும் தங்களின் அரசியல் பரப்புரைக்கும், ஆதரவு திரட்டலுக்கும் தலைவர் பிரபாகரனின் நாமத்தையும் அவர் வழியில் தங்களை அர்ப்பணிக்க முன்வந்த போராளிகளின் ஈகங்களையும் பயன்படுத்த முற்படுவது அரசியல் பிற்போக்குத்தனம்; மக்களை முட்டாள்களாகக் கருதி ஏமாற்றும் எத்தனம்.

திம்புக் கோட்பாடு, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தவிர்ந்த ஏனைய மிதவாதக் கட்சிகளினாலும் போராளிகள் இயக்கங்களினாலும் ஒன்றிணைந்து முன்வைக்கப்பட்டது.

தமிழர் தரப்பால் அங்கு முன்வைக்கப்பட்ட மூன்று பிரதான அம்சங்களும் அப்போதைய ஜே.ஆர்.அரசினால் நிராகரிக்கப்பட்டன. எனினும் அந்தக் கோட்பாடுகளில் முதல் இரண்டும் இலங்கை – இந்திய ஒப்[illegible] [illegible] மூலமும் பின்னர் சர்வதேச பங்களிப்புடன் இலங்கை அரசினால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டன.

அந்த மூன்று கோட்பாடுகளும் இலங்கையில் ஆட்சியிலிருந்த அரசுகளினால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குக் காரணமாக இருந்தது விடுதலைப் புலிகளின் அர்ப்பணிப்பு மிக்க போராட்டம்தான்.

அந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் தீர்வு காணுதல் குறித்துத் தமது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அந்தக் கோட்பாடுகளின் சரித்திரப் பின்னணிகளையும் அதில் தொட்டுக் காட்ட முயன்றுள்ளது. அந்தக் கோட்பாடுகளை சர்வதேச பங்களிப்புடன் இலங்கையை அங்கீகரிக்க வைத்ததில் விடுதலைப் புலிகளின் பிரதான பங்களிப்பை தமிழ்க் கூட்டமைப்பு மறைத்துப் பேசியிருப்பதில் வியப்பில்லை. புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்புவதையே தடுக்கும் அவர்கள் அப்படித் தான் நடந்து கொள்வார்கள்.

ஆனால், அந்தக் கோட்பாடுகளை எட்டுவதற்குக் காரணமாக இருந்த மற்றைய தரப்புக்களான ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட், ரெலோ போன்ற சகோதரக் கட்சிகளின் பங்களிப்பை முழுமையாக இருட்டடிப்புச் செய்து விட்டு வெறுமனே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மகத்துவம் பற்றி மட்டுமே அந்த அறிக்கை பேசி நிற்கின்றது. அது போலவே தமிழர் விடுதலைக் கூட்டணி, அதன் வரலாற்றுப் பிறப்பாக்கத்துக்குக் காரணமாக இருந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், அந்தக் கட்சிகள் எல்லாம் இணைந்து முன்வைத்த வட்டுக்கோட்டைத் தீர்மானம், அதன் பெயரால் தமிழ் இளைஞர்களுக்குத் தாங்கள் வழங்கிய உசுப்பேற்றல் போன்ற எல்லாவற்றையும் மறைத்துவிட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சுயபுராணமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை மலர்ந்திருக்கின்றது.

இந்த ஒரு தலைப்பட்ச – எதேச்சாதிகார – போக்கிலிருந்து கூட்டமைப்பு விடுபடவேண்டும். அப்போதுதான் ஒட்டு மொத்த தமிழினத்துக்கான விடிவை நோக்கி நாம் நகர முடியும்.

தலைவர் பிரபாகரனின் ஆசீர்வாதத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டமை ஒட்டுமொத்த தமிழரின் விடிவுக்காகவேயன்றி, தனித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அதிகாரத் தோரணையை நிலை நிறுத்துவதற்கல்ல. கூட்டமைப்பின் ஏனைய அங்கத்துவக் கட்சிகள் இந்தக் கட்டத்திலேனும் இது குறித்து சிந்திக்க வேண்டும். தீர்மானம் எடுத்து செயல்பட முன்வரவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஜனநாயகப்படுத்தி, எதேச்சாதிகாரப் போக்கிலிருந்து அதனை விடுவித்து, ஒட்டுமொத்தத் தமிழர்களின் நலனை மட்டும் மையப்படுத்திச் செயற்படுத்தும் ஒரு கட்டுக்கோப்பாக மாற்றும் போராட்டத்தில் தேர்தலின் பின்னராவது எங்களுடன் ஒன்றிணையுங்கள் என்று கூட்டமைப்பின் மற்றைய கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கிறோம் – என்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டக்ளஸுக்கும் கஜேந்திரகுமாருக்கும் என்ன வித்தியாசம்?

## கேட்கிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், ஜூலை 28

மஹிந்த ராஜபக் ஷவுடன் ஒட்டி இருந்து, அவர் வெற்றி பெற வேண்டும் என்று உழைத்த டக்ளஸ் தேவானந்தாவுக்கும், தமிழ் மக்கள் வாக்களிப்பைப் புறக்கணித்து மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியிலே தொடர்ந்து இருக்க வேண்டும் என்று விரும்பிய கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் என்ன வித்தியாசம்.

மஹிந்த தொடர்ந்தும் ஆட்சியில் இருக்க வேண்டும் என்று விரும்பியவர்களையா நீங்கள் நாடாளுமன்றத்துக்கு அனுப்பப் போகின்றீர்கள்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கேள்வி எழுப்பினார்.

மருதனார்மடத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் தேர்தலில் முன்வைக்கப்படும் எங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனம் முக்கியமானது. அரசியல் தீர்வு தொடர்பாக, புதிதாக எதையும் நாங்கள் சொல்லவில்லையென்றாலும், எவருக்கும் எந்தச் சந்தேகமும் ஏற்படாத வகையில் இந்த மாதிரியான அரசியல் தீர்வைதான் எங்கள் மக்கள் கேட்கின்றனர் என்பதை முன்வைத்திருக்கின்றோம். 60 வருட தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு இதுதான் என்று சொல்கின்ற ஒரு தீர்வுப் பொதியாக எங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனம் முன்வைக்கப்பட் டுள்ளது.

இதுதான் எங்கள் அரசியல் தீர்வு என்று நாங்கள் முன்மொழிய, அதனை எங்கள் மக்களாகிய நீங்கள் ஓகஸ்ட் 17 ஆம் திகதி வழிமொழிய வேண்டும். நீதியின் படி – நியாயத்தின்படி – உலக ஒழுங்கின்படி இந்தத் தீர்வு எங்களுக்கு கொடுக்கப்பட வேண்டியது. ஆகையால் இனிமேலும், இதனைத் தட்டிக் கழிக்க முடியாது.

கூட்டமைப்பு என்ன செய்தது என்று கேட்கின்றவர்கள் இதை சற்று நிதானித்துப் பார்க்க வேண்டும். 2009 ஆம் ஆண்டு இருந்த நிலைமைக்கும், இன்றைக்கு இருக்கின்ற நிலைமைக்கும் வித்தியாசம் தெரிந்தால், கூட்டமைப்பு என்ன செய்தது என்ற கேள்வி கேட்க மாட்டார்கள். ஏனென்றால், 5 ஆண்டுகளில் நடந்தது அனைத்தும் கூட்டமைப்பினருடைய செயற்பாடுகளினால் தான்.

2010 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அப்போதைய பாரதப் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்திக்கச் சென்ற போது, சம்பந்தன் ஐயா ஒரு கருத்தை அவருக்குச் சொன்னார். 2009 ஆம் ஆண்டு ஐ.நா. மன்றத்தில் இலங்கையைப் பாராட்டி தீர்மானம் கொண்டு வந்திருக்கின்றீர்கள். அதற்கு நீங்கள் தலைமை தாங்கியிருக்கின்றீர்கள். இது எங்கள் மக்கள் மனதை வெகுவாகப் பாதித்துள்ளது. இன்றிலிருந்து ஒன்றரை வருடங்களுக்குள் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இன்னொரு தீர்மானம் வரும். அந்தத் தீர்மானம் இலங்கையை கேள்விக்கு உட்படுத்துவதாக இருக்கும். அப்போது நீங்கள் எங்களைக் கைவிடக் கூடாது என்று சொன்னார்.

ஐயா சொன்னதைப் போன்று, இலங்கையை கேள்வி கேட்கின்ற தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வந்தது. அப்போது இந்தியா ஆதரித்தது. அந்தத் தீர்மானத்தை, நாம் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்துடன் பேசியே கொண்டு வந்தோம். உலக வல்லரசு எங்களுடைய செய்தியை செவிமடுத்தது. இறுதிப் போரில் நடந்தது எல்லாவற்றையும் ஐயா புட்டுப்புட்டு வைத்தார். அதனால்தான், 2012 ஆம் ஆண்டு உலக வல்லரசு அமெரிக்கா எங்களுக்கான தீர்மானத்தைக் கொண்டு வந்தது.

பிராந்திய வல்லரசான இந்தியாவையும் வழிக்குக் கொண்டு வந்தோம். 2014 ஆம் ஆண்டு சர்வதேச விசாரணையைக் கொண்டு வந்தோம். ஐ.நா. மனித உரிமைகள் சபை சர்வதேச விசாரணைக்கு ஆணையிடுவது இலேசான காரியமல்ல. இதுவரை எத்தனை நாடுகளுக்கு எதிராக சர்வதேச விசாரணை நடத்தப்பட்டது என்பதை விரல்களிலேயே எண்ண முடியும். சர்வதேச விசாரணை நடந்தது. அதுவும் 5 வருட காலத்தினுள்ளே நடந்தது. இலங்கையைப் பாராட்டிய ஐ.நா. சபை 5 வருடங்களில் அதே இலங்கையை அங்கு நடந்த போர்க் குற்றங்களுக்காக கேள்வியைக் கேட்டது.

இது எப்படிச் சாத்தியமானது? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னெடுப்பினால் சாத்தியமானது. இது நடைபெறாமல் தடுக்க, பலர் முயன்றார்கள். 2012 ஆம் ஆண்டு டக்ளஸ் தேவானந்தா ஜெனிவாவுக்கு கூட்டமாகச் சென்று அங்கே, பல நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து இங்கே ஒரு போர்க் குற்றமும் நடைபெறவில்லை என்று சொன்னார். ஒரு கையில் மனித உரிமை சாசனத்தையும் மற்றக் கையிலேயே துப்பாக்கியையும், இருதயத்திலே அன்பையும் வைத்துக் கொண்டு தான் இலங்கை இராணுவம் போராடியது என்று சொன்னார். தீர்மானம் நிறை வேற்றப்படுவதை தடுக்க முயன்றார்.

இறுதியாக 2014 ஆம் ஆண்டு தீர்மானத்தின் முதல் வரைபு வந்த போது, அதில் சர்வதேச விசாரணை இருந்தது. அதனை விளங்கிக் கொள்ளாத பலர் சர்வதேச விசாரணை கிடையாது, இது பலவீனமான தீர்மானம், இது வேண்டாம். இது எங்கள் போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் என்று பெரிய பொய்ப் பரப்புரை செய்தார்கள்.

இன்று எங்களை விடக் கூடுதலான தேசியவாதிகளாகக் காட்டிக் கொள்கின்றவர்கள், சென்ற வருடம் ஓகஸ்ட் மாதம் வரைக்கும் இந்த சர்வதேச விசாரணைக்கு எதிராக பல பரப்புரைகளைச் செய்தார்கள். ஆனால் கடந்த ஓகஸ்ட் மாதத்தின் பின்னர் அவர்கள் 'அந்தர் பல்டி' அடித்துக் கொண்டு பேச்சை மாற்றி, சர்வதேச விசாரணையை கூட்டமைப்பு கைவிட்டு விட்டது, நாங்கள் தான் இதனைக் காப்பாற்றப் போகின்றோம் என்று கூக்குரல் இடுகின்றனர். அவர்கள் செய்த பரப்புரைகள் எல்லாம் பதிவில் இருக்கின்றன.

இந்தச் சர்வதேச விசாரணை வேண்டாம் என்று சொன்னவர்கள், இந்த விசாரணையை தடுக்க முனைந்தவர்கள், இந்த விசாரணைக்கான ஆதரவை நாங்கள் நாடுகளிடம் திரட்டிய போது அதனை எதிர்த்துக் குழப்பியவர்கள், கஜேந்திர குமார் பொன்னம்பலம் அணியினர். இவர்களால், நாம் ஆதரவு திரட்ட வேண்டிய கூட்டங்களையே ரத்துச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்வாறான இக்கட்டான நிலைமையிலேதான் நாங்கள் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றச் செய்தோம். சர்வதேச ரீதியில் இதனைச் செய்து முடித்தவர்கள் யார் ? உள்நாட்டிலும் பாருங்கள், மஹிந்த ராஜபக்ஷவையும் அவரது பரம்பரையையும் எந்தக் காலத்திலும் அரியாசனத்திலிருந்து அகற்ற முடியாது என்று எல்லோரும் அடித்துச் சொன்னார்கள். ஆனால் 5 வருடங்களில் மஹிந்த வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றார்.

எப்படி முடிந்தது? அதில் தமிழ் மக்களின் பங்களிப்பு இருந்தது. அந்த மாற்றம், நவம்பர் 19 திகதி மஹிந்தவின் பிறந்தநாள் அன்று, மைத்திரி 2 முட்டை அப்பங்களைச் சாப்பிட்டு விட்டு அடுத்த நாள் கட்சி தாவியதால்வரவில்லை. அது இரண்டு வருடங்களுக்கு மேலாக திட்டமிடப்பட்டு கொண்டுவரப்பட்ட ஆட்சிமாற்றம். அதில் எங்களுக்கும் பங்களிப்பு இருக்கின்றது. எங்களுடைய மக்களின் நிலங்களை அபகரித்து, மக்களை அடக்கி ஒடுக்கி இரும்புப் பிடிக்குள்ளே வைத்துக் கொண்டு எங்களை மூச்சுத் திணறச் செய்து, தமிழர்களை இல்லாமல் செய்வதற்கு திட்டம் தீட்டி, முழுமையாக எங்களை அழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்ட மஹிந்தவின், இந்தப் பிடியிலிருந்து சற்று விலக வேண் டிய அவசர தேவை இருந்தது.

அந்த மாற்றம் தமிழ் மக்களால் மாத்திரம் செய்யப்பட முடியாமல் இருந்தது. ஆகையினால், சிங்கள முற்போக்கு சக்திகளுடன் இணைந்து கொண்டோம். அவரை அரியாசனத்திலிருந்து வீழ்த்துவதற்காக நாங்கள் செயற்பட்டோம். எங்களை விட வேகமாக நீங்கள் செயற்பட்டீர்கள். எங்களுடைய மக்களின் நாடித்துடிப்பு முழுமையாகத் தெரிந்திருந்தது. அதனால்தான் எங்கள் மக்களின் ஜனநாயக பிரதிநிதிகளாக நாங்கள் இருந்தோம். எங்கள் மக்களின் நாடித்துடிப்பு பற்றி கொஞ்சம் கூடத் தெரியாதவர்கள். அதை பகிஷ்கரிக்க வேண்டும் என்று கேட்டார்கள். எந்த முகத்தோடு எங்கள் மக்கள் முன்னால் சென்று இந்தத் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு கோருவது? வடக்கு மாகாண சபை தேர்தலில் எங்களுக்கு கொடுத்த வாக்கு களை விட ஒரு சதவீதம் கூடுதலாக வாக்களித்து மஹிந்தவை அகற்றினீர்கள். அந்தளவு எங்கள் மக்களின் உள்ளக்கிடக்கையை சிறிதாவது அறிந்துகொள்ள முடியாதவர்கள் இன்றைக்கு மாற்றம் வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். தலைமைத்துவத்தில் மாற்றம் வேண்டும் [illegible] போகின்றார்கள். – என்றார்.(த–5)

## ரிஷாத்துக்கு வரவேற்பு

அம்பாறை, ஜூலை 28

அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்களுக்குத் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்கென முதல் தடவையாக வருகை தந்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு மக்கள் வரவேற்பளித்தனர்.

அவர் சென்ற இடமெல்லாம் உணர்ச்சிப் பிரவாகத்துடன் பொதுமக்கள் இளைஞர்கள், பெண்கள் திரண்டு வரவேற்பை அளித்தனர்.

கடந்த சனிக்கிழமை முதல் தடவையாக அம்பாறை மாவட்டத்துக்கு வருகை தந்த அமைச்சர் ரிஷாத் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமையும் அம்பாறை மாவட்டத்தில் தங்கியிருந்து தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் கலந்து கொண்டார்.

கடந்த சனிக்கிழமை சாய்ந்தமருதில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட செயலகத் திறப்புவிழாவில் கலந்து கொண்ட அமைச்சர் ரிஷாத் பதியுதீன் அங்கு ஊடகவியலாளர் மாநாடொன்றிலும் கலந்து கொண்டார்.

அதன் பின்னர் அன்றைய தினம் நிந்தவூர், பொத்துவில், மருதமுனை போன்ற பிரதேசங்களுக்கு பயணம் செய்து நிகழ்வுகளிலும் மக்கள் சந்திப்புக்களிலும் கலந்து கொண்ட அவர் சம்மாந்துறையில் நடைபெற்ற மாபெரும் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலும் கலந்து கொண்டார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை அட்டாளைச்சேனை, கல்முனை போன்ற பகுதிகளில் இடம் பெற்ற பிரமாண்டமான தேர்தல் பரப்புரைக் கூட்டங்களிலும் அமைச்சர் ரிஷாத் கலந்து கொண்டு உரையாற்றினார்.

சமூகத்தைப் பாதுகாப்பதற்காகவே அகில இலங்கை மக்கள் காங்கிரஸை ஸ்தாபித்ததாகவும் ஒரு சந்தர்ப்பத்தைந் தந்தால் முப்பது வருடங்களாக இழந்து தவிக்கும் பல விடயங்களுக்கு விடிவைப் பெற்றுத்தரப்பாடுபடுவோம் எனவும் கூறிய அமைச்சர் ரிஷாத், செய்து காட்டுவோம் அன்றேல் கட்சியைக் கலைத்து விடுவோம் எனவும் சூளுரைத்தார். (த–30)

## கட்சி தாவினார் மு.கா. உறுப்பினர்



மட்டக்களப்பு, ஜூலை, 28

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினரும், 2010ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்ட எம்.பி.எம். ஹுஸைன், அமீர் அலியுடன் இணைந்து கொண்டுள்ளார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தவிசாளரும், ஐக்கிய தேசிய கட்சியின் மட்டக்களப்பு மாவட்டத்தின் முதன்மை வேட்பாளருமாகிய எம்.எஸ்.எஸ்.அமீர் அலியின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக தானும் தனது ஆதரவாளர்களும் இணைந்து செயற்படவுள்ளதாக எம்.பி.எம். ஹுஸைன் தெரிவித்துள்ளதாக அமீர் அலியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கு முன்பு ஹுசைனுடைய மூத்த சகோதரரும், பொலன்னறுவை வீனஸ் தனியார் வைத்திய சாலையின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான எம்.பி.எம்.அஜ்வாத்தும், அமீர் அலியின் வெற்றிக்காகக் கைகோர்த்திருப்பதுவும் குறிப்பிடத்தக்க விடயமாகும். (த–10)

## சாய்ந்தமருதுக்குத் தனிச் சபை ரிசாத் பதியுதீனால் முடியுமா?

### கேட்கிறார் ஹரீஸ்

மட்டக்களப்பு, ஜூலை, 28

சாய்ந்தமருதுக்குத் தனியான உள்ளூராட்சி மன்றம் பெற்றுக் கொடுப்பேன் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சரு மான ரிசாத் பதியுதீன் அறிவிப்பாரா என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் கேள்வி எழுப்பினார்.

சாய்ந்தமருதில் இடம்பெற்ற சந்திப்பொன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சாய்ந்தமருதுக்கான தனி உள்ளூராட்சி மன்ற விடயம் தொடர்பாக அமைச்சர் ரிசாத் பதியுதீன் இதுவரை எங்காவது பேசியிருக்கின்றாரா? அல்லது இனிவரும் காலங்களிலாவது சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றத்தைப் பெற்றுத் தருவேன் என்று அறிவிப்பாரா? இது தொடர்பில் அவர் பேசுவார் என்று நான் நினைக்கவில்லை.

ஏனென்றால் சாய்ந்தமருதுக்கு அத்தனை துரோகங்களை இழைத்த வை.எல்.எஸ்.ஹமீடின் பலமான பிடியில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் இருந்துகொண்டிருக்கிறார். சாய்ந்தமருது மக்கள் மயில் சின்னத்துக்கு வழங்கும் வாக்குகளால் தேசியப்பட்டியல் மூலம் நாடாளு மன்றம் செல்லப்போவது இதே வை.எல்.எஸ்.ஹமீட் என்பதே உண்மை. முடியுமானால் ஒரு தேசியப் பட்டியல் கிடைத்தாலும் அதை மாகாண சபை உறுப்பினர் ஜெமீலுக்கு வழங்குவேன் என்று அமைச்சர் ரிசாத் பதியுத்தீனால் கூறமுடியுமா? எனக் கேள்வி எழுப்பினார்.

(த–10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னித் தேர்தல் தொகுதியில் 334 வாக்களிப்பு நிலையங்கள்

*பிரதித் தேர்தல் ஆணையாளர் ஏ.ஓ.எம். நபீல்*

வவுனியா, ஜூலை 28
வன்னி மாவட்டத் தேர்தல் தொகுதியில் எதிர்வரும் நாடாளு மன்றத் தேர்தலுக்காக 334 வாக்களிப்பு நிலையங்களை அமைக்கத்தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் ஏ.ஓ.எம். நபீல் தெரிவித்தார்.
தேர்தல் ஒழுங்கமைப்புகள் தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேட்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,
வவுனியாவில் ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து 705 வாக்காளர்களும், மன்னாரில் 79 ஆயிரத்து 433 வாக்காளர்களும், முல்லைத்தீவில் 63 ஆயிரத்து 920 வாக்காளர்களும் வாக்களிக்கவுள்ளனர்.
அவர்களுக்காக வவுனியாவில் 134 வாக்களிப்பு நிலையங்களும், மன்னாரில் 70 வாக்களிப்பு நிலையங்களும், முல்லைத்தீவில் 130 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.
இதேவேளை, இரண்டாயிரத்து 670 பேர் தபால் மூலமாக வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதுடன் வன்னி மாவட்டத் தேர்தல் தொகுதியில் 6 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 2 இலட்சத்து 53 ஆயிரத்து 58 பேர் வாக்களிக்கவுள்ளனர் – என்றார். (த)



*அமரர் தா.சிவசிதம்பரத்தின் நினைவுச் சிலை திறப்பு விழா வவுனியா வைரவப்புளியங்குளத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. உருவச் சிலையை ஜனாதிபதி சட்டத்தரணியும்,முன்னாள் மாவட்ட அபிவிருத்திச் சபைத்தலைவருமான மு.சிற்றம்பலம்திரை நீக்கம் செய்தார். இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த)*

## இந்து ஆராய்ச்சி மாநாட்டில் தருமபுர ஆதீன குரு முதல்வர்



யாழ்ப்பாணம், ஜூலை, 28
யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள அகில இலங்கை இந்து மாமன்றத்தின் இந்து ஆராய்ச்சி மாநாட்டில் இந்தியா தருமபுர ஆதீன குரு முதல்வர் ஸ்ரீமத் மௌன குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் கலந்துகொள்ளவுள்ளார்.
குறித்த மாநாடு எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.
குறித்த மாநாட்டில் ஸ்ரீமத் மௌன குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் சிறப்புரையாற்றுவார் என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொதுச் செயலாளர் முத்தையா கதிர்காமநாதன் தெரிவித்துள்ளார். (த–10)

# முன்னாள் தவிசாளரின் படத்தை வைப்பதில் தொடர்ந்து இழுபறி

*வலி.தென்மேற்குப் பிரதேச சபையில்*

வலி.தென்மேற்கு, ஜூலை 28
வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் அமரர் எஸ்.சிவகுமாரின் படத்தைத் தலைமைக் காரியாலயத்தில் வைப்பதற்குப் பிரதேச சபை எடுத்த முயற்சி இரண்டாவது தடவையும் தடைப்பட்டுள்ளது. ஆளும் கட்சி, எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் படம் வைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து இதற்கான தீர்மானம் தோல்வியில் முடிந்தது.
வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் தவிசாளராக வாக்குகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட அ.ஜெபநேசன் சக உறுப்பினர்கள் மத்தியில் ஏற்பட்ட ஒற்றுமையின்மை காரணமாக தவிசாளர் பதவியில் இருந்து விலகினார். அதைத் தொடர்ந்து உப தவிசாளராக இருந்த எஸ்.சிவகுமார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பரிந்துரையின் அடிப்படையில் உதவித்தேர்தல் ஆணையாளரினால் தவிசாளராக நியமிக்கப்பட்டார். சுமார் ஆறு மாதங்களுக்கு மேலாக கடமையாற்றி வந்த இவர் சுகயீனம் காரணமாக உயிரிழந்தார்.
இந்த நிலையில் தவிசாளராகக் கடமையாற்றிய இவருடைய படத்தைப் பிரதேச சபையின் தலைமைச் செயலகத்தில் வைப்பதற்கு எடுத்த முயற்சி, உறுப்பினர்கள் மத்தியில் ஏற்பட்ட எதிர்ப்புக் காரணமாகக் கைவிடப்பட்டது.
இதையடுத்துப் பிரதேச சபையின் ஆயுள்காலம் இந்த மாதத்துடன் முடிவடையும் நிலையில், இந்த மாதக் கூட்டத்தில் இவருடைய படத்தைக் காரியாலயத்தில் வைப்பதற்கு எடுத்த முயற்சி இரண்டாவது தடவையும் தோல்வியில் முடிந்தது. ஆளும் கட்சி, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சிலர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து நிகழ்ச்சி நிரலின்படி எடுக்கப்பட்ட இந்த விடயம் கைவிடப்பட்டது. (த–115)

## கலந்துரையாடல்

தென்மராட்சி,ஜூலை 28
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 5 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் அறிவித்துள்ளார். (த–9)

## சட்டவிரோத மின்சாரம் பெற்ற ஐவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 28
சட்டவிரோதமுறையில் மின்சாரத்தை பெற்றுக்கொண்ட குருநகர், யாழ்ப்பாணம், கோண்டாவில் மற்றும் திருநெல்வேலி பகுதிகளைச் சேர்ந்த பெண்ணொருவர் உட்பட அறுவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.
இவர்களில் நால்வர் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.
நேற்று இவர்களுடன் தொடர்புடைய வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. அவர்களில் ஐவர் குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டனர். அவர்களை தலா 12,000 ரூபா அபராதம் செலுத்துமாறும் இலங்கை மின்சார சபைக்கு இழப்பீடாக 4 இலட்சத்து 41 ஆயிரத்து 50 ரூபாவினை செலுத்துமாறும் நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார். ஒருவர் குற்றச்சாட்டை மறுத்ததனால் அவரை ஒரு இலட்சம் ரூபா காசுப் பிணையிலும் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான இரு ஆட்பிணையிலும் நீதிமன்றம் விடுவித்தது.(த–103)

# பொருத்தமற்ற இடத்தில் உறுப்பினர்களின் பெயர்

வலி.தென்மேற்கு, ஜூலை 28
வலி.தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கல் தலைமைச் செயலகத்தில் பொருத்தமற்ற இடத்தில் ஒதுக்குப் புறமாகப் பதிக்கப்பட்டுள்ளது.
இது குறித்து உறுப்பினர்கள் மட்டுமல்ல பொதுமக்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.
16 உறுப்பினர்களைக் கொண்ட மேற்படி பிரதேச சபையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பைச் சேர்ந்த 12 உறுப்பினர்களும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 4 உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்றனர்.
வசதியீனங்கள் மத்தியில் சிறிய கட்டடத்தில் இயங்கி வந்த வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் தலைமைக் காரியாலயம் மானிப்பாயில் பொதுமக்களின் நிதி உதவியுடன் வாங்கப்பட்ட காணியில் பல வசதிகளுடன் நவீனமான முறையில் சுமார் 400 லட்சம் ரூபா செலவில் தலைமைக் காரியாலயம் அமைக்கப்பட்டுத் தற்பொழுது இயங்கி வருகிறது.
மேற்படி கட்டடத்தில் உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் அடங்கிய கல்லை வைக்குமாறு பிரதேச சபை உறுப்பினர் ஆ.சி.கணேசவேல் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பல மாதங்களுக்குப் பின் இக்கல் தலைமைக் காரியாலயக் கட்டடத்தில் வைக்கப்பட்டுள்ளது.
மக்களின் பார்வைக்குத் தெரியாமல் பொருத்தமற்ற ஒதுக்குப் புறமான இடத்தில் மேற்படி கல் வைக்கப்பட்டுள்ளமை குறித்து உறுப்பினர்கள் மட்டுமல்ல பொதுமக்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.
இதேவேளை, மேற்படி தலைமைக் காரியாலயம் அமைப்பதற்கு முன்னின்று உழைத்த செயலாளராகக் கடமையாற்றிய திருமதி புஸ்பமலர் சிவலிங்கத்தின் பெயரும் பெயர்ப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (த–115)

# கூட்டமைப்பின் பரப்புரைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 27
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 6மணிக்குப் பொன்னாலை கலாசார மண்டப முன்றிலில் இடம்பெறவுள்ளது.
பொன்னாலை மாதர் சங்கத் தலைவி தவ ஆனந்தி தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெறும்.
இந்த பரப்புரைக் கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முதன்மை வேட்பாளருமான மாவை சோ.சேனாதிராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், ந.ஸ்ரீகாந்தா, சுரேஷ் பிரேமச்சந்திரன், த.சித்தார்த்தன், சி.சிறிதரன், ம.ஆ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த–ரி)

# இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

கரணவாய், ஜூலை 28
இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என கூறி கடற்படையினரால் பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 26 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
கடந்த மாதம் 21 ஆம் திகதி இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி தொழிலில் ஈடுபட்டனர் என கூறி 5 விசைப்படகுகளுடன் 26 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இவர்கள் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்படுத்தப்பட்டு தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.
இந்த நிலையில் நேற்றைய தினம் குறித்த மீனவர்கள் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் நீதிவான் கணேசராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான் சந்தேக நபர்களை எதிர்வரும் 10 திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (த–109)

# நீதிமன்ற அவமதிப்பு இளைஞருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 28
நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் வாகனத்தின் ஒலிப்பானை (ஹோர்ன்) ஒலிக்கச் செய்த [illegible] ஞருக்கு 3,000 ரூபா அபராதம் செலுத்துமாறு யாழ். நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.
காலைவேளை நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெற்றபோது முன்னால் உள்ள வீதியால் பயணம் [illegible] ராதம் விதிக்கப்பட்டது. (த–103)

## தேர்தல் அலுவலர்களுக்கு பயிற்சி வகுப்புகள்

தென்மராட்சி, ஜூலை 28
எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வாக்களிப்பு நிலையங்களில் பணியாற்றவுள்ள கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புகள் இன்று யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறுமென உதவித் தேர்தல்கள் ஆணையாளர் த.அகிலன் அறிவித்துள்ளார். (த–9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்கள், பெண்கள் பாதிப்பு தொடர்பில் உரிய நடவடிக்கை

## நல்லூர் உற்சவகாலக் கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 28
சிறுவர்களை வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல் குறித்தும், சிறுவர்கள், பெண்கள் தொடர்பான பாதிப்புக்கள் குறித்தும் நல்லூர் உற்சவகாலத்தில் நல்லூர்ப் பிரதேச செயலக உத்தியோத்தர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.
நல்லூர்க் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தின்போது தேவையான உதவிகளைப் பிரதேச செயலகம் வழங்கும் எனவும், மணல் எடுப்பது தொடர்பாக இயன்ற உதவிகளை வழங்க முயற்சிப்பதாகவும் நல்லூர்ப் பிரதேச செயலர் ஆ.சிறி தெரிவித்தார்.
எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தை ஒட்டி மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்த கூட்டம் யாழ். மாநகரசபை வளாகத்தில் யாழ். ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் தலைமையில் நடைபெற்றது.
இம்முறை உற்சவத்தில் கலந்து கொள்ளவரும் அடியார்கள் தமிழ்க் கலாசார முறைப்படி உடை அணிந்து வரவேண்டும் எனவும், அது பற்றிய அறிவித்தல்களுடன் படங்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளதாகவும், மக்கள் ஆலய சூழலில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து பத்திரிகைகளில் தகவல்கள் தரப்படும் எனவும், பொலிஸார் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அவர்களுக்குத் தெரியப்படுத்தப்படவுள்ளதாகவும் ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் குறிப்பிட்டார்.
கடந்த ஆண்டைப்போல இந்த முறையும் தனியான ஒரு மின் பிறப்பாக்கி பொருத்தப்பட்டு ஆலயச் சூழல்களுக்கும் வர்த்தக நிலையங்களுக்கும் மின்சார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.
பொது மக்கள் வழங்கிய கருத்துக்கள் குறித்தும் பரிசீலனை செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும், உற்சவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் குறித்து யாழ். மாநகர சபை உத்தியோகத்தருடன் கலந்துரையாடி முடிவெடுக்கப்படவுள்ளதாகவும் ஆணையாளர் குறிப்பிட்டார்.
திணைக்கள உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள் ஆலய நிர்வாகத்தினர்கள், தொண்டர்கள், பொதுமக்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர். (த-7)

# தனியார் துறையினர் வாக்களிக்க உரிய கால அவகாசம் வழங்குக

## தேர்தல்கள் ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28
எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கு தனியார் துறையினருக்கு தேவையான விடுமுறையை வழங்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார். தேர்தல் பற்றிய விசேட அறிக்கை மூலமாகத் தேர்தல்கள் ஆணையாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.
வாக்காளர் பணிபுரியும் இடத்திலிருந்து 40 கிலோமீற்றர் அல்லது அதற்கு குறைவான தூரத்தில் அவரது வாக்களிப்பு நிலையம் காணப்படுமாயின் அரைநாள் விடுமுறை வழங்கவேண்டும். 40 கிலோ மீற்றர் தொடக்கம் 100 கிலோ மீற்றர் வரையான தூரத்தில் வாக்களிப்பு நிலையம் காணப்படுமாயின் வாக்காளருக்கு ஒரு நாள் விடுமுறை வழங்கப்படவேண்டும்.
வாக்காளர் பணிபுரியும் இடத்திலிருந்து 100 கிலோமீற்றர் தொடக்கம் 150 கிலோமீற்றர் தூரத்தில் வாக்களிப்பு நிலையம் காணப்படுமாயின் ஒன்றரை நாள் விடுமுறையும் 150 கிலோமீற்றருக்கும் அதிகமான தூரத்தில் வாக்களிப்பு நிலையம் காணப்படுமாயின் இரண்டு நாள் விடுமுறையும் வழங்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, நாடளாவிய ரீதியிலுள்ள தனியார்துறை வாக்காளர்கள் தங்களின் வாக்குகளை பதிவு செய்வதற்கு மூன்று நாள் கால அவகாசம் தேவைப்படுமாயின் அதனை வழங்கவேண்டுமெனவும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரிய மேலும் தெரிவித்துள்ளார். (த-4)

# தேர்தலை வன்முறையின்றி நடத்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 28
நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற சகல அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் தேர்தலை வன் முறையற்றதாகவும், நேர்மையானதாகவும் நடத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மக்கள் அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது.
யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் அமைப்புக்களின் ஒன்றிய நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
மேலும், இந்தத் தேர்தலில் மக்கள் சரியான வேட்பாளர்களைத் தெரிவு செய்தல் தொடர்பில் விழிப்புணர்வுடன் இருத்தல் வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. (த-ரி)

# இரு பக்கமும் பற்றைகள் பயன்படுத்த முடியாத வீதி

தென்மராட்சி, ஜூலை 28
எழுதுமட்டுவாழ் – நாகர்கோவில் வீதியைப் பயன்படுத்த முடியாத அளவுக்கு இரு பக்கமும் பற்றைகள் வளர்ந்துள்ளன. இதனால் அந்த வீதியில் வாகனங்களில் செல்வோர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.
கடந்த 2011 ஆம் ஆண்டு மக்கள் மீளக் குடியமர்ந்த வேளையில் எவரும் செல்ல முடியாத அளவுக்கு இருபக்க பற்றைகளும் வீதியை மூடி மறைத்த நிலையில் காணப்பட்டன. இதனால் ஊர் மக்கள் ஒன்று திரண்டு சிரமதானம் மூலம் துப்பரவு செய்து நாகர் கோவிலுக்குச் செல்லும் மக்கள் குறித்த வீதியைப் பயன்படுத்தி வந்தனர்.
எழுதுமட்டுவாழ் சந்தியிலிருந்து வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதிகளுக்குச் செல்வதற்கான குறுகிய பாதை என்பதால் வாக னங்களில் செல்வோர் இந்த வீதியைப் பயன்படுத்தி வந்தனர்.
2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை அதியுயர் பாதுகாப்பு வலயமாக இப் பகுதி காணப்பட்ட வேளையில் கனரக வாகனங்களின் பாவனையினால் இந்த வீதி மிகவும் மோசமாக சேதமடைந்து காணப்படுகிறது. குண்டும் குழியுமாகக் காணப்படும் வீதியில் வாகனங்களில் செல்வோர் வீதியைப் பயன்படுத்தாமல் விட்டதால் மீண்டும் இரு பக்கமும் பற்றைகள் வளர்ந்து வாகனப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கின்றன.
சுமார் நான்கு கிலோ மீற்றர் நீளமான இந்த வீதியைத் திருத்தித் தருமாறு மக்கள் கோரி வருகின்ற போதிலும் இதுவரை திருத்தப்படாமல் உள்ளதாக மக்கள் தெரிவித்தனர். (த-9)

# யாழில் தேர்தல் வன்முறையை கண்காணிக்க அலுவலகங்கள்

யாழ். மாவட்டத்தில் இடம் பெறக் கூடிய தேர்தல் வன்முறைச் சம்பவங்களை கண்காணிக்கவென யாழ்மாவட்டத்தேர்தல்தெரிவத்தாட்சி அலுவலரினால் நான்கு பிரதேச செயலகங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட தேர்தல் வன்முறை கண்கானிப்பு அலுவலகங்கள் கடந்த வாரம் முதல் இயங்கத் தொடங்கியுள்ளன.
தீவகப் பகுதிக்கு வேலணை பிரதேச செயலகத்திலும், வலிகாமம் பகுதிக்குச் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிலும், வடமராட்சிப் பிரிவுக்குப் பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவிலும், தென்மராட்சிக்குச் சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவிலும், யாழ். மாவட்ட செயலகத்திலும் இந்த அலுவலகங்கள் இயங்குவதாக யாழ். மாவட்ட தெரிவு அத்தாட்சி அலுவலரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது வரை குறிப்பிட்ட அலுவலகங்களில் தேர்தல் வன்முறைகள் குறித்துப் பாரதூரமான முறைப்பாடுகள் எவையும் பதிவு செய்யப்படாத போதிலும் ஒரு சில முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை, வலி தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் கடமையாற்றும் அரச ஊழியர் ஒருவர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட பட்டதாரிகளின் பெயர்ப் பட்டியல்களை எடுத்து சென்று அவர்களை கட்சி அலுவலகம் ஒன்றுக்கு அழைத்துப் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதாகவும், அதே ஊழியர் அண்மையில் புத்தசாதன அமைச்சினால் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் குடிதண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள மக்களுக்கு வழங்கவென வழங்கப்பட்ட குடிதண்ணீர்ப் போத்தல்களை உயர் அதிகாரியின் ஆசியுடன் எடுத்துச் சென்று தேர்தல் [illegible] செய்து விநியோகித்ததாக [illegible] யிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-86)

# தீப் பொறியினால் வீடு முற்றாக எரிந்து நாசம்

## எழுதுமட்டுவாழ் தெற்கில் சம்பவம்

தென்மராட்சி, ஜூலை 28
வீட்டிலுள்ளோர் ஆலயத்திற்குச் சென்றிருந்த வேளையில் எங்கிருந்தோ வந்து வீழ்ந்த தீப்பொறியினால் வீடு முற்றாக எரிந்து சாம்பலாகியது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் எழுதுமட்டுவாழ் தெற்கில் இடம் பெற்றது.
நேற்றுமுன்தினம் அப் பகுதியில் உள்ள ஆலயத் திருவிழாவுக்காக அப் பகுதி மக்கள் சென்ற வேளையில் வீடு தீப்பற்றியதால் தீயை அணைக்க எவரும் இல்லாத நிலையில் வீடு முற்றாக எரிந்து போயுள்ளதாகவும், வீட்டுக்குள்ளிருந்த அனைத்து உடைமைகளும் எரிந்துள்ள தாகவும் கூறப்பட்டது.
இப்பகுதியைச் சேர்ந்த நல்லதம்பி என்பவரின் கொட்டில் வீடே எரிந்துள்ளது. 2011 ஆம் ஆண்டு மீளக் குடியமர்ந்த இந்தக் குடும்பம் நிரந்தர வீட்டுத் திட்டம் கிடைக்காததால் தற் காலிகக் கொட்டில் அமைத்து குடியிருப்பது குறிப்பிடத்தக்கது.
இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-9)

# தனிமையில் இருந்த தந்தை பராமரிப்பின்றி உயிரிழப்பு

## 5 ஆவது நாளே சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28
மகள் வெளிநாடு சென்றதால் வீட்டில் தனிமையில் வாழ்ந்து வந்த தந்தை கவனிப்பின்றி உயிரிழந்தார். அவ ரது சடலம் 5 நாள்களின் பின்னரே மீட்கப்பட்டது . மகள் அவருக்குத் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டபோதும் பதில் இல்லாதமையால் அயலவர்களுக்கு அறி வித்தார். அவர்கள் வீட்டுக்குச் சென்று பார்த்தபோதே உடல் சிதைந்த நிலையில் அவரது தந்தையார் சடலமாகக் கிடக்கக் காணப்பட்டார்.
இந்தச் சம்பவம் கட்டைப்பிராய் கல்வியங்காட்டில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த அம்பாயிரம் வீரமுத்து (வயது 68) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.
அவரது மகள் இங்கு ஆசிரியராக பணி புரிந்துள்ளார். திருமணம் செய்வதற்காக மகள் வெளிநாடு சென்ற நிலையில் அவர் தனிமையில் வசித்து வந்துள்ளார். அவரது மற்றைய மகள் தந்தையாருடன் கதைப்பதில்லை என்று கூறப்படுகின்றது.
தனிமையில் வசித்து வரும் அவர் கடையிலும் தனக்குத் தெரிந்த வீடு [illegible] வாழ்ந்து வந்துள்ளார்.
வெளிநாட்டில் இருக்கும் மகள் தந்தையாருடன் அடிக்கடி தொலைபேசியில் பேசி வந்துள்ளார். இந்நிலையிலேயே தந்தையாருக்கு மகள் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டபோது பதில் கிடைக்கவில்லை. அதனால் தனக்குத் தெரிந்த ஒருவருக்கு அழைப்பை ஏற்படுத்தி வீட்டுக்குச் சென்று பார்க்குமாறு கூறினார். அதன்படி குறித்த நபர் கல்வியங்காட்டிலுள்ள வீட்டுக்குச் சென்றுபார்த்தபோதே அந்தக் குடும்பஸ்தரின் உடல் சிதைந்து துர்நாற்றம் வீசிய நிலையில் காணப்பட்டது.
அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அங்கு சென்ற பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். கடும் துர்நாற்றம் வீசியதால் மருந்து விசிறியே சடலத்தை அங்கிருந்து பொலிஸாரால் அகற்ற முடிந்தது. அது பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. 5 நாள்களுக்கு முன்னர் அவர் உயிரிழந்திருக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.
வைத்தியசாலையில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-4)

# மலைப் பாம்பு அடித்துக் கொலை

தென்மராட்சி, ஜூலை 28
எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதி மக்களின் வாழ்வாதார நோக்கில் வளர்க்கப்பட்ட கால்நடைகளை விழுங்கி ஏப்பம் விட்ட மலைப் பாம்பு நேற்றுமுன்தினம் அடித்துக் கொல்லப்பட்டது.
12 வருடங்களின் பின்னர் மீளக் குடியமர்ந்த மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தவென வளர்த்த ஆடுகள், கோழிகள், போன்றவை மேய்ச்சலுக்காகச் செல்லும் வேளையில் அங்குள்ள பற்றைக்குள் மறைந்திருந்த மலைப்பாம்பு அவற்றைப் பிடித்த விழுங்கிவந்துள்ளது.
நேற்றுமுன்தினம் மேய்சலுக்கு விடப்பட்ட ஆட்டுக்குட்டி கத்துவதைக் கேட்ட ஆட்டின் சொந்தக்காரர் ஓடிச் சென்று பார்த்தபோது ஆட்டுக்குட்டியை பாம்பு விழுங்குவதைக்கண்டு அங்குள்ளவர்களுக்குத் தகவல் கொடுத்தார். அதனையடுத்து அங்கு சென்ற பலர் பாம்பை அடித்துக் கொன்றனர். அண்மைக் காலமாக கிராமத்திற்குள் வந்த ஐந்து மலைப்பாம்புகள் ஊர்மக்களால் அடித்துக் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# மந்துவில் மக்களுக்கு இலவச மருத்துவ பரிசோதனை

தென்மராட்சி, ஜூலை 28
சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் மந்துவில் பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாமொன்றை நேற்றுமுன்தினம் மந்துவில் றோ.க.த.க.வித்தியாலயத்தில் நடத்தினர்.
கழகத் தலைவர் லயன் பு.டினேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற மருத்துவ முகாமில் யாழ் போதனா மருத்தவமனை மருத்துவர்கள் கலந்து கொண்டு சிகிச்சைகளை வழங்கினர். அமரர் லயன் மருத்துவர் வே.தம் பித்துரை நினைவாக அவரது குடும்பத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட பரிசோதனை முகாமில் பிரதேசத்தைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.
இரத்த அமுக்கம், கண், நீரழிவு, பொது மருத்துவம் ஆகிய பரிசோதனைகள் நடத்தப்பட்டன. கண் பரிசோதனையில் பார்வையில் குறைபாடு காணப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 90 பேருக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** குடும்பத்தினரின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பிள்ளைகளின் செயல் கண்டு பெருமைப்படுவீர்கள். வாகனப் பயணத்தில் கவனம் தேவை.

**இடபம்:** தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். வெளியூர்ப் பயணம் செல்ல வாய்ப்புண்டு. மாணவர்கள், படிப்பில் அக்கறை செலுத்துவர்.

**மிதுனம்**: மனதில் இரக்க சிந்தனை அதிகரிக்கும். உறவினர்களுக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமித வளர்ச்சி ஏற்படும். வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவீர்கள். சவாலை வெல்ல முயல்வீர்கள்.

**கடகம்**: தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும். அதிக விலையுள்ள பொருள்களை, கவனத்துடன் பாதுகாக்கவும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமையைத் தேடித் தரும்.

**சிங்கம்**: செயலில் உற்சாகம் நிறைந்திருக்கும். இஷ்டதெய்வ வழிபாடு சிறக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை உருவாகும். வருமானம் கூடும். இல்லறத் துணை விரும்பியதை வாங்கித் தருவீர்கள்.

**கன்னி**: தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணவரவை விட நிர்வாகச் செலவு அதிகரிக்கும். மின்சார உபகரணங்களைக் கவனத்துடன் கையாளவும். உறவினர் ஆதரவைப் பெறுவீர்கள்.

**துலாம்**: திறமையுடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் கூடும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். பெண்கள் ஆடை ஆபரணம் வாங்க யோகம் உண்டாகும்.

**விருச்சிகம்**: தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். ஆரோக்கியம் பலம் பெறும். இல்லறத்துணை விரும்பியதை வாங்கித் தருவீர்கள். பணியாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டு, பாராட்டுப் பெறுவர்.

**தனுசு**: எவருடனும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான பணவரவு கிடைக்கும். அதிக பயன்தராத பொருள்களை விலைக்கு வாங்க வேண்டாம். பிள்ளைகளின் செயல் கண்டு மகிழ்வீர்கள்.

**மகரம்**: தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். அதிக விலைமதிப்புள்ள பொருள்களைக், கவனமாகப் பயன்படுத்தவும். மாணவர்கள் நன்றாகப் படிப்பர்.

**கும்பம்**: மற்றவர்கள் உங்களை, வியப்புடன் பார்க்கும் சூழல் உருவாகும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தி தரும். புத்திரர் விரும்பியதை வாங்கித் தருவீர்கள். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும்.

**மீனம்**: மனதில் மகிழ்ச்சி பெருகும். பணியாளர்கள் சுதந்திர உணர்வுடன் செயற்படுவர். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி உண்டாகும். பிறருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள்.



# "மாரி"யால் மகிழ்ச்சியில் தனுஷ்

மாரி படத்துக்கு பலவகையான விமர்சனங்கள் கிடைத்தாலும், வர்த்தக ரீதியாக அந்தப் படம் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது. இதனால் மகிழ்ச்சியடைந்த படத்தின் கதாநாயகனும் தயாரிப்பாளர்களில் ஒருவருமான தனுஷ், மாரி குழுவினருக்கு தங்கச் சங்கிலிகளைப் பரிசளித்துள்ளார். 90 ஆம் ஆண்டுகளிலிருந்து தனது படங்களில் பணியாற்றும் கலைஞர்களுக்குத் தங்கச் சங்கிலி பரிசளிப்பதை வழக்கமாக வைத்துள்ளார் ரஜினிகாந்த். இப்போது அவரது மருமகன் தனுஷும் அதே வழியைப் பின்பற்ற ஆரம்பித்துள்ளார்.

அண்மையில் அவரது தயாரிப்பில் வெளியாகிப் பெரும் வெற்றியையும் ஏராளமான விருதுகளையும் குவித்த படம் காக்கா முட்டை. அந்தப் படத்தின் இயக்குநர், நடித்த இளம் சிறுவர்கள் உள்ளிட்டோருக்கு தங்கச் சங்கிலிகளை அணிவித்து மகிழ்ந்தார் தனுஷ். அடுத்து தனுஷ் தயாரித்து, நடித்து வெளியாகியுள்ள மாரி படக் குழுவினருக்கும் இதே போன்று தங்கச் சங்கிலிகளைப் பரிசளித்துள்ளார்.

இந்தப் படம் குறித்து பலவிதமான விமர்சனங்கள் வெளிவந்தாலும், படம் திங்கள், செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் நல்ல கூட்டத்துடன் ஓடுவதால் இலாபம் திருப்திகரமாகவே உள்ளது. இதனால் மகிழ்ந்து போன தனுஷ் படத்தில் தன்னுடன் நடித்த ரோபோ சங்கர், வினோத், விஜய் யேசுதாஸ், இயக்குநர் பாலாஜி மோகன், இசையமைப்பாளர் அனிருத் ஆகியோருக்கு தங்கச் சங்கிலிகளை அணி வித்துள்ளார்.

இந்த தங்கச் சங்கிலிகள் அணிவிக்கும் நிகழ்ச்சியின் போது உணர்ச்சிவசப்பட்ட விஜய் யேசுதாஸ், தனுஷின் காலில் விழ முயல, தனுஷ் தடுத்து வாழ்த்தினார். விஜய் யேசுதாஸ் நடிகரான முதல் படம் இது. இந்த ஒரே படத்தின் மூலம் அவர் பேசப்படக்கூடிய நடிகராகிவிட்டார். நிறைய வாய்ப்புகளும் வருகின்றனவாம்.

# எரிமலையில் இணைந்த ஜோடி

ஜோடியொன்று ஹவாயிலுள்ள எரிமலையொன்றின் உச்சியில் திருமண பந்தத்தில் இணைந்து புதுமை படைத்துள்ளது.

மைக் மற்றும் நிகொலி என்ற மேற்படி ஜோடி உலங்குவானூர்தி மூலம், 2 ஆயிரத்து 500 அடி உயரமான எரிமலை உச்சியைச் சென்றடைந்தனர். இந்தத் திருமணத்துக்கான அனுசரணையை ரி.சி.எல். நிறுவனத் தொலைக்காட்சி நிகழ்ச்சி வழங்கியிருந்தது.





# பாகுபலி சர்ச்சைக்கு முடிவு

பாகுபலி படத்தில் இடம்பெற்றுள்ள பகடை வசன சர்ச்சைக்கு, தமிழில் வசனம் எழுதிய கவிஞர் மதன் கார்க்கி, விளக்கம் அளித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட விளக்கத்தில், பாகுபலி திரைப்படத்தின் இறுதிக் காட்சி வசனத்தில் இடம்பெற்ற ஒரு வார்த்தை சிலரது மனதைப் புண்படுத்தியதாகவும், அதனால் சில வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்ததாகவும் ஊடகங்கள் வாயிலாக அறிந்தேன்.

என் தாயையும் தாய்நாட்டையும் எந்தப் பகடைக்குப் பிறந்தவனும் தொட முடியாது...

என்று வரும் வசனத்தில், பகடைக்குப் பிறந்தவன் என்ற வாக்கியத்தை தாயக்கட்டையால் ஆடப்படும் சூதாட்டத்தின் தோல்விக்குப் பிறந்தவன் என்ற பொருளில்தான் எழுதியிருந்தேன். அது ஒரு சமூகத்தின் பெயர் என்பதை நான் அறிந்திருக்கவில்லை. சாதிப் பிரிவுகள் வேண்டாம், அனைவரும் சமம் என்று இன்னொரு காட்சியில் பேசும் கதையின் நாயகன், எந்தச் சாதியையும் இழித்துப் பேச மாட்டான். இழிவு செய்வது எங்கள் நோக்கமில்லை. படை எடுத்து வருபவர்களை எந்த இனத்தைச் சார்ந்தவர்களாகவும் காட்ட வேண்டாம் என்ற நோக்கத்தில்தான் அவர்களுக்கு என்று புதிய ஒரு மொழியை உருவாக்கினோம். எவரது மனமும் புண்படக் கூடாது என்று கூடுதல் கவனம் எடுத்துக் கொண்டோம். ஒரு சமூகம் புண்படுவதற்குக் காரணமான அந்தச் சொல்லைப் படத்தில் இருந்து நீக்கிவிடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறோம். விரைவில் அந்தச் சொல் நீக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதில் யார் மனமேனும் புண்பட்டிருந்தால் எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன், என்று மதன்



# பொம்மைத் துப்பாக்கிகளுக்கும் தடை

ஆப்கானிஸ்தானில் பண்டிகைக் கொண்டாட்டங்களின் போது, சிறுவர் – சிறுமிகள் பொம்மைத் துப்பாக்கிகள் மூலம் இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் தோட்டாக்களால் ஒருவர் மீது ஒருவர் சுட்டு விளையாடுவது வழக்கம். ஆனால் இவ்வாறு விளையாடியபோது, 100 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்குக் கண்களில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. இது ஒரு வன்முறைச் சம்பவங்களைப் போன்று உருவெடுத்ததால், ஆப்கான் அரசு அதிரடி நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது. அதன்படி வன்முறையைத் தடுக்கும் வகையில், ஏ.கே.47 துப்பாக்கி சாயலில் உள்ள பொம்மைத் துப்பாக்கிகள் உள்ளிட்ட அனைத்து வகை யான பொம்மைத் துப்பாக்கிகளுக்கும் அந்த நாட்டில் தடை விதித் துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி வலயத்தின் ஏழிசை மாலை நிகழ்வு

தென்மராட்சி, ஜூலை 28

தென்மராட்சி கல்வி வலய இசையாசிரியர்கள் மாணவர்கள் இணைந்து வழங்கும் ஏழிசை மாலை–9 எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்

சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ.நடராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தனும், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வணிகபீட முகாமைத்துவ கற்கைகள் பிரிவு சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.ஸ்ரீதரனும் கௌரவ விருந்தினர்களாக ஓய்வுநிலை சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (சங்கீதம்) கா.பரமேஸ்வரன், சாவகச்சேரி விமலாஸ் இரும்பக உரிமையாளர் த.ஜெயந்தன் ஆகியோரும் கலந்து கொள்வர்

நிகழ்வில் தேவாரம், கிறிஸ்தவ கீதம், ஏழிசை மாலை கீதம் ஆகியவற்றைத் தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கிருபாசக்தி கருணாவின் இசைக் கச்சேரியும் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவி செ.அஜித்தாவின் தனியிசையும் மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலய இசை ஆசிரியை திருமதி றெஜினா கலையரசனின் 'இசையோசை'யும் சங்கீத வித்துவான் பொன். ஸ்ரீவாமதேவனின்' இயலும் இசையும் ' செயன்முறை விளக்கத் தொடரும், சாவ கச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களின் குழுப் பாடலும் இடம்பெறும்

நிகழ்வில் அணிசேர் இசைக் கலைஞர்களாக வயலின் கோப்பாய் அசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கா.குகபரன், மிருதங்கம் கலாவித்தகர் ரமணா ஆகியோரும் கலந்து கொள்வர். (த–9)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மொழித் தின விழா நாளை

வவுனியா தெற்கு வலயமட்ட தமிழ்மொழித்தின விழா நாளை புதன் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் திருமதி செ.அன்ரன் சோமராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.
இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக அருணா செல்லத்துரை கலந்துகொள்வார். (த-402)


ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

**3ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர் **செல்லையா நடராஜா**
(விக்கினேஸ்வரா நகை மாளிகை உரிமையாளர் - கரடிப்போக்கு, கிளிநொச்சி)

தோற்றம் 07.02.1929 மறைவு 28.07.2012

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் எம்மையெல்லாம்
வழிகாட்டி உயர் நிலைக்கு உயர்த்திய
எம் தெய்வமே ஐயா!
என்றும் உங்கள் நினைவுகளுடன்
ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

நாகலிங்க சுவாமி வீதி,
சங்கானை.
குடும்பத்தினர்.


## வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு சொந்தமானது செல்வநகர் மையவாடி

திருமலை, ஜூலை, 28
தோப்பூர் செல்வநகர் முஸ்லிம் மையவாடி, வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்துக்குச் சொந்தமானது என அறிவிக்கப்பட்டுள்ளது.
இதனையடுத்து குறித்த மையவாடியை அண்மித்த பிரதேசத்தில் இது தொடர்பான பெயர்ப் பலகையும் இடப்பட்டுள்ளது.
சேருவில பெரிய விகாரைக்குச் சொந்தமான 1,000 ஏக்கர் காணி தோப்பூர் செல்வநகர் பிரதேசத்திலுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளில் உள்ளதாகத் தெரிவித்து நில அளவைத் திணைக்களத்தினால் நில அளவை மேற்கொள்ளப்பட்டு எல்லைக் கல்லும் நடப்பட்டுள்ளது.
இந்த நிலையில் சம்பவ இடத்துக்கு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பயணம் மேற்கொண்ட சேருவில தொகுதியின் ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் அருண சிறிசேன மற்றும் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.எம்.மஹ்ரூப் ஆகியோர் சேருநுவர பிரதேச செயலாளரிடம் சுமுகமான முறையில் பேசி நில அளவையைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளனர்.
இந்த நிலையில் உறுதியுள்ள தோப்பூர் பிரதேச மக்களின் காணிகளை எவ்வாறு அத்துமீறி சேருவில விகாரைக்குச் சுவிகரிப்பது எனத் தெரிவித்து தோப்பூர் பிரதேச மக்கள் நிள அளவை அதிகாரிகளோடு முரண்பட்டனர். இதன்போது ஊர் முக்கியஸ்தர்களால் பிரச்சினை சுமுகமான நிலைக்குக் கொண்டு வரப் பட்டது. தோப்பூர் செல்வநகர் பிரதேசத்திலுள்ள நீணாக்கேணி, தில்லங்குழி, ஆலையக்குடா, மணியன்குளம் போன்ற இடங்களிலுள்ள காணிகளுக்கே நிள அளவைத் திணைக்களத்தினால் எல்லைக்கல் நடும் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.
இந்தப் பிரதேசத்திலுள்ள காணிச் சொந்தக்காரர்களுக்குப் பிரித்தானிய அரசினால் வழங்கப்பட்ட உறுதிகள் இருப்பதாகக் காணிச் சொந்தக்கார்கள் தெரிவிக்கின்றனர். நாட்டில் தற்போது நல்லாட்சி இடம்பெற்று வருகின்ற நிலையில் இந்தச் சம்பவம் பொதுமக்கள் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது.
இவ்வாறு தோப்பூர் நாவற்கேணி காட்டுப் பிரதேசத்தில் கடந்த 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளில் 298 ஏக்கர் காணி சேருவில விகாரைக்கு இருப்பதாக நில அளவை மேற்கொள்ளப்பட்டு பின்னர் தற்காலிகமாக காணி அளவை வேலைகள் இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
(த-10)

## சாந்தசீலன் கதிர்காமர் காலமானார்



கொழும்பு, ஜூலை 28
இலங்கையின் மூத்த புத்திஜீவிகளில் ஒருவரான சாந்தசீலன் கதிர்காமர் கடந்த சனிக்கிழமை தனது 81ஆவது வயதில் தெஹிவளையில் காலமானார்.
இவர் வணக்கத்துக்குரிய ஜே.டபிள்யூ. ஏ. கதிர்காமர் மற்றும் திருமதி கதிர்காமர் ஆகியோரின் மகனாக சாவகச்சேரியிலே பிறந்தார். இரண்டாம் உலக மகா யுத்தம் நடைபெற்ற காலத்திலே சீலன் மலேசியாவிலே வாழ்ந்தார். தனது பாடசாலைக் கல்வியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலே பயின்ற சீலன், யாழ்ப்பாணக் கல்லூரியில் இருந்து பேராதனைப் பல் கலைக் கழகத்துக்குத் தெரிவானார். பேராதனைப் பல்கலைக் கழகத்திலே அவர் வரலாற்றுத்துறையிலே கல்வி பயின்றார். இந்தக் காலப் பகுதியில் பேராதனைப் பல்கலைக் கழகத்திலே லங்கா சமசமாஜக் கட்சியின் ஆதரவாளராக ஆரம்பித்த சீலனின் இடதுசாரி இயக்கத்துடனான ஈடுபாடு, அவர் காலமாகும் வரைக்கும் தொடர்ந்தது. பேராதனைப் பல்கலைக்கழகத்திலே கல்வியை முடித்துக் கொண்ட சீலன் தான் கல்வி கற்ற யாழ்ப்பாணக் கல்லூரியின் ஒரு பகுதியாக இயங்கிய பட்டதாரிப் பிரிவிலே இணைந்து வரலாற்றுப் பாடத்தைப் போதித்தார்.
மனித உரிமைகளைக் கண்காணிப்பதிலும், மனித உரிமைகள் தொடர்பான பரப்புரைகளிலும் சீலன் கதிர்காமரின் ஈடுபாடு அதிகரித்துக் கொண்ட அதே வேளை, வடபகுதி மேலும் இராணுவ மயமாகி வந்த சூழலில், சீலனும் அவரது குடும்பத்தினரும் 1983ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையை விட்டு வெளியேறி நாடு கடந்து வாழும் நிலை ஏற்பட்டது. 17 வருடங்களின் பின்னர் அவர் 2000ஆம் ஆண்டிலே இலங்கைக்கு மீளவும் திரும்பினார். தான் இளைப்பாறி வாழ்ந்து கொண்டிருந்த வேளை யிலும், கடந்த சில காலங்களாகத் தமிழ்ச் சமூகத்தினுள்ளே குறுகிச் சென்று கொண்டிருக்கும் முற்போக்கான புத்திஜீவிகளின் குழுவில், சீலன் துடிப்பாகச் செயற்பட்டு கலந்துரையாடல்களை தொடர்ந்து கொண்டிருந்தார். வடபகுதியில் சமூக செயற்பாடுகளிலே தான் ஈடுபட்டதன் மூலம் பெற்றுக்கொண்ட அனுபவங்களை இளைஞர்கள் மத்தியிலே சீலன் அடிக்கடி பகிர்ந்து கொண்டார். இனங்களுக்கிடையிலான சமாதானம் மற்றும் நீதி என்பவற்றை ஏற்படுத்துவதற்காகப் பாடுபடும். சமயங்களை இணைத்து இலங்கையிலே செயற்படும் இயக்கத்திலே சீலன் கிறிஸ்தவத் திருச்சபையினுள்ளும், சர்வமதத் தளங்களிலும் பணியாற்றினார். (த)


**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**



திருமதி
**பொன்னம்மா சுப்பிரமணியம்**

பிறப்பு 15.05.1927
இறப்பு 28.06.2015

கடந்த 28.06.2015 இறைபதமடைந்த திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (28.07.2015) செவ்வாய்க் கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளதால் இந் நிகழ்வில் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மணிமஹால்,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.
குடும்பத்தினர்:
021 223 1141


## தாவடி இந்து பாடசாலையின் 140 ஆவது ஆண்டு விழா

தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் 140 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வும், தாவடி இந்து நூல் வெளியீடும் எதிர்வரும் முதலாம் திகதியும் இரண்டாம் திகதியும் நடைபெறவுள்ளதாக பாடசாலை சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.
பாடசாலையின் பரமு வைத்தியர் அரங்கில் நடைபெறும் இந்த நிகழ்வுகளுக்குப் பாடசாலை அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமை தாங்குவார். காலை 9 மணிக்கு நடைபெறும் முதல்நாள் நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி, கலாசார பண்பாட்டு, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜாவும் கலந்து கொள்வர். தாவடி இந்து மலரை யாழ். பல்கலைக் கழக முகாமைத்துவ கற்கை நெறிகள் பேராசிரியர் க.தேவராசா வெளியிட்டு வைப்பார். நூலுக்கான மதிப்பீட்டுரையை பாடசாலை ஆசிரியர் தி.சசீதரன் நிகழ்த்த வுள்ளார். இரண்டாம் நாள் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி பொ.ஆறுமுகராசாவும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-ரி)


**அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்**



**பொன்னம்மா மயில்வாகனம்**

தோற்றம் 16.03.1930
மறைவு 28.06.2015

கடந்த 28.06.2015 சிவபதமடைந்த எங்கள் குலவிளக்கு அமரர் பொன்னம்மா மயில்வாகனம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.07.2015) செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து சபிண்டீகரண நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பத்தினர் சகிதம் பங்கு கொண்டு மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
28.06.2015 அன்று அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் வழங்கிய மற்றும் சகலவழிகளிலும் உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் குடும்பத்தின் சார்பில நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தர்சந்தறை,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.
குடும்பத்தினர்.



**ஆண்டவன் அரவணைப்பில் ஆண்டுகள் ஆறு**

செல்வி
**அமலின் குயிலினி மங்களதாஸ்**



துளிராய் 1986.04.05
விதையாய் 2009.07.29

ஆசை மகளே நீ ஆனந்தமாய் சென்றாயோ!
ஆண்டவன் அரவணைப்பில் நிம்மதியாய்
நீ உறங்க.....
ஆனால் நாம் உன் பிரிவு தாங்காமல்
நித்தம் ஏங்கித் தவிக்கின்றோம்...
ஆண்டுகள் உருண்டு ஆறு ஆனதம்மா
ஆனாலும் எமக்கு நீ நடந்த பாதை
கண்முன்னே தோன்றுதடி...
ஆறுதில்லை குயிலி உம் பிரிவு எமக்கு
உன் முகம் நிழலாட......
ஆறு ஆண்டுகளாய் வாழ்கின்றோம்.

ஆண்டவன் அரவணைப்பில் என்றும் மகிழ்ந்திருக்க வேண்டி றக்கா வீதியில் அமைந்துள்ள புனித திரேசாள் ஆலயத்தில் 29.07.2015 புதன்கிழமை காலை 6.15 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இ.மங்களதாஸ்
[illegible]
077 308 8506
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன் விழா

சித்தன்கேணி பாலர்பாடசாலை முதன்மை ஆசிரியை செல்வி லீலாவதி மாரிமுத்துவின் 50 ஆவது ஆண்டு பொன்விழா எதிர்வரும் முதலாம் ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

பாடசாலை முகாமைத்துவக் குழுத் தலைவர் ஸ்ரீ. ஸ்ரீமதி உமாபதிசர்மா வாசுகி தம்பதியினர் தலைமையில் சித்தன்கேணி மகா கணபதிப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்த விழாவுக்கு வீதி அபிவிருத்தி திணைக்கள வடமாகாண பிரதி பணிப்பாளர் பூலோகசிங்கம் சிவனேசன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

அன்றைய தினம் செல்வி லீலாவதி தொடர்பானஆவண நூல் வெளியீட்டு விழாவும் இடம்பெறும்.

(த-50)

## தவறி விழுந்ததால் குடும்பஸ்தர் காயம்

அளவெட்டி, ஜூலை 28

குடும்பஸ்தர் ஒருவர் கடந்த 25ஆம் திகதி நண்பகல் வேளை வளவில் நின்ற புளிய மரத்தில் ஏறிக்கிளைகளைத் தறித்த போது கொப்புடன் தவறிக் கீழே விழுந்ததால் கை, கால் முறிந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

கொல்லங்கலட்டி,கல்லுப்பிடிங்கி என்ற இடத்தில் வசிக்கும் இராமநாதன் நகுலேஸ்வரன் (வயது-42) என்பவரே தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

(த-36)


பாராளுமன்றத் தேர்தல் - 2015

யாழ். மாவட்டம்



விஸ்வலிங்கம் மணிவண்ணன் LL.B.
சட்டத்தரணி

8

10

செல்வராசா கஜேந்திரன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

X

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



4

சுரேஷ் க.பிறேமச்சந்திரன்

X 4

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற
ஆக்கிரமிப்புக்களை அகற்ற
இழந்த வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க
வீட்டுச் சின்னத்திற்கும் இலக்கம்
4 இற்கும் வாக்களியுங்கள்




# அனலைதீவு - நயினாகுளம் கூழாவடியுறை அருள்மிகு பூர்ணாதேவி புஸ்கலாதேவி சமேத ஹரிஹர புத்திரர் ஆலய வருடாந்த மஹோற்சவ பெருந்திருவிழா சிறப்பிதழ் - 2015

**கொடியேற்றம்**
**22.07.2015**

அத்த குருந்துரு மைந்தர்க்கு அரிகர
புத்தி ரன்னெனும் நாமம் புனைந்து பின்
ஒத்த பான்மை உருத்திரர் தம்மொடும்
வைத்து மிக்க வரம் பல நல்கியே

**தேர்த்திருவிழா**
**30.07.2015**

## விழாக்கால நிகழ்வுகள்

29.07.2015 புதன் 8ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம், சந்தன அலங்காரம், மாலை சப்பைரத உற்சவம் (சப்பறத்திருவிழா)

30.07.2015 வியாழன் 9ஆம் திருவிழா பகல் தேர்த்திருவிழா முற்பகல் 10.00 மணிக்கு இரத ஆரோகணம், வீதியுலா,பச்சை சாத்துதல் மஹா அபிஷேகம், (108 சங்காபிஷேகம்) பஞ்சமுக அர்ச்சனை

31.07.2015 வெள்ளி 10 ஆம் திருவிழா தீர்த்தத்திருவிழா முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும், யாக கும்ப அபிஷேகமும் நடைபெறும்,மாலை துவஜா அவரோகணம் (கொடியிறக்கம்) சண்டேஸ்வரர் உற்சவம்,ஆச்சாரியார் உற்சவம் நடைபெறும்.

01.08.2015 சனி 11 ஆம் திருவிழா பகல் 1008 சங்காபிஷேகம் மாலை திருக்கல்யாண உற்சவம்

02.08.2015 ஞாயிறு மாலை வைரவர் பொங்கல்

அடியார்கள் யாவரும் தங்களால் இயன்ற வகையில் பால், தயிர், இளநீர் போன்ற அபிஷேகப் பொருள்களையும் பூக்கள் போன்றவற்றையும் ஆலயத்தில் கொடுத்து திருவிழா சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

11 தினங்களும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.
நிதியுதவி வழங்க விரும்புவோர் ஆலய பரிபாலன சபையினருடன் தொடர்புகொள்ளவும்.

அனைவரும் வருக! ஐயன் அருள் பெறுக!!!
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

அனலைதீவு-05

பரிபாலன சபையினர்,
ஐயனார் ஆலயம்.

குறிப்பு: அடியார்களுக்கான விசேட பஸ் சேவை நடைபெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## KVS கவிஷா விஷ்மி சப்ளையர்

**சிவப்பு கிறவல் - தரம் 1**

**மண்**

**கல் : 6x9,3x3,1x1½**

A,B,C

**தொடர்பு :**

077 625 8995

077 174 8995

**தொடர்பாளர் : அனுர**



## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அறிவித்தல்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 125ஆவது ஆண்டு நிறைவையிட்டு இந்துக் கல்லூரி மாணவர் முதல்வர் சபையினால் "The Leader" சஞ்சிகையும், கல்லூரியின் 125ஆவது ஆண்டு விழா மலரையும் வெளியிட இருக்கின்றோம். அதற்காக தங்களிடமுள்ள பாடசாலை சம்பந்தப்பட்ட ஆவணங்களையும், மாணவ முதல்வர்கள் சம்பந்தமான ஆவணங்களையும், அதிபரிடமோ அன்றி பிரதி அதிபரும் மாணவர் முதல்வர் சபை பொறுப்பாசிரியருமான சதா நிமலன் அவர்களிடம் நேரடியாகவோ அல்லது principal@jhc.lk, jhcprefects@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிகளுக்கோ 10.08.2015 இற்கு முன்னர் அனுப்பி உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தொடர்பு - 078 301 7454 (ச.நிமலன்),
075 765 2738 (ஆ.வேதாகுலன்)

அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.



## யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி
### பழைய மாணவர் சங்கம்ஆண்டுப் பொதுக்கூட்ட அழைப்பு

யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பழையமாணவர் சங்கஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 31.07.2015 (வெள்ளிக்கிழமை) மு.ப 11.00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறும். பழைய மாணவராகிய உங்களையும் கலந்து கொண்டு கல்லூரியின் வளர்ச்சியில் பங்காற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்ந்து நடைபெறும் மதிய போசன விருந்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்
(க.சியந்தன்) (18168)(3.9.7)



## தேவை

ஜெயந்திநகர், கிளிநொச்சி என்னும் முகவரியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் கீழ்க்காணும் பணிக்கு ஆள்கள் தேவைப்படுகின்றனர்.

**சமையலாளர் - ஆண்**

* இல்ல நடைமுறைகளுக்கு அமைவாக இல்லத்தில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய நல்ல தேகாரோக்கிய முடையவராக இருத்தல் வேண்டும் .
* குடும்பப் பொறுப்பற்ற தனியாள்கள் விரும்பத்தக்கது.
* சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
* விண்ணப்பதாரிகள் 02.08.2015 இற்கு முன்னர் நேரில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தொடர்பு : தி.இராசநாயகம், தலைவர்,
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி

T.P: 077 060 4950
021 492 3118



## வேலையாள்கள் தேவை

கோழிகள் பராமரித்தல், ஆடு, மாடுகள் பராமரித்தல், தோட்டங்களில் வேலை செய்வதற்கு வேலையாள்கள் தேவை. மூன்று வேளை உணவு தங்குமிட வசதிகளுடன் நியாயமான சம்பளம் வழங்கப்படும்.

ATS. கால்நடை விவசாய பண்ணை, கீரிமலை வீதி, பன்னாலை.

தொடர்பு : 0776341314, 0778995431, 075 043 4277



## கொள்வனவு செய்யப்படும்

தரமான பப்பாசிப்பழம், வாழைக் குலைகள், பழப்பாக்கு, குரக்கன், சாமை, தினை போன்ற உள்ளூர் உற்பத்திகள் கொள்வனவு செய்யப்படும்.

அ. தங்கராசா அன்சன்ஸ்
60, ஜும்மா பள்ளிவாசல் வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்பு : 077 899 5431, 075 043 4277



## வீடு, காணி விற்பனைக்கு

வட்டப்பாதி தம்பசிட்டியில் 2,¾ பரப்பு காணியில் சுற்றுமதிலுடன் சகல வசதியுடன் கூடிய வீடு ,காணி விற்பனைக்கு உண்டு.(2,¾)

தொடர்பு : 077 407 2305
076 833 0683

(63376) (3.5.6)



## கடைக் கட்டடத்துடன் காணி விற்பனைக்கு

இல. 210, பருத்தித்துறை வீதி
ஆனைப்பந்தி சந்திக்கு அருகில் .
இரு கடைக்கட்டடத்துடன் கூடிய 1 பரப்பு 15 குளி காணி விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.

தொடர்பு : 077 662 3657
077 169 5801, 0776082506



## காணிகள் விற்பனைக்கு உண்டு

01. சரவணை கிழக்கு சூனகுண்டான் குளத்தடியில் உள்ள திருத்தப்படாத தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.
02. மண்டைதீவில் முகப்பு வயல் கந்த சுவாமி கோயிலுக்கு அருகில் உள்ள தோட்டக்காணி (நில. பர. 5) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 927 0049



## சோதிடம்

ஜாதகம், கைரேகை, எண் விஞ்ஞானம், திருமணப்பொருத்தம், வீட்டுக்கு நிலையம் வகுத்தல் போன்றவற்றிற்கு நேரில் தொடர்பு கொள்ளவும்.

"சிவா சோதிடம்"
இல 100, அரசடி வீதி - கந்தர்மடம்,
யாழ்ப்பாணம் (யாழ்- இந்து மகளிர் கல்லூரியடி.)

T.P: 0778996281



## பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் சர்வதேச ரீதியில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் நிறுவனத்தின் பதவி வெற்றிடங்கள். பயிற்சியின் போது தகைமைக்கேற்ப கொடுப்பனவுகள் தீர்மானிக்கப்படும். பயிற்சியின் பின்னர் EPF, ETF உடன் 50 000 ரூபாவுக்கு மேல் பெறலாம். கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்பவர்களுக்கு தங்குமிடம் /உணவு வசதி செய்து கொடுக்கப்படும்.

தகைமை - G.C.E O/L, G.C.E A/L

அழைக்க 077 999 4807, 077 445 8134

Granton 225, 5 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.



## கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா கற்கைநெறி முழுநேரம் இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள் 2014/2015**

மேற்படி பரீட்சையானது எதிர்வரும் 24.08.2015ஆம் திகதி முதல் 04.09.2015 ஆம் திகதி வரை நடைபெறும்.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 27.07.2015ஆம் திகதி முதல் 05.08.2015ஆம் திகதி வரை கலைப்பீடாதிபதி அலுவலகத்தால் ஏற்றுக் கொள்ளப்படும்.விண்ணப்பங்களை கலைப்பீடாதிபதி அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சார்த்திகள் பரீட்சைக்கட்டணத்தினை பல்கலைக்கழக காசாளரிடமோ, யாழ்ப்பாணப் பல்லைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம். பற்றுச்சீட்டைப் பரீட்சை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

24.07.2015


# அனைத்து எம்.பிக்களுக்கும் பயிற்சியளிப்பதற்குத் திட்டம்

கொழும்பு, ஜூலை 28

பொதுத் தேர்தலில் தெரிவாகும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நாடாளுமன்றச் செயற்பாடுகள் குறித்த பயிற்சியொன்றை வழங்க இப்போது முதலே நாடாளுமன்றம் தயாராகி வருகிறது.

ஓகஸ்ட் 17 ஆம் திகதியன்று இடம்பெறும் பொதுத் தேர்தலில் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் உள்ளடங்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதும், உடனடியாகவே அவர்கள் அனைவரையும் வரவழைத்து பதிவு செய்யவுள்ளதாக நாடாளுமன்றச் செயலாளர் தம்மிக்க தசநாயக்க தெரிவித்துள்ளார்.

புதிய நாடாளுமன்றம் செப்ரெம்பர் முதலாம் திகதி கூடவுள்ளதாகவும், அதற்கு முன்னர் ஓகஸ்ட் 20ஆம் திகதியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களை வரவழைத்துப் பதிவை மேற்கொள்வதற்கு ஆயத்தங்களை மேற்கொண்டு வருவதாகவும் பிரதிப் பொதுச் செயலாளரான நீல் இத்தவெல தெரிவித்துள்ளார்.

செப்ரெம்பர் முதலாம் திகதி நாடாளுமன்ற் உறுப்பினர்கள் பதவிப் பிர மாணம் செய்து கொண்டதன் பின்னர், சில தினங்களுக்கு நாடாளுமன்றச் செயற்பாடுகள் பற்றிய பாடங்கள் நடத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றச் சம்பிரதாயங்கள், நிலையியல் கட்டளைகள், சபையில் உரையாற்றுதல் மற்றும் ஒழுக்க முறைகள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமைகள், நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு திணைக்களத்தினால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பாக நிறைவேற்றப்படும் சேவைகள், நாடாளுமன்ற நூலகம், ஆய்வுப் பிரிவைப் பயன் படுத்துதல், நாடாளுமன்ற செய்தி அறிக்கை (ஹன்சார்ட்) திணைக்களத்துடன் கரும மாற்றல் போன்ற செயற் பாடுகள் பற்றி குறிப்பாக புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவூட்டும் செயற்பாடுகள் இதன்போது மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-22)

# டைனமைட் பயன்படுத்தி பிடித்த மீன் வைத்திருந்ததற்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

டைனமைட் வெடிபொருள் பயன்படுத்திப் பிடிக்கப்பட்ட மீன்களைத் தம் வசம் வைத்திருந்த குற்றத்துக்காக 3 பேருக்கு மொத்தமாக ஒன்றரை லட்சம் ரூபா அபராதம் விதித்தது ஊர்காவற்துறை நீதிமன்று.

அல்லைப்பிட்டிக் கடலில் டைனமற் பயன்படுத்திக் குறித்த மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பிடித்து வைத்திருந்தபோதே அதே இடத்தைச் சேர்ந்த 3 பேரும் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு எதிராக யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினரால் ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டது.

நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டிருந்தது. விசாரணையின் போது குறித்த 3 பேரும் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டதை அடுத்து தலா 50 ஆயிரம் ரூபா வீதம் 3 பேருக்கும் ஒன்றரை லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (த-4)

# தலைக் கவசத்தால் தாக்குதல்; ஐவருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, ஜூலை 28

வீதியில் சென்றவரை மறித்து தலைக் கவசத்தினால் தாக்கி காயப்படுத்திய சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட ஒருவர் பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது அவரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

கொடிகாமம் அல்லாரை வடக்குப் பகுதியில் கடந்த 19ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்தவர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து பொலிஸார் ஒருவரைக் கைது செய்து கடந்த 21ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்தினர். குறித்த நபரை நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் நான்கு பேரைக் கைது செய்த பொலிஸார் நேற்று நீதிமன்றில் முற் படுத்தினர். குறித்த நால்வரையும் நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (த-9)


## பணிப் பெண்

வைத்திய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து வேலை செய்வதற்கு ஒரு பணிப்பெண் தேவை.

தொடர்பு : 071 103 5422



## விற்பனைக்கு

பழைய பனைமரங்கள், நிலை, யன்னல், கதவுகள்என்பன விற்பனைக்கு உள்ளன.

தொடர்பு: 077 899 5431
075 043 4277




## உடன் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் டிஜிற்றல் பிறிண்டிங் நிலையத்திற்கு டிஜிற்றல் பிறிண்ட் மெஷின் இயக்குப்வர் தேவை. ஆண் அல்லது பெண் தொடர்பு கொள்ளலாம். மற்றும் பெண் கணக்கு இலிகிதர் ஒருவரும் தேவை. தகுதி அனுபவத்திற்கேற்ப கவர்ச்சியான சம்பளமும் பிற சலுகைகளும் உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு - 077 186 6733


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உடல் பாகங்களை கண்காணிக்க கண்ணாடி



மைக்ரோசொப்ட் நிறுவனத்தோடு இணைந்துள்ள கேஸ் வெஸ்டர்ன் ரிசர்வ் பல்கலைக்கழகம் அண்மையில் ஒரு வீடியோவை வெளியிட்டுள்ளது.

மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் ஹோலோலென்ஸ் கண்ணாடியைப் பயன்படுத்தி மனித உடலின் அனைத்துப் பாகங்களையும் கண்காணிக்கலாம் என அந்த வீடியோவில் கூறப்பட்டுள்ளது

இதை அணிந்து கொண்டு எலும்பு மண்டலம், நரம்பு மண்டலம், தசைகள், இதயம், மூளை அனைத்தையும் தனித்தனியாகக் கவனிக்கலாம். பல கட்டச் சோதனைகளில் கண்டுபிடிக்கும் பிரச்சனைகளை இந்த கண்ணாடி அணிந்து கொண்டால் எளிதாகக் கண்டு பிடித்து விடலாம்.

# ருவிற்றர் தளத்தில் வோல்பேப்பர்கள் நீக்கம்

ருவிற்றர் தளத்தில் உள்ள வோல் பேப்பர் வசதி நீக்கப்பட்டுள்ளதாக ருவிற்றர் அறிவித்துள்ளது. இதுகுறித்த அதிகார பூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ருவிற்றர் பயனாளர்கள் தமக்குப் பிடித்தமான வோல்பேப்பரை ருவிற்றர் முகப்புப் பக்கத்தில் (Home Page) வைத்துக்கொள்ளும் வசதி இருந்தது.

ஆனால், தற்போது பின்புற வோல் பேப்பர்கள் முற்றிலுமாக நீக்கப்பட்டு, வெளிர் நீல நிறமாக மாற்றப்பட்டுள்ளது.

ருவிற்றர் தளம் தெளிவாகத் தோற்றமளிக்கவே இந்த மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# அடுப்புக்குள் கமரா

## புதிய செயலி கண்டுபிடிப்பு




மைக்ரோவேவ் ஒவனுக்குள் வைக்கப்பட்டுள்ள உணவுப் பொருட்களின் பதத்தைத் தெரிந்து கொள்வதற்காக இரண்டு பொறியாளர்கள் ஒரு புதிய செயலியை கண்டுபிடித்துள்ளனர்.

இதன் மூலம் மைக்ரோவேவ் ஒவனுக்குள் வைத்த பொருள்களின் நிலைமையை அடிக்கடி திறந்து பார்க்காமல் அறிந்து கொள்ள முடியும்.

இதற்காக உள்ளே ஒரு கமராவும் வைக்கப்பட்டுள்ளது.

இதை வடிவமைத்த இரண்டு பொறியாளர்களும் ஏற்கனவே அப்பிள் நிறுவனத்தில் பணிபுரிந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

5

ஈ.சரவணபவன்

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் - இலங்கைத் தமிழரசுக் கட்சி)



30 வருடகால

ஊடகப்பயணத்தில்

உரிமைக்குரலாக

ஓங்கி ஒலித்தவரை

மீண்டும்

பாராளுமன்றத்துக்கு

அனுப்பிடுவோம்

உதயன்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

Ilankai Tamil Arasu Kadchi

பாராளுமன்றத் தேர்தல் -2015 யாழ்.மாவட்டம்

கேப்பாபிலவு பறிக்கப்பட்டபோது போராடினோம்.

தமிழினப்படுகொலை என்று ஐ.நாவில் வாதாடினோம்.

தொடர்ந்தும் போராடுவோம், வாதாடுவோம்.

உங்கள் வாக்கு எமது கட்சிக்கே.



5

ஜெ.வீரசிங்கம் (வீரா)

எழுதுவினைஞர் - யாழ். பல்கலைக்கழகம்



1

அமிர்தலிங்கம் இராசகுமாரன்

B.A (Hons) Jaffna

M.A Linguistics, Kelaniya.

விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்.



ஆனந்தி சிவஞானசுந்தரம்

2



4

கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

L.L.B. LONDON, BARRISTER-AT-LAW

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கர்நாடகாவில் ஒரே நாளில் 10 விவசாயிகள் தற்கொலை

புதுடில்லி,ஜூலை 28



கர்நாடகாவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை ஒரே நாளில் 10 விவசாயிகள் கடன் தொல்லை காரணமாக தற்கொலை செய்த சம்பவம் அந்த மாநிலத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கர்நாடகாவில் கடன் தொல்லை காரணமாக கடந்த ஜூன் மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் நேற்று வரை 140 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்துள்ளனர். இரு தினங்களுக்கு முன்னர் 20 விவசாயிகளும், நேற்று முன்தினம் மட்டும் 10 விவசாயிகளும் மாநிலத்தின் பல்வேறுபகுதிகளில்தற்கொலை செய்துள்ளனர்.

இது அந்த மாநிலத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. விவசாயிகளின் தற்கொலையைத் தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனப் பல்வேறு கட்சிகள், சங்கங்கள் மத்திய, மாநில அரசுகளுக்குக் கோரிக்கை விடுத்துள்ளன. (ஐ)

# பாகிஸ்தானில் மழையால் 3 லட்சம் பேர் வீடிழப்பு



இஸ்லாமாபாத்,ஜூலை 28

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப்புற மாகாணமான ஹைபரில் கடந்த ஒருவார காலமாக கன மழை பெய்து வருகிறது.

அதனால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 3 லட்சம் பேர் வீடுகளை இழந்து தவித்து வருகின்றனர். இந்த மழையினால் உயிரிழந் தவர்களின் எண்ணிக்கை 46 ஆக உயர்ந்துள்ளது.

மேலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுசீரமைப்புப் பணிகளுக்காக 50 கோடி ரூபாய் (இந்திய) வழங்கப்படும் என அந்த நாட்டின் பிரதமர் அறிவித்துள்ளார். மேலும் வீடுகளை இழந்தவர்களுக்கு தலா 5 லட்சம் ரூபா வழங்கவும், விவசாயக் கடன் களைத் தள்ளுபடி செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ)

# இந்தியாவைத் தாக்குகிறது மன அழுத்த நோய் பாதிப்பு

புதுடில்லி,ஜூலை 28

மன அழுத்தம் மற்றும் பதற்றம் போன்றவைகள் பெரும்பாலும் மேலைநாடுகளிலேயே அதிகம் பரவியது.

ஆனால் உலகமயமாக்கலுக்குப் பின்னர் இந்தியாவிலும் மன அழுத்தத்தால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இது குறித்து மத்தியசுகாதாரத்துறை அமைச்சர் ஜே.பி. நாடாளுமன்ற கிழ் அவையில் அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

அதன்படி கடந்த 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 10 முதல் 20 மில்லியன் பேர் கடுமையான மனநோய்ப் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். 5 கோடி பேர் மனஅழுத்தம், பதற்றத்தால் பாதிகப்பட்டுள்ளனர். 2012 இல் மனநல பாதிப்பால் 7 ஆயிரத்து 769 பேரும், 2013 இல் 8 ஆயிரத்து 6 பேரும், 2014 இல் 7 ஆயிரத்து 104 பேரும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

மக்களின் மனநிலையை பாதுகாப்பதற்காக மாவட்டந்தோறும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மன அழுத்தத்திலிருந்து தப்பிப்பதற்காக போதை போன்ற தவறான பாதையைத் தெரிவு செய்வதாகவும், அதன் விளைவாகவே தற்கொலை, கொலை, பாலியல் குற்றங்கள் உள்ளிட்டவைகள் நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)



## ஏழைப் பெண்ணுக்கு வந்தது கோடி அதிர்ஷ்டம்

புதுடில்லி,ஜூலை 28

உத்தரப்பிரதேசத்தில் உள்ள "ஸ்டேட் பாங்க் அப் இந்தியா" வங்கிக் கிளையின் சிறு தவறொன்றால் பெண் ஒருவரின் சேமிப்புக் கணக்கில் 95 ஆயிரம் கோடி ரூபா (இந்திய) வரவு வைக்கப்பட்டுள்ளது.

கான்பூர் பகுதியில் வசிக்கும் ஊர்மிளா யாதவ் என்ற பெண், தனது வீட்டுக்கு அருகாமையில் உள்ள "ஸ்டேட் பாங்க் ஒப் இந்தியா" வங்கியின் கிளையில் சில மாதங்களுக்கு முன்னர் 2 ஆயிரம் ரூபாய் செலுத்தி சேமிப்புக் கணக்கொன்றைத் தொடங் கினார்.

இந்த நிலையில் அவரது கைபேசி எண்ணுக்கு வந்த குறுந்தகவலில் அவருடைய சேமிப்புக் கணக்கில் 95 ஆயிரத்து 71 கோடியே 16 லட்சத்து 98 ஆயிரத்து 647 ரூபா (இந்திய) பணம் வரவு வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த ஊர்மிளா இது தொடர்பாக சம்பந்தப்பட்ட வங்கிக் கிளைக்கு நேரில் சென்று விசாரித்துள்ளார்.

இது தொடர்பாகவிளக்கம்அளித்த வங்கி அதிகாரிகள், ஊர்மிளா கணக்குத் தொடங்கியபோது கட்டிய 2 ஆயிரம் ரூபாயையும் எடுத்து விட்டதால் அவரது கணக்கை மூடும் போது இந்தப் பிழை நேர்ந்து விட்டதாகத் தெரிவித்துள்ளனர். (ஐ)

## இந்திய இராணுவத்தில் பெண்களை அதிகரிக்க நடவடிக்கை

புதுடில்லி,ஜூலை 28

இந்திய இராணுவத்தில் பெண்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பாக மத்திய அரசு அடுத்த சில மாதங்களில் பல்வேறு முடிவுகளை மேற்கொள்ளும் என்று பாது காப்பு அமைச்சர் மனோகர் பாரிக்கர் தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் மாநில அரசு சார்பில், இராணுவத்தில் சேர விரும்பும் பெண்களுக்கான சிறப்புப் பயிற்சி மையம் மொகாலியில் நிறுவப்பட்டுள்ளது.

இராணுவத்தில் பெண்கள் பெருமளவில் சேரவேண்டும் என்பதே எமது விருப்பம். அதற்குத் தடையாக உள்ள அம்சங்கள் குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது. அந்த ஆய்வுக்குப் பின்னர் அடுத்த சில நாள்களில் அரசு உரிய முடிவுகள் எடுக்கும். ஆயுதப் படைகளில்பெண்களின் பங்கேற்பை அதிகரிக்க அரசு அனைத்து முயற்சிகளும் எடுக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# குடியிருப்புப் பகுதியில் விழுந்தது விமானம்

## ஜப்பானில் 3 பேர் சாவு

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் சிறியரக விமானம் ஒன்று குடியிருப்புப் பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளானதில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். ஜப்பானில் உள்ள சோபு விமானநிலையத்தில் இருந்து புறப்பட்ட அந்த விமானம் ஒரு சில நிமிடங்களிலேயே அருகே உள்ள குடியிருப்புப் பகுதியில் விழுந்து நொறுங்கியது. அதில் ஏற்பட்ட தீ அங்கிருந்த வீடுகள் மற்றும் வாகனங்களிலும் பரவியது. சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்புத் துறையினர் வீடுகள் மற்றும் விமானத்தில் பற்றிய தீயை உடனடியாக அணைத்தனர். இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த 2 பேரும் விமானம் விழுந்த வீட்டில் வசித்த பெண் ஒருவரும் உயிரிழந்தனர்.



விமானத்தில் பயணம் செய்தவர்கள் டோக்கியோவில் இருந்து 100 கி.மீ தொலைவில் உள்ள இஸு ஓஷிமா தீவுக்குச் சென்று அங்கு விமானம் ஓட்டும் பயிற்சி மேற்கொள்ள திட்டமிட்டிருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் விமானம் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. (ஐ)



## சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவுக்கு கட்டளை

புதுடில்லி,ஜூலை 28

சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோருக்கு கட்டளை அனுப்ப உச்ச நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டுள்ளது.

ஜெயலலிதா விடுதலையை எதிர்த்து கர்நாடகா அரசு மற்றும் தி.மு.க. சார்பில் அன்பழகன் ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தனர். இந்த மேல்முறையீட்டு மனுக்களை விசாரித்த நீதிவான்கள் ஜெயலலிதா உட்பட 4 பேருக்கு வழக்குக் கட்டளை அனுப்ப உத்தரவிட்டுள்ளனர். மேலும் தம்மையும் ஒரு தரப்பாகச் சேர்க்கக் கோரிய சுப்பிரமணிய சுவாமியின் மனுவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (ஐ)

# நைஜீரியாவில் குண்டு வெடிப்பு

## 14 பேர் உடல் சிதறிச் சாவு

கானோ, ஜூலை 28

நைஜீரியாவில் பரபரப்பாக இயங்கக்கூடிய சந்தை ஒன்றில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற பயங்கர மனித வெடிகுண்டுத் தாக்குதலில் 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

வடகிழக்கு நைஜீரியாவில் உள்ள [illegible] டமாடுரு நகரத்தின் சந்தை ஒன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதிகளவிலான பொது மக்கள் கூடியிருந்த தருணத்தில் [illegible] சாதாரணமாக வந்த பெண்ணொருவர், தான் வைத்திருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தார். அதில் 14 பேர் உடல் சிதறி உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் மனித வெடிகுண்டாக வந்தவர் மனநலம் பாதிக்கப்பட்ட பெண் என்பது தெரியவந்துள்ளது. [illegible] அந்தப் பகுதியில் மனநலம் பாதிப்புற்று திரிந்துள்ளார். அதனால் தீவிரவாதிகள் மனநலம் பாதித்த அந்தப் பெண்ணை மனித வெடிகுண்டாகப் பயன்படுத்தியிருப்பார்கள் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இதே நகரத்தில் கடந்த வாரம் மூன்று மனித வெடிகுண்டுத் தாக்குதல்கள் நடைபெற்றன. அதில் குறைந்தது 13 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரான்ஸின் சாம்ப்ளி–பசியர்சில் உள்ள விமானத் தளத்திலிருந்து, 433 இராட்சத பலூன்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வானில் செலுத்தப்பட்டன. அதிகளவு பலூன்களை வானில் பறக்க விடுவதில் இதுவே அதிகூடிய சாதனையாகும். இந்தப் பிரம்மாண்ட நிகழ்வில் 40 நாடுகளைச் சேர்ந்த பலூன் ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். இதற்கு முன்னர் அதே இடத்தில் வைத்து 391 பலூன்கள் பறக்க விடப்பட்டமையே பலூன்கள் பறக்க விடப்பட்ட வரலாற்றில் அதிக பட்ச சாதனையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 5 ஆம் தலைமுறை ஏவுகணை சீனச் சோதனைகள் வெற்றி

பிஜீங்,ஜூலை 28

இருநூறுக்கும் மேற்பட்ட ஏவுகணைகளை விண்ணில் ஏவியுள்ள சீனா தற்போது அதிநவீன ஐந்தாம் தலைமுறை லாங் மார்ச்–5 ஏவுகணையின் எரிசக்திச் சோதனையை வெற்றிகரமாக நடத்தியுள்ளது. இது தற்போதுள்ள இதே வகை ஏவுகணைகளை விட இரு மடங்கு அதிகமான நிறையைச் சுமந்து செல்லத்தக்கது.

முதன் முதலாக சீனா, 1970 இல் லாங் மார்ச்–1 என்ற ஏவுகணையைச் செலுத்தி டாங் பேங் ஆங்–1 என்ற செயற் கைக்கோளைப் புவியின் சுற்று வட்டப் பாதையில் நிறுத்தியது.

தற்போது சந்திரன் ஆய்வுத் திட்டத்தில், விண்வெளியில் சுற்றுவது, நிலவில் தரையிறங்குவது, பூமிக்குத் திரும்புவது ஆகிய மூன்று முக்கிய நிலைகள் மற்றும் விண்வெளியில் ஆய்வு கூடம் கட்டுதல்



ஆகிய பணிகளுக்கான இறுதி வடிவமாக, இந்தப் புதிய ஏவுகணையைச் சீனா உருவாக்கியுள்ளது. (ஐ)

# யேமனில் போர் நிறுத்தம்

### சவூதி கூட்டுப்படைத் தாக்குதலில் இரு நாள்களில் 120 பேர் சாவு

சனா, ஜூலை 28

யேமனில் சவூதிக் கூட்டுப்படைகளின் தொடர் தாக்குதல்களால் பொதுமக்களின் உயிரிழப்புக்கள் அதிகரித்துள்ளன. அதனால் அங்கு தொடர்ச்சியாக 5 நாள்கள் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.

யேமனில் நடைபெற்று வரும் போரில், கடந்த இரு நாள்களில் மட்டும் 120 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த மார்ச் மாதத்திலிருந்து சவூதிக் கூட்டுப்படைகள் தாக்குதல் நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தன. இந்தத் தாக்குதல்களில் அந்த நாட்டின் இராணுவத்தினரும், பொது மக்களும் உயிரிழப்புக்களைச் சந்தித்து வருகின்றனர்.

இதேவேளை – செங்கடல் நகரான தைஜ் நகரில், மின் உற்பத்தி நிலையம் ஒன்றின் இயக்குநர்கள், பணியாளர்கள் தங்கியுள்ள மோக்கா பகுதியில் சவூதிக் கூட்டுப்படைகள் கடந்த சனிக்கிழமை நடத்திய வான் தாக்குதல்களில் 55 பேர் உயிரிழந்தனர் என முதல் கட்டத் தகவல்கள் வெளியாகின.

கடந்த மார்ச் மாதத்திலிருந்து சவூதிக் கூட்டுப்படைகள் நடத்தி வந்த தாக்குதல்களில், இந்தத் தாக்குதல்கள் மிக கடுமையானவை எனத் தெரிய வந்துள்ளது. அங்கு கடந்த இரு நாள்களாக இடைவிடாது குண்டுமழை பொழிந்ததில் கட்டடங்கள் தரை மட்டமாகி விட்டதாகவும், 120 பேர் கொன்று குவிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அந்தப் பகுதி தீப்பிடித்து எரிந்ததில் குறிப்பாகக் குழந்தைகள், பெண்கள், வயதானவர்கள் உடல்கள் எரிந்து சாம்பலாகினர்.



சவூதிக் கூட்டுப்படைகளின் தாக்குதல்களை நேரில் கண்டவர்கள், "குண்டுகள் வெடித்ததின் அழுத்தத்தால் இறந்தவர்களின் உடல்கள் கிழித்தெறியப்பட்டு, உறுப்புகள் சிதறின. இறந்தவர்களின் உடல்கள் சேகரிக்கப்பட்டு, மொத்தமாக அடக்கம் செய்யப்பட்டன" எனத் தெரிவித்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 5 தினங்கள் சவூதிக் கூட்டுப்படைகள் போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்தியுள்ளன.

ஏற்கனவே கடந்த காலங்களிலும் அங்கு போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட போதும் கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்கள் நிறுத்தப்படவில்லை. தொடர்ந்தும் அங்கு சண்டை நடைபெற்று வந்தது. இந்த நிலையில் சவூதிக் கூட்டுப்படைகள் தாக்குதல்களை நிறுத்தியுள்ளதால் கிளர்ச்சியாளர்கள் யேமனின் சில முக்கிய நகரங்களைக் கைப்பற்றும் நோக்குடன் தாக்குதல்களை மேற்கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)



## சுற்றுலாப் பயணிகளுக்கு பிரிட்டன் எச்சரிக்கை

### ஐ.எஸ். தீவிரவாதிகள் தொடர் தாக்குதல்களால்

பாரிஸ்,ஜூலை 28

துருக்கி மற்றும் சிரியா பகுதிகளில் ஐ.எஸ். தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருவதால் அங்கு சுற்றுலாச் செல்லும் பிரிட்டன் பயணிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

துருக்கியில் சிரியா எல்லையில் உள்ள சுருக் நகரில் குர்தீஸ் பகுதியில் ஐ.எஸ். தீவிரவாதிகள் தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தியதில் 32 பேர் உயிரிழந்துள்ளனர். ஐ.எஸ்.தீவிரவாதிகள் மற்றும் குர்தீஸ் தீவிரவாதிகளாலும் தொடர்ந்து வன்முறைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதால், அதற்கு முடிவு கட்டும் விதமாக துருக்கி அதிரடி நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில் 2.5 மில்லியன் பிரிட்டன் வாசிகள் ஒவ்வொரு வருடமும் துருக்கிக்குச் சுற்றுலா செல்கின்றனர் என வெளிநாட்டுச் சுற்றுலாத்துறை தெரிவித்துள்ளது. துருக்கியில் நடைபெற்று வரும் தீவிரவாதத்தாக்குதல்களால் அங்கு சுற்றுலா செல்பவர்கள் சிரிய எல்லைப் பகுதிக்கு செல்ல வேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

# சோமாலியாவில் ஐ.எஸ். தாக்குதல்

### செய்தியாளர் உட்பட 12 பேர் உயிரிழந்துள்ளனர்

மோகடி, ஜூலை 28

சோமாலியாவில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றின் மீது ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் செய்தியாளர்கள் உட்பட 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

தலைநகர் மோகடிஷுவில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் நேற்று முன்தினம் கார் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

வெடி பொருள் நிரம்பிய காரைச் செலுத்தி வந்த தீவிரவாதி ஹோட்டலின் வெளிப்புறப் பகுதி மீது மோதி வெடிக்க செய்ததில் 12 பேர் உயிரிழந்துள்ளனர். அதில் ஒரு தொலைக்காட்சிச் செய்தியாளரும் உயிரிழந்துள்ளார். கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் வீதியோரமாக நடந்து சென்றவர்களும், வாகனங்களில் சென்றவர்களும் எனக் கூறப்படுகிறது. ஹோட்டல் மற்றும்



அருகே இருந்த குடியிருப்புக்களில் ஏற்பட்டுள்ள உயிரிழப்பு மற்றும்

சேதம் பற்றிய விவரங்கள் இ... மும் வெளியாகவில்லை.

இந்தத் தாக்குதலுக்கு சோமா... வில் செயற்படும் –பாப் தீவிர... இயக்கம் பொறுப்பேற்றுள்... இந்த தீவிரவாத இயக்கம் ஐ... அமைப்புடன் இணைந்து செய...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம்–அலெக்

# துண்டிக்கப்படும் உறவுகள்

சொர்க்கமே என்றாலும் அது நம் ஊரைப் போல வருமா?
எந் நாடு என்றாலும் அது நம் நாட்டுக்கு ஈடாகுமா?

என்ற பாடல் ஒவ்வொரு புலம்பெயர் உறவுகள் மனதிலும் எந்த நேரமும் ஒலித்தவண்ணம் இருக்கின்றது. உயிர் அச்சுறுத்தல்கள், பொருளாதார நெருக்கடி நிலைகள், மேற்படிப்புக்கள் போன்ற பல்வேறு தேவைகளின் நிமித்தம் தாய்நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு எம்மவர்கள் புலம்பெயர்ந்து செல்கின்றனர். ஆனால் பல்வேறு காரணங்களைக் காரணம் காட்டி அவர்கள் அந்த நாட்டவர்களாகவே மாறிக் கொண்டு வருவதும் தவிர்க்கப்பட முடியாததாகும். எண்பதுகளில் நடைபெற்ற ஈழப்போரினாலும், நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளினாலும் உயிர்ப் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக சட்டரீதியாகவும், சட்டத்துக்கு முரணான வகையிலும் சொல்ல முடியாத துன்பங்களை அனுபவித்து இடைத்தரகர்களின் உதவியால் இலங்கையை விட்டு வெளியேறிய பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் உலகின் பல்வேறு நாடுகளில் குடியேறினர். இவர்கள் புலம்பெயர் தமிழர்களின் முதலாம் சந்ததியினராகக் கருதப்படுகின்றனர்.



தற்போதைய நிலைமைகளைப் பொறுத்த வரையில், எம்மவர்கள் வெளிநாட்டவர்களுடன் இணைந்து சரிநிகராக வேலை செய்கின்ற போதும், ஏன் வெளிநாட்டவர்க்கு கட்டளையிடும் அளவுக்கு அங்கே தமது திறமைகளை அடையாளப் படுத்தியிருந்தாலும், அவர்களுடைய ஆரம்ப காலகட்டங்கள் விடியாத இரவுகளாகவே கழிந்திருக்கின்றன. புலம்பெயர் ஈழத்தமிழர்களுக்கு ஆரம்ப நாள்களில் உதவிக்கரம் நீட்டுவதற்கு எவரும் முன்வரவில்லை, பாதுகாப்பான தங்குமிடங்களை எவரும் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை, வேலை வாய்ப்பை வழங்குவதற்கு எந்த நிறுவனமும் முன்வரவில்லை, மொழிப்பிரச்சினைகூட அவர்களை விரட்டியபடியே இருந்தது. கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டது போன்ற உணர்வு அவர்களை வாட்டிக்கொண்டிருக்க, காலத்தைக் கழிக்க வேண்டிய நிலை இருப்பினும், தமது அயராத உழைப்பினாலும் தனித்துவமான திறமைகளினாலும் தம்மை அடையாளம் காட்டி படிப்படியாக வெளிநாட்டவர் மத்தியிலே மதிப்பையும் கௌரவத்தையும் பெற்று இன்று அவர்களின் அரசியலில்கூட தம்மை இணைத்துக் கொண்டுள்ளனர்.

அடுத்தபடியாக நிகழ்கால நிலைமையைப் பார்போம். அவர்கள் அங்கே தமது இருப்பை உறுதிப்படுத்திக் கொண்டு இருப்பினும் அவர்களுடைய வாழ்வு தங்கக்கூட்டில் அடைக்கப்பட்ட கிளி போல் உள்ளது. கடும்குளிருக்கு மத்தியிலும் இயந்திரமயமானதொரு வாழ்க்கையை வாழவேண்டிய கட்டாயத்துக் குள் அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். ஈழத்திலே இருக்கும் உறவுகளுக்கும் தம்மாலான உதவிகளைச் செய்த வண்ணமே இருகின்றனர். இருப்பினும் இங்கே அந்த உதவிகளைப் பெறும் அனைவரும் அதைப் பயனுள்ள விதத்தில் பயன்படுத்துகின்றார்களா என்பது கேள்விக்குறியே?



அவர்கள் சுறுசுறுப்பாக இரவு பகல் வேலை செய்து அனுப்பும் பணம் எங்களில் சிலரை சோம்பேறிகளாக மாற்றிவிட்டுள்ளது. அநாவசியமான ஆடம்பர வாழ்க்கையில் மூழ்க வைக்கின்றது என்பது கண்கூடு.

அதுமட்டும் அன்றி அவர்களுடைய மனதை நெருடியபடி இருக்கும் இன்னுமொரு விடயம் அவர்களது பெற்றோர்களைப் பிரிந்து இருப்பது. புலம்பெயர்ந்து வெளி நாடுகளில் வாழ்ந்து வரும் காலங்களில் தம் வம்சத்தை விருத்தி செய்ததனாலும் அவர்களுடைய பிள்ளைகள் அந்த நாட்டில் பிறந்து வெளி நாட்டவரின் கலாசாரத்துக்குப் பழகியமையாலும் அவர்கள் மீண்டும் தாய் நாட்டுக்குக் குடிபெயர்ந்து வருவது என்பது சாத்தியப்படாத ஒன்றாகும். இருப்பினும், இவர்களுடைய பெற்றோரை அவர்கள்அங்கே அழைத்துத் தம்முடன் வைத்திருப்பதற்கு ஈடுபாடு கொண்டிருப்பினும் பெற்றோர்களினுடைய முதுமை இதற்கான சாத்தியப்பாட்டைக் குறைக்கின்றது. ஆகவே பெற்றோர்களைத் தமக்குத் தெரிந்தவர்களின் உதவியினூடாகவோ அல்லது முதியோர் இல்லங்களில் சேர்ப்பதன் மூலமாகவோ பாதுகாப்பதற்கு முயற்சிக்கின்றனர். இருப்பினும் தாமே அவர்களுக்கு நேரடியாக செய்யவேண்டிய பணிவிடைகளைச் செய்ய முடியாமல் போவது அவர்களுக்கு வருத்தத்தை அளிப்பதோடு அவர்களுடைய பெற்றோர்களுக்கும் இங்கே அநாதரவாகி விட்டோம் என்ற கவலையை ஏற்படுத்துகின்றதாக இருக்கும். ஆனாலும் புலம் பெயர்ந்த போதும் தாம் அனுபவித்த துன்பங்களை அவர்கள் மறக்கவில்லை. இதற்குத் தீர்வு கிடைப்பதற்காக அஹிம்சை சார்நடவடிக்கை களில் ஈடுபட்ட வண்ணமே உள்ளனர். ஈழப்போராட்டத்தை உலகறியச் செய்ததில் புலம்பெயர் ஈழத்தமிழர்களின் பங்கு அளப்பரியது. உலக வரைபடத்தில் ஒரு புள்ளிபோல் தோற்றமளிக்கும் இலங்கையை உலக அரசியலின் பார்வைக்குட்படுத்தியது புலம்பெயர் ஈழத்தமிழர்களினால் செய்யப்பட்ட நடவடிக்கைகளே ஆகும். அது மாத்திரமன்றி எமது தமிழைக்காக்க, பண்பாட்டைக் காக்க, கலாசாரத்தை காக்க, அவர்கள் அங்கே பல சங்கங்கள், கல்விக் கூடங்கள் நிறுவனங்களை உருவாக்கி அவற்றை உரிய முறையிலே நிர்வகித்தும் வருகின்றமை போற்றப்பட வேண்டிய விடயமா கும்.

இருப்பினும் புலம்பெயர் ஈழத்தமிழர்களின் இரண்டாம் சந்ததியினரைப் பொறுத்தவரையில் அவர்கள் ஈழத்தை அடியாகக் கொண்ட போதும் அவர்களுடைய பிறப்பிடம் வெளிநாடாகவே இருக்கின்றது. அவர்களுக்கும் ஈழத்திற்குமான தொடர்பு நேரடியாகக் காணப்படாத போதும், அவர்களினுடைய பெற்றோர்களின் மூலமாக இது பூரணப்படுத்தப்படுகிறது. இருப்பினும் இனிவரும் காலங்களில் இது தொடருமா என்பது சந்தேகமே. அவர்கள் எமது கலாசாரத்தை அங்கே நடைபெறும் எம்மவர் சார்ந்த நிகழ்வுகளில் வெளிக்காட்டிய போதும் அவர்களுடைய தொழில் சார் நடவடிக்கைகளுக்கும், கல்வி நடவடிக்கைகளுக்கும் எம்மவரின் இந்த நிலமையில் அவர்கள் தாம் வாழும் நாட்டுக்குப் பொருத்தமான கலாசாரத்தையே தேர்ந் தெடுக்க விரும்புவார்கள். அதுமாத்திரமன்றி ஈழத்தின் இளம் தலைமுறையினருக்கும் புலம்பெயர் இளம் தலைமுறையினருக்குமான கருத்துப் பரிமாற்றங்களும் குறைந்து கொண்டே செல்கின்றன. இந்த நிலைமை தொடருமானால் நிச்சயமாக உறவுத் தொடர்பு துண்டிக்கப்படும்.

எது எப்படி இருப்பினும் எம்மவர்களின் உரிமையை வெற்றி கொள்வதற்காக ஈழத்தமிழர்களின் ஒட்டுமொத்தக் குரலாகவும் ஒலிப்பது புலம்பெயர் உறவுகளின் குரலாகும். எங்களுக்கும் புலம்பெயர் உறவுகளுக்குமான தொடர்பை துண்டிப்பதற்காக பல்வேறு தீய சக்திகள் வலை வீசுகின்ற போதும், அவற்றைத் தகர்த்து எறிய வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட் டுள்ளோம்.

தர்மத்தின் வாழ்வதனை சூது கவ்வும் தர்மம் மறுபடியும் வெல்லும், என்பதை நிரூபித்துக் காட்டிய அவர்களும் ஈழத்தமிழரின் புதியதொரு அத்தியாயமே.

## சுவதேஷி 'லிட்டில் பிரின்சஸ்' தெரிவுகளில் புதிய ரகங்கள்

இலங்கையில் சோப் மற்றும் மூலிகை பிரத்தியேக பராமரிப்பு தயாரிப்புகளை உற்பத்தி செய்வதில் முன்னோடியாகத் திகழும் சுவதேஷி இன்டஸ்ரியல் வேர்க்ஸ் பிஎல்சி, புதிய சோப் மற்றும் லோஷன் வகைகளை சிறுவர்களுக்காக தனது 'லிட்டில் பிரின்சஸ்' ரகத்தினூடாக அறிமுகம் செய்துள்ளது. 'லிட்டில் பிரின்சஸ்' சோப், லோஷன், கொலோன், ஷாம்பு மற்றும் ஷவர்–ஜெல் போன்றவற்றை தற்போது நாட்டின் தெரிவு செய்யப்பட்ட சுப்பர் மார்க்கெட்டுக்கள், பார்மசிகள் மற்றும் விற்பனை நிலையங்களிலிருந்து கொள்வனவு செய்ய முடியும்.

கவர்ச்சிகரமான விதத்தில் பொதி செய்யப்பட்டுள்ள இந்த தயாரிப்புகள், உயர் தரங்களுக்கமையவும், சாதாரண விலைகளில் அமைந்துள்ளன. மேலும் 3 பிரத்தியேகமான வாசனைப் பொருள்கள், பிள்ளைகள் மத்தியில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. மேலும் சருமத்துக்கு மென்மையானதாகவும் மிருதுவானதாகவும் அமைந்துள்ளன. சுவதேஷி நிறுவனத்தின் பேச்சாளர் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்,

'எமது இலக்கு என்பது, பிள்ளைகளுக்கு விசேடமாக அமைந்த பிரத்தியேக பராமரிப்புகளை உயர் தரத்தில் உற்பத்தி செய்து வழங்குவதாகும். அவை குழந்தைகளின் சருமத்துக்கு மென்மையாக அமைந்திருப்பதுடன், உயர் தரம் வாய்ந்த மூலப்பொருள்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தத் தெரிவுகளுக்கு நாம் விசேட தொனிப்பொருளையும் கொண்டுள்ளோம். 'நீங்கள் எப்போதும் பிரின்சஸ் என்பதை ஒருபோதும் மறக்க வேண்டாம்' என்பது அந்த தொனிப் பொருளாகும். எனவே, சிறுமிக்கு எப்போதும் நம்பிக்கையை வழங்கி, அவளின் தோற்றத்தை விசேடமாக்கிக் காண்பிக்கிறது' என்றார்.

'பிள்ளைகளுக்கென விசேடமாக அமைந்த தயாரிப்புகளை [illegible] ஆய்வுகள் [illegible] உற்பத்தி செயற்பாடுகளை தொடர்ந்து, இந்த பெறுமதி வாய்ந்த தயாரிப்புத் தெரிவுகளை உற்பத்தி செய்து, பெருமளவான இலங்கையர்களின் மனங்களை கவர்ந்துள்ளது. குழந்தைகளின் குளியல் அனுபவத்தை மிகவும் மகிழ்ச்சிகரமானதாகவும், விறுவிறுப்பானதாகவும் மாற்ற முடிந்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்' என மேலும் குறிப்பிட்டார்.




1941ஆம் ஆண்டு கந்தானையில் தாபிக்கப்பட்டு ஆரம்பமான சுவதேஷி நிறுவனம், இந்நாட்டு வளங்களை பேணிப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தன்னை அர்ப்பணித்தது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Kohli கோஹ்லி - ஹோக்லி எது சரியான தமிழ்?




Kohli என்ற பெயரைத் தமிழில் கோ(ஹ்)லி என்றுதான் குறிப்பிட வேண்டும் என அரியாலை த.துரைசிங்கம் என்பவர் 13.06.2015 வாசகர் திருமுகத்தில் குறிப்பிட்டிருந்தார். உண்மையில் தமிழில் கூறுவதானால் கோக்லி என்றுதான் கூறவேண்டும். கோஹ்லி என்பதில் வரும் ஹ வடமொழி எழுத்து. எனவே, வேற்று மொழிச் சொற்கள் தமிழ் இலக்கணப்படி திசைச்சொற்கள் எனப்படும். அவ்வாறான வேற்றுமொழிச் சொற்களை தமிழில் எழுதும்போது புரிந்துகொள்ள முடியாத நிலை வாசகர்களுக்கு ஏற்படும். வடமொழியில் உள்ள ஹ, ஷ, ஸ, ஶ்ரீ போன்ற எழுத்துக்கள தமிழ்ச் சொற்களிலும் பயன்படுத்தப்படுகின்றன. எனவே கோஹ்லி என்றுதான் சொல்லவேண்டும் என வாதாட முடியாது. ஆங்கிலத்தில் உள்ள B,F,H,W,Z போன்ற பல எழுத்துக்களுக்கு தமிழில் சரியான எழுத்துக்கள் இல்லை. Hஎன்ற ஆங்கில எழுத்தை யாழ்ப்பாணத்தில் ஏச் எனவும், தமிழ்நாட்டில் ஹெச் எனவும் உச்சரிக்கின்றனர். சில சமயம் ஆங்கிலத்தில் வரும் H Silent ஆக Honour என்று உச்சரிக்கப்படும். எனவே Kohli என்பது ஒரு பெயர்ச்சொல் (Pronoun) அது ஹோக்லி, ஹோஹ்லி என எப்படியும் தமிழில் எழுதப்படலாம். உதயன் விளையாட்டு நிருபர் எழுதுவது பிழை எனச் சொல்ல முடியாது. சரியான முறையில் Kohli என்பதை தமிழில் சொல்வதனால் கோக்லி அல்லது கோக்கிலி என்று தான் சொல்லலாம். ஏனென்றால் தமிழில் H க்குரிய எவ்வித சமமான எழுத்தும் இல்லை. ஹ என்பது வடமொழி எழுத்து. எனவே பிறமொழியில் உள்ள பெயர்களைத் தமிழில் எழுதும்போது அல்லது சொல்லும்போது இது தான் சரியான தமிழ்ச் சொல் என வாதாட முடியாது. உதாரணமாக Malcom Fracar என்பதை மல்கம் பிரேகர் என்று தான் எழுதலாம். F என்ற எழுத்துக்குரிய தமிழ் எழுத்து இல்லை. Pharmacy இதில் Ph என்பதற்குரிய சரியான தமிழ் எழுத்து இல்லை. தமிழில் பார்மசி என்றுதான் சொல்கிறோம். வடமொழி, சிங்களம், ஹிந்தி போன்ற மொழிகளில் க எழுத்து Ka, Kha, Ga, Khha என நான்கு வடிவங்களில் உள்ளன. அதேபோல க ட த ப போன்ற எழுத்துக்களுக்கும் நான்கு எழுத்து வடிவங்கள் உள்ளன.

இவ்வாறான நிலையில் சில பத்தாண்டுகளுக்கு முன்பு தமிழில் ஒரு தேசப்படப் புத்தகம் (Atlas) வெளியிடப்பட்டது. தனித்தமிழில் Italy என்ற நாட்டின் பெயர் இட்டலி எனவும், ஜேர்மனி செருமனி எனவும் போடப்பட்டிருந்தன. தமிழுக்கு அவை சரியாக இருந்தாலும் அவை சிரிப்பூட்டுவதாக அமைந்துவிட்டன. தமிழ்மொழி சரியான விதத்தில் தனித்தமிழாக, தூயதமிழாக, பிறமொழிக்கலப்பில்லாமல் இயங்கக் கூடிய நிலை தற்போது இல்லை. எனவே அன்பர் அரியாலை துரைசிங்கம் கூறுவது போல இது தான் சரியான தமிழ் என எவராலும் அறுதியிட்டு சொல்ல முடியாதபடி வடமொழி போர்த்துக்கல், டச்சுமொழி, ஆங்கில, சிங்கள மொழிகளும் தமிழர்களின் புலம்பெயர்வின் பின் ஜேர்மனிய, பிரான்ஸிய பல்வேறு மொழிச் சொற்களும் தமிழில் கலந்து வருகின்றன.

தமிழ் மாணவ சமுதாயத்தின் தமிழ்ப்பற்றைப் பாராட்டுகின்றேன். ஆனால் இதுதான் சரியான தமிழ் எனச் சொல்லக்கூடிய நிலை இன்றில்லை. வேற்று மொழிச் சொற்கலை தமிழாக்கும்போது அவை எப்படி இருக்க வேண்டும் என எவ்வித வரையறையும் தற்போது இல்லை. எனவே உதயன் விளையாட்டு நிருபரில் பிழை பிடிப்பதில் எவ்வித நியாயமும் இல்லை. எனவே உதயன் விளையாட்டு நிருபர் எழுதும் ஹோக்லி என்பதும் அன்பர் ந.துரைசிங்கம் சொல்லும் ஹோஹ்லி என்பதும் தவறே. அதாவது இரண்டு பேரும் எழுதுவது தமிழ்ச் சொற்கள் அல்ல. எனவே ஆளைப் பார்க்காமல் நாம் ஆட்டத்தைக் கவனிப் போம். ஹோக்லி என்றாலும் கோஹ்லி என்றாலும் சரிதான். ஹோக்லி என எழுதி தமிழை வாழ விடுமாறு கேட்கும் அன்பர், கோஹ்லியால் தமிழ் வாழவில்லை என்பதைப் புரிந்து கொண்டால் சரிதான்.

துரைசிங்கத்தின் அடிப்படை எண்ணம் கோக்லி ஹோக்லி அல்ல. தங்களின் விளையாட்டுத்துறை ஆசிரியர் மேல் உள்ள கோபம்தான். அவரைத் தங்கள் நிறுவனத்திலிருந்து நீக்க வைப்பதும்தான்.

எனவே இவ்வாறு தனிப்பட்ட ரீதியில் தாக்குதல் தொடுக்கும் கடிதங்களில் அவற்றை நீக்கிவிட்டு விடயத்தை மட்டும் பிரசுரிப்பதுதான் உதயன் பத்திரிகைக்கு அழகு. எனவே தனிப்பட்ட தாக்குதல்களுக்கு இடமளிக்காமலிருப்பது விரும்பத்தக்கது.

இதில் வேடிக்கை என்னவென்றால், உதயன், உதயம் என்பதே வடமொழிச் சொல். தமிழில் அது எழுவோன் எழுகதிர் என இருக்க வேண்டும். அதில் ஹோஹ்லி தமிழா ஹோக்லி தமிழா என ஒருவர் கேட்டிருப்பது வேடிக்கையாக இல்லையா?

துரைசிங்கம் ஹோக்லி என எழுதி தமிழை வாழ விடுமாறு கேட்டுள்ளார். மெல்ல மெல்லக் கொல்ல வேண்டாம் என எழுதியுள்ளார்.

கோக்லி அவ்வாறு செய்வதால் மட்டும் தமிழ் வாழும் என்றால், விளையாட்டு நிருபர் ஹோக்லி என பலமுறை எழுதிய பின்பும் வாழ்ந்து கொண்டிருக்கிறதே? தமிழை வாழ வைப்பது ஹோக்லி அல்ல, துரைசிங்கமோ, விளையாட்டு நிருபரோ , நானோ அல்ல. தமிழ் தானே வாழும், வளரும். துரைசிங்கம் அஞ்சத் தேவையில்லை.

*க.குருநாதன்*

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# இலக்கு ஒன்றாகத்தான் இருக்க வேண்டும்

எதிர்பார்த்ததைப் போலவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளதுடன், இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் நாட்டுக்குப் பெரும் ஆபத்தான அம்சங்களைக் கொண்டுள்ளதாகவும் இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியே பதில் சொல்ல வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

இந்த நாட்டில் சிறுபான்மையினருக்கான அரசியல் தீர்வு தொடர்பாக கடந்த பத்துவருடகால ஆட்சியில் அலட்சியப் போக்குடனும், அராஜக மனப்பான்மையுடனும் நடந்துகொண்ட மஹிந்த ராஜபக்ஷ அரசின் பெரும்பான்மையானவர்களை அப்படியே தக்கவைத்துக்கொண் டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிடமிருந்து அதிகாரப்பகிர்வையோ, நல்லிணக்கத்தையோ, பொறுப் புக் கூறலையோ எதிர்பார்க்க முடியாது என்பதை மீண்டும் வலியுறுத்துவதாக நேற்றையதினம் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் அமைந்திருக்கின்றன.

தமிழ் மக்கள் தனித் தேசிய இனம், வடக்கு, கிழக்கு இணைந்த தமிழ் - முஸ்லிம் தாயகப் பிரதேசம், தேசிய இனம் என்ற வகையில் உரித்தான சுயநிர்ணய உரிமை, சமஷ்டி கட்டமைப்பின் கீழ் வடக்கு - கிழக்குப் பிரதேசங் களில் வாழும் எந்தவொரு மக்கள் மீதும் முரண்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தாத அதிகாரப் பகிர்வு என்பவற்றை உள்ளடக்கியதோர் அரசியல் தீர்வைத் தாம் கோருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது .

அதிகாரப் பகிர்வு என்பது காணி, சட்டம் - ஒழுங்கு, சட்ட அமுலாக்கம், தமிழ் மக்களின் பாதுகாப்பு என்பவற்றை உள் ளடக்கியதாக இருக்கவேண்டுமென சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு உள்நாட்டிலும் - வெளிநாட்டிலும் வளங்களைத் திரட்டிக்கொள்ளக் கூடியதாகவும், நிதி அதிகாரம் கொண்டதாகவும் அதிகாரப் பகிர்வு இருக்கவேண்டும் என்றும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு முன்வைத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் தேர்தலில் வாக்குகளை இலக்காக வைத்து பிரசாரம் செய்வது போன்று நாட்டின் பிரிவினையைக் கோரிநிற்கவில்லை. மாறாக, ஐக்கிய - ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளேயே தீர்வைக் கோரி நிற்கின்றது.

இந்த நாட்டில் இருமொழிகள் இருக்குமிடத்து நாடு ஒரேநாடாக இருக்கும். மாறாக, ஒரு மொழிதான் இருக்க வேண்டுமென்று நினைத்தால் நாடு இரண்டாகத் துண்டாப்படுவதைத் தடுக்க முடியாது என முதுபெரும் இடதுசாரித்தலைவரும், 1972ஆம் ஆண்டு அரசமைப்பை உருவாக்குவதில் முக்கிய பங்களிப்பை ஆற்றியவருமான கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா தெரிவித்திருந்ததை மீண்டும் இங்கே நினைவூட்டுவது பொருத்தமானதாகும்.

இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை இனத்தவர்களும் சரிசமமாக கௌரத்துடன் வாழத்தக்கதான அதிகாரப் பகிர்வுடன் கூடிய தீர்வு வழங்கப்படாதவிடத்தே ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு அபாயச்சங்கு ஊதுவதைப் போன்ற நிலை ஏற்படக்கூடுமே தவிர, அதிகாரப்பகிர்வு என்பது ஒருபோதுமே பிரிவினைக்கு வித்திட்டதில்லை .

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசியக் கூட்டணி கடந்த வாரம் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒற்றையாட்சியின் கீழ் சகலரின் இணக்கப்பாட்டுடன் உச்சபட்ச அதிகாரப்பகிர்வுக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விடயம் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கப்பட்டுள்ள சமஷ்டி அடிப் படையிலான தீர்வு என்பதற்கும் இதற்குமிடையில் பாரிய இடைவெளி இருக்கின்றது.

ஆனால் நாளை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முன்வைக்கவுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரசியல் தீர்வு என்ற விடயமும், அதிகாரப்பகிர்வு என்ற சொற்பதமும் இருக்குமா என்பது கேள்விக்கிடமானது. அரசி யல் என்பது சாத்தியங்களின் கலை என்பார்கள். இந்த நாட் டின் மிகப் பெரும் இனவாத அமைப்பாகக் கருதப்பட்ட ஹெல உறு மயவும், மிகப்பெரும் இனவாதி யாகப் பார்க் கப்பட்ட சம்பிக்க ரணவக்கவுமே இன்று ஐக்கிய தேசியக் கட்சி தலைமை யிலான முன்னணியில் இணைந்திருக்கும் போது வேறெதனையும் சாத்தியமான விடயமாகக் கருதமுடியாது.

அதிகாரத்துக்கு வருவதற்காக இனவாதிகள் மக்கள் மத்தியில் தேவையில்லாத அச்சத்தைத் தோற்றுவிக்கும் அரசியல் கலாசாரம் முடிவுக்குக் கொண்டு வரப் படவேண்டிய அதேவேளை, இனவாதிகளுக்கு அஞ்சி நியாயமான அபிலாஷைகளை வெளிப்படுத்துவதை எந்தக் காரணம் கொண்டும் நிறுத்திவிடக்கூடாது. போராட்ட வழிமுறைகள் மாறலாம். ஆனால் இலக்கு ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். அந்த இலக்கு என்பது சரி சமமாக கௌரவத்துடன் வாழ்கின்ற வாழ்க்கையாகும்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சமஷ்டியே தமிழர் தீர்வுக்கு ஒரே வழி

"சமஷ்டி" என்ற சொல்லைக் கேட்டாலே துள்ளிக் குதித்து எழுந்து விடுகிறார்கள், தென்னிலங்கையின் சில தலைவர்கள்.

தமிழ் பேசும் மக்களின் நீண்டகால தேசிய பிரச்சினைக்கு அவ்வாறான ஒரு தீர்வே சாசுவதமானதாக இருக்க முடியும். பிரிக்கப்படாத இலங்கை நாட்டுக்குள் சகல தரப்பு மக்களும் அவரவர்களுக்குரிய பிரதேசங்களில் தத்தமது கலை, கலாசாரங்கள், மொழி, சமய விழுமியங்களை தமக்கே உரிய முறையில் பேணி வளர்த்துக் கொள்வது மட்டுமன்றி, நாட்டின் ஏனைய பிரிவு மக்களோடும் இணைந்து ஒற்றுமையோடும் உறவோடும் ஒரே நாட்டில் வாழ்வதற்கான வழி முறையாகவே இது இருக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்புகின்றது. இதனை வென்றெடுக்கவே தமிழ்த் தேசிய மக்களின் ஆதரவை அது நாடிநிற்கின்றது.

இந்தக் கொள்கையை தமிழ் பேசும் மக்கள் எந்த அளவில் ஏற்றுக்கொள்ளப் போகிறார்கள் என்பதை அவர்கள் வரும் தேர்தலில் வெளியிடப் போகிறார்கள். கட்டாயமாக இதனை மக்கள் ஆதரித்துத்தான் ஆகவேண்டும் என்ற எந்தவித நிர்ப்பந்தத்தையும் கூட்டமைப்பினர் பிரயோகிக்கப் போவதில்லை. ஏனென்றால் தமிழ் மக்கள் இந்த விடயத்தில் சரியாகச் சிந்தித்துச் செயற்படக்கூடியவர்கள்.

ஆக, தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் வழங்கும் ஆதரவைப் பொறுத்தே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், தெற்குத் தலைவர்களுடனான தமது பேரம் பேசும் வியூகத்தை வகுத்துக்கொள்வார்கள் என்று கூறத்தேவையில்லை.

சமஷ்டி என்பது ஏதோ பயங்கரமான ஆட்சி முறை என்பதுபோல தென்னிலங்கையில் பரப்புரை செய்யப்படுகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதம் கொண்டு கேட்டதை இவர்கள் தேர்தல் மூலம் அடையப் பார்க்கிறார்கள் என்றவாறு முன்னாள் அமைச்சரொருவர் கூக்குரலிட்டுள்ளார்.

சமஷ்டி என்பதற்கும் தனிநாடு என்பதற்கும் வித்தியாசம் தெரியாதவர்களாக அவர்கள் இருக்க முடியாது. ஆனால் அவ்வாறான ஒரு ஆட்சி ஏற்பட்டால் தமிழர்கள் தங்களை விஞ்சிவிடுவார்களோ என்ற அச்சம் அவர்களைப் பிடித்து ஆட்டுவதுபோல் தெரிகிறது. சமஷ்டி முறையானது, உலகின் பலநாடுகளில் வெற்றிகரமாக செயற்படுவதாக அறிகிறோம். பக்கத்திலுள்ள இந்தியாவில் கூட ஒருவித சமஷ்டி முறையே நடைமுறையில் உள்ளது. பல்வேறு இனங்களைக் கொண்ட அந்த நாட்டில் மொழிவழி கலாசாரங்களைப் பேணக்கூடிய மாகாண ஆட்சி முறை காணப்படுகின்றது.


வடக்கில் ஹிந்தி மொழி பேசுவோர் பெரும்பான்மையாகக் காணப்பட்டாலும், மத்தியில் முக்கிய பதவிகளில் வேறுமொழியைப் பேசுகின்ற வேறு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் அமரக்கூடிய வாய்ப்பு அங்கு இருக்கின்றது. அந்த நாட்டின் மிக உயர்ந்த பதவியான ஜனாதிபதிப் பதவியை மிகச் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்களும் அலங்கரிக்க முடிகிறது. சமீப காலத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த, தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட இஸ்லாமியரான அப்துல் கலாம் ஜனாதிபதியாக வீற்றிருந்ததைப் பார்த்தோம்.

அதைப்போல மேற்குலக நாடுகள் பலவற்றில் சமஷ்டி முறையிலான ஆட்சிமுறை வெற்றிகரமாக செயற்படுகின்றது. இந்த நாட்டுக்கு சமஷ்டி முறை ஒவ்வாது என்று கூறுபவர்கள் அதற்கான அடிப்படையாகக் கருதுவது தமிழர்கள் ஒரு காலத்தில் பிரிந்து போய் விடுவார்கள், அவ்வாறு பிரிந்தால் பக்கத்தில் உள்ள தமிழ் நாட்டோடு இணைந்து விடுவார்கள் என்ற பயமாகவும் இருக்கலாம்.

முதலில் இவர்கள் சமஷ்டி ஆட்சிமுறை நடைமுறையில் இருக்கும் நாடுகளில் அது எவ்வாறு சகல மக்களையும் இணைத்திருக்கின்றது என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். தமிழர்கள் பிரிந்து போவார்கள் என்றால் அவ்வாறான நிலைமை ஏன் எப்படி ஏற்படும் என்பதை ஆலோசித்து அதற்கேற்ப செயற்பட வேண்டாமா?

தமிழ் பேசும் மக்கள் சமஷ்டி கேட்கும் அளவுக்குத் தள்ளப்பட்டார்கள் என்றால், இங்கு இதுவரை காலமும் செயற்பட்டு வந்துள்ள ஆட்சி முறையும் அவர்கள் இரண்டாந்தர மக்களாகப் பார்க்கப்பட்டமையுமே அதற்குக் காரணம் என்பதை தென்னிலங்கை உணர வேண்டும். அவ்வாறு அதனை அவர்கள் உணரச் செய்யும் பொறுப்பு தமிழ் வாக்காளர்கள் கைகளிலேயே இருக்கின்றது. அவர்கள் அதனைச் சரியாகச் செய்து முடிப்பார்கள் என்று எதிர்பார்ப்போம்.

# தகுதியானவர்களை தெரிவு செய்வது மக்களின் கடமை



> "தமிழர்கள் மற்றும் சிறுபான்மை இனங்களை அடிமைப்படுத்தி அதிகாரத்தில் இருக்கவேண்டும் என்பதற்காக சிங்கள மக்களின் காவலராகத் தங்களைக் காட்டிக் கொண்டு, சிங்கள மக்களையும் கூட தமது அடிமைகளாக வைத்திருப்பதையே இவர்கள் விரும்புகிறார்கள். தென்பகுதியில் உள்ள புத்திஜீவிகளும் கூட இவர்களுக்கு விலைபோய் விடுகிறார்கள்.

வந்தியத்தேவர்


எல்லோரும் ஏறி இளைத்த குதிரையில் சக்கடத்தார் ஏறிச் சறுக்கி விழுந்தாராம் என்றொரு பழமொழி வழக்கில் உண்டு. நாட்டைப் பாதுகாப்பதற்கென்றே தேர்தல் களத்தில் குதிப்பதாகப் பலரும் கூறிவரும் நிலையில், போதாக்குறைக்கு பொதுபல சேனாவின் செயலாளரும் களத்தில் குதித்துள்ளார். பொதுஜன பெரமுனையின் கலகொட அத்தே ஞானசாரதேரர் நாட்டைப் பாதுகாக்க வெளிக்கிட்டுள்ளாராம். இந்த நாட்டுக்கு கிரக நிலை சரியில்லைப்போலும். என்ன கேடு பிடித்ததோ மாற்ற முடியாத புற்றுநோய்க்குள் சிக்கியுள்ள இலங்கையில் மேலும் மேலும் நோய்க் கிருமிகள் அதிகரித்து நாடு நாசமாக வேண்டும் என்பது இலங்கையின் தலைவிதியாகிவிட்டது போலும். சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாத்துக் கவனிக்க ஆள் இல்லை என்றும், அந்த இடத்தை நிரப்பவே தாம் தேர்தலில் போட்டியிடப் போகிறார் என ஏற்கனவே அவர் முடிவெடுத்திருந்தார். உண்மையில் சிங்கள மக்கள் எவராவது இலங்கையில் தமக்கு உரிமைகள் எதுவுமற்றவர்களாக அநாதைகளாகி விட்டோம் என்று கிளர்ந்தெழுந்ததுண்டா? இந்த நாட்டில் அனைத்துச் சுதந்திரமும் பெற்ற ஓர் இனம் உண்டென்றால் அது சிங்கள இனம் மட்டுமே. அரசியல்வாதிகளென்று கூறிக்கொண்டுவரும் குள்ள நரிகள்கூட நாட்டின் ஒரு பகுதி மக்களின் உரிமைகளையும் நிலங்களையும் பறித்தெடுத்து அடாவடித்தனம் பண்ணுவதுடன் சிங்களக் குடியேற்றங்களையும் ஏற்படுத்தி அந்த மக்களை அடக்கி ஒடுக்கி அகதிகளாக மாற்றிவிட்டனர். ஏற்கனவே நாட்டைக் கடித்த விஷஜந்துக்கள் போதாதென்று கலகொட அத்தே என்கின்ற மற்றும் ஒரு விஷஜந்து மஞ்சள் அங்கிக்குள் மறைந்து ஊரத் தொடங்கியுள்ளது. பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பதை மறந்தவர்களாக மக்கள் இப்போது புத்தபிக்கு என்றாலே நடுங்கும் அளவுக்கு நிலைமை மாறியுள்ளது. பௌத்த மதத்தின் புனிதத் தன்மையையே கெடுத்து புத்தபெருமானின்தத்துவங்களையே சிதைக்கும் இவர் போன்ற சிலரால் உண்மையான பௌத்த துறவிகள் மனம் வெதும்பிப் போயுள்ளனர். உண்டு கொழுப்பெடுத்து அலையும் அத்தே ஞானசாரதேரர் போன்றவர்கள் சிங்கள மக்களைப் பாதுகாக்கக் கிளம்பியுள்ளமை அந்த மக்களுக்கு ஒரு சாபக்கேடாகும். ஏற்கனவே தங்கள் தலைவர்கள் எனத் தாம் ஏற்றுக் கொண்டவர்களாலேயே அவர்கள் நொந்து போயிருக்கிறார்கள். அதன் வெளிப்பாடுதான் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் முடிவு என்பதைக்கூட புரிந்து கொள்ள முடியாத இந்தத் தேரருக்கு, புத்தர் போதித்த ஞானம் எங்கே புரியப் போகிறது? சிங்கள மக்களையும் பௌத்த மதத்தையும் பாதுகாக்க வேண்டும் என்ற நேர்மையான மனப்பாங்கு உங்களிடம் இருக்குமானால், மஞ்சள் அங்கியைக்களைவதுடன் சிங்கள மக்களுக்காகப் பேசுவதாகக் கூறுவதையும் தவிர்த் துக்கொள்ளுங்கள். உங்களைப் போன்ற சுயநலவாதிகளிடம் புத்த பெருமான் நேரில் மட்டுமல்ல கனவிலும் கூடத் தோன்றித் தனது கருத்துக்களை எடுத்துக் கூற விரும்பமாட்டார்.

இனம், மொழி, மதம் என்று வேறுபாடுகள் காணப்பட்டாலும் எல்லா மக்களும் ஒன்றுதான். அனைவருக்கும் சமத்துவமான அந்தஸ்து வழங்கப்படவேண்டும் என்பதில் அக்கறை இல்லாத அரசியல்வாதிகள் உள்ள நாடும், மதங்களிடையே கசப்புணர்வுகளை உண்டு பண்ணி எங்களதே அரச மதம் என்ற பாகுபாட்டைத் தோற்று வித்து ஏனைய மதங்களைப் புறக்கணிக்கச் செய்யும் மதவாதிகள் உள்ள நாடும் ஒருபோதும் பாதுகாப்புள்ள நாடாக விளங்க முடியாது. இப்படியானவர்களால் பாதுகாப்பான நாடொன்றைக் கட்டியெழுப்பவும் முடியாது. இவ்வாறானவர்கள் நாட்டைப் பாதுகாக்கவும் நன்னிலைப்படுத்தவும் அரசியலில் நுழைகிறோம் என்பதும் முட்டாள் தனமானதே. சேர். ஜோன் கொத்த லாவல போன்றவர்கள் பௌத்த மதகுருமாருக்கு உரிய கௌரவத்தை வழங்கிய போதும் அவர்கள் அரசியலில் நுழைவதை அங்கீகரிக்கவில்லை. எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க கொடுத்த இடம் அவர்களை அரசியலில் தீவிரம் காட்ட வழிவகுத்தது. அதுவே பின்னாளில் அவரது மறைவுக்கும் காரணமானது. சிங்கள அரசியல் வாதிகளும், அரசியல் வாதிகளாக முயற்சிக்கும் பிக்குகளும் தமது சுயநலனுக்காக கையில் எடுத்த ஆயுதம்தான் இனவாதம் என்பதைப் புரிந்து கொள்ளாத அல்லது புரிந்தும் புரியாததாகக் காட்டிக் கொள்ளும் தென்பகுதி மக்கள் தொடர்ந்தும் இவ்வாறான நபர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது இலங்கையின் நலனுக்கு உகந் ததல்ல. இனத்துவேஷ அரசியல் வாதிகளினதும் தேரர்களின தும் நடவடிக்கைகள் தென்பகுதி அப்பாவிச் சிங்கள மக்களின் அழிவுகளுக்குத்தான் காரணமாக இருந்துள்ளன என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும். தமிழர்கள் மற்றும் சிறுபான்மை இனங்களை அடிமைப்படுத்தி அதிகாரத்தில் இருக்கவேண்டும் என்பதற்காக சிங்கள மக்களின் காவலராகத் தங்களைக் காட்டிக் கொண்டு சிங்கள மக்களையும் கூட தமது அடிமைகளாக வைத்திருப்பதையே இவர்கள் விரும்புகிறார்கள். தென்பகுதியில் உள்ள புத்திஜீவிகளும் கூட இவர்களுக்கு விலைபோய் விடுகிறார்கள்.

இந்த நிலைமையை மாற்றி ஒரு ஒளிமிக்க இலங்கையை உருவாக்க தென்பகுதிப் புத்திஜீவிகளும் மக்களும் ஒருங்கிணைந்து ஊழல் மோசடிக் கும்பல்களையும் இனவாதிகளையும் நிராகரித்து தகுதியான நேர்மையானவர்களைத் தமது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்ய வேண்டியது அவர்களது கடமையாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிலங்கை மக்களுக்கே பயன்தரும் நாடாளுமன்றத் தேர்தல்



மு.தமிழ்மணி

அடுத்த மாதம் 17 ஆம் திகதி நடைபெறப் போகின்ற பொதுத் தேர்தலில், தென்னிலங்கையில் இரண்டு கூட்டுக் கட்சிகளுக்கிடையேதான் அரசியல் போட்டி உச்சக்கட்டமாக இருக்கப் போகின்றது.

பிரதமராகவுள்ள ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான யானைச் சின்னத்தில் போட்டியிடுகின்ற புதிய நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி, மைத்திரி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்பவையே அவை. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுகின்றது. தென்னிலங்கையில் வெற்றிலைச் சின்னமும் பிரசித்தமானது. வெற்றிலை யில் மறுபக்கமாகப் பார்த்தால் முன்னாள் ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷவின் உருவம் முன்னுக்கு வரும்.

மஹிந்த ராஜபக்ஷ தனது 9 வருட ஆட்சிக் காலத்தில் பல தரப்பட்ட தேர்தல்களை நாட்டில் நடத்தியிருந்த போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பே வெற்றியீட்டியிருந்தது. வெற்றிலைச் சின்னம் சாதாரணமாக தென்னிலங்கை மக்களுக்கு இலகுவாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றாகும். இருந்தாலும் ஜனவரி எட்டாம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் நாட்டு மக்களில் நான்கு இலட்சம் வாக்காளர்கள் வெற்றிலைச் சின்னத்தை நிராகரித்து அன்னப்பறவைக்கு வாக்களித்திருந்தனர்.

இரண்டில் ஏதாவது ஒரு முன்னணியே நாடாளுமன்ற ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ளும். ஒன்றில் புதிய நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் பிரதம வேட்பாளரான ரணில் பிரதமராகலாம் அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றால் பிரதமராக ஒருவரை ஜனாதிபதியான மைத்திரி நியமிப்பார். ஆனால் இலங்கை வரலாற்றில் தமிழர் ஒருவர் ஜனாதிபதியாகவோ பிரதமராகவே எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வரவே முடியாது.

முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா குமாரணதுங்கா காலஞ் சென்ற வெளிவிவகார அமைச்சரான லக்ஸ்மன் கதிர்காமரைத் தமது ஆட்சியின்போது பிரதமராக நியமிக்கின்ற சந்தர்ப்பமிருந்தும் ஜே.வி.பி. இனவாதப் போக்கை இறுகப் பின்பற்றியிருந்தமையால் அது முடியாமல் போனது. இதிலிருந்து ஒரு தமிழர் ஜனாதிபதியாகவோ, பிரதமராகவோ ஏன்? எதிர்க் கட்சித் தலைவராகவோ வருவதற்கு முடியாது என்பதை தென்னிலங்கை பேரினவாத சக்திகள் உணர்த்தி வருகின்றன.

அரசியலமைப்புச் சட்டத்திலும் அதற்கான விதி முறையுமில்லை. ஆட்சியைத் தீர்மானிக்கின்ற சக்தி இரு பெரும் சிங்களக் கட்சிகளே யாகும். இது 67 ஆண்டு கால அரசியல் வரலாறாகும்.

பொதுத் தேர்தல் யாருக்கு என கேள்வி எழுப்பப்படுகின்றபோது தென்னிலங்கை மக்களுக்கே அதிக உரித்துடையதாகும். தலைவிதியும் அவர்கள் கைகளிலேயே தங்கியுள்ளது.

எதிர் வரும்17 ஆம் திகதி நடைபெறப் போகின்ற பொதுத் தேர்தலில் ஆட்சி அதிகாரங்களையிழந்து நிர்க்கதியான நிலையிலிருக்கின்ற முன்னாள் ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிடுகின்றார். அவர் குருநாகல் மாவட்டத் தில் முதன்மை வேட்பாளராக களமிறங்கியுள்ளார். அரசியலிருந்து ஓயமாட்டேன், பிரதமராக வந்தே தீருவேன், மைத்திரி ஆட்சியை ஓரம் கட்டுவேன், ரணிலைத் தூக்கி எறிவேன், நான் நாட்டைப் போரில் மீட்டெடுத்தவன், பயங்கரவாதத்தையும், புலிகளையும் அடியோடு ஒழித்தவன் என்ற வீரப் பிரதாபங்களோடு அநுராதபுரக் கூட்டத்தில் அதிரடிப் பேச்சோடு ஒரு முடிவு காண்பதற்கு மஹிந்த களமாடுகின்ற பொதுத் தேர்தலாக அமைந்துள்ளது.

மஹிந்த, தான் மீண்டும் பதவிக்கு வந்து ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைப்பதற்கும், அதனூடாக சுக போகங் களை அனுபவிப்பதற்கும், மீண்டும் குடும்ப அதிகாரத்தை நிறுவுவதற்கும் மஹிந்த மீதும் அவரது சகோதரர்கள், குடும்ப உறவினர்கள், அவரது அமைச்சரவையில் பதவி வகித்திருந்த முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் சுமத்தப்பட்டிருக்கின்ற பயங்கரமான குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்புவதற்கும், மஹிந்தவுக்கும் அவரது நெருங்கிய சகாக்களுக்கும் பொதுத் தேர்தல் அவசியமாகத் தேவைப்படுகிறது.

ஜனாதிபதி மைத்திரி, மற்றும் பிரதமர் ரணிலின் நல்லாட்சி அரசின் சிறுபான்மைப் பலம் பொதுத் தேர்தலுக்கு வழி வகுத்துள்ளது. ஆறு மாத காலத்துக்குள் மஹிந்தவும் அரசியலில் மீள்பிரவேசம் செய்வதற்கு வாய்ப்பையும் உண்டாக்கியுள்ளது. மஹிந்தவுக்கும் அவரது சகோதரர்களுக் கும் காலம் முழுவதும் ஆட்சி அதிகாரம் தேவைப்படுகின்ற ஒன் றாகவே உள்ளது. மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்த லில் வெற்றி பெற்று மீண்டும் ஜனாதிபதி யாவேன். அதற்குப் பின்னர் நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு ஜனாதிபதியாவார் என்ற மஹிந்த ராஜபக்ஷவின் திட்டங்கள் ஜனவரி எட்டாம் திகதி தவிடு பொடியாகின.

ரணில் விக்கிரமசிங்காவின் ஐக்கிய தேசியக் கட்சி 1994 ஆம் ஆண்டிலிருந்து சகல தேர்தல்களிலும் தொடர் தோல்விகளைச் சந்தித்துக் கொண்டது. ஜனாதிபதியாகவும் முடியவில்லை, நாடா ளுமன்றத் தேர்தல்களில் (ஒரு தடவை தவிர) அறுதிப் பெரும்பான்மைப் பலம் பெற்று ஆட்சி அமைக்கவும் முடியவில்லை. ஜனாதிபதி மைத்திரி தெரிவான பின்னர் ரணிலுக்குப் பிரதமர் பதவி கிடைத்ததே எதிர்பாராத வொ்ரு சந்தர்ப்பமாகும்.

வருகின்ற பொதுத்தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணி ஓரளவு பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றி பெறலாம் என தென்னிலங்கை அரசியல் ஆய்வாளர்களால் எதிர்வு கூறப்படும் நிலையில் இலங்கையில் நிலையான ஆட்சி அமையுமா? என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. தமிழ் மக்களில் அனேகமானோர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த தென்னிலங்கையில் வாக்களிக்கலாம். வடக்கு, கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஓரளவு வாக்களிப்பார்கள். அப்படிப்பட்ட தமிழ் வாக்குகள் யாவும் ரணிலுக்கு வாய்ப்பாகுமேயன்றி தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வாக அமைய மாட்டாது.

ஒன்பது ஆண்டுகள் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது தமிழர் பிரச்சினையைத் தீர்க்காது, சிங்கள மக்கள் மத்தியில், தான் பெற்றுக் கொண்ட வெற்றியை மட்டுமே வைத்துக்கொண்டு வெற்றிக் கதாநாயகனாக வலம் வந்து கொண்டிருந்தார். தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் தொடர்ந்து ஏமாற்றி வந்த மஹிந்த தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்காது அதனை இழுத்தடித்தது மட்டுமன்றி, தமிழ்த் தலைவர்களையும் ஏமாற்றி வந்தார். தான் அமைத்த தெரிவுக்குழுவில் பங்கு பற்றி தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை வலிந்தெடுக்க கடும் பிரயத்தனங்களை மேற்கொண்ட மஹிந்த, இனப்பிரச்சினைக்கான தீர்வுகாண முயற்சித்ததேயில்லை. ஜனாதிபதித் தேர்தலுக்காக யாழ்ப்பாணம் வந்தபோது தனது தேர்தல் பரப்புரையில் தெரியாத தேவதையை விட தெரிந்த பிசாசு நல்லது என்று விளாசினார். வடக்கு மாகாணசபை ஆட்சியைப் பார்த்து வைக்கோல் பட்டடை நாய்கள் என விழித்து தமிழன் பண்பாட்டுக்கப்பால் நின்று மஹிந்த ராஜபக்ஷ கேவலமாக வர்ணித்தி ருந்தார். இந்த இருவரது கட்சிகளும் தமிழின அழிப்புக்களையும் தமிழர்களது உரிமைகளையும் திட்டமிட்டு அழித்தனர். தமிழ் மக்களைச் சொந்த மண்ணில் வாழ விடாது 30 ஆண்டுகளாக ஏதிலிகளாக்கினர். தமிழர்களது இரத்தக் கறைகள் படிந்த கட்சிகளுக்கே மட்டுமே எந்தக் காலத்திலும் ஆட்சி சொந்தமாயிருக்கும். அந்தக் கட்சிகளே எந்தத் தேர்தல்களிலும் பங்கு போட்டுக் கொள்ளும்.

மஹிந்த ராஜபக்ஷ புலிகளை அழித்து நாட்டை மீட்டு போர் வெற்றி விழாக் கொண்டாடியவர். முள்ளி வாய்க்கால் வரை வன்னியில் போரைத் தொடுத்து இனப் படுகொலை மேற்கொண்டு சர்வதேசத்தின் முன் குற்றவாளியாக நிற்பவர். ரணில் விக்கிரமசிங்கவோ மஹிந்தவின் போர் வெற்றிக்கு அடித்தளத்தை இட்டுக்கொடுத்தது தானே என்று பகிரங்கமாகவே அறிவித்தவர். புலிகளிடமிருந்து கருணாவைப் பிரித்ததும் தானே என்றும், விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதற்காக புரிந்துணர்வு உடன்படிக்கையையும் போர் நிறுத்தத்தையும் தானே உருவாக்கியதாகவும் வெளிப்படையாகவே தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.


அவர் கறுப்பு ஜூலையில் நடந்தேறிய தமிழர்கள் மீதான அனைத்துப் படுகொலைகளுக்கும் தனது கட்சி சார்பிலும், தனது சார்பிலும் இன்று வரையில் மன்னிப்புக் கேட்கவில்லை?

தலைமைப் பொறுப்பிலிருக்கும் எந்தக் கட்சியைச் சேர்ந்த அரசுத் தலைவராக இருந்தாலும் அவர்கள் தவறுகளைச் செய்திருந்தாலும், பொறுப்புக்களைத் தட்டிக் கழித்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களே.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இடம்பெற்ற கறுப்பு ஜூலை இனப் படுகொலைகளுக்கு ஜே.ஆர். ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாஸ, டி.பி. விஜயதுங்க, காமினி திஸநாயக்கா, ரணில் விக்கிரமசிங்க ஆகிய தலைவர்கள் என்றென்றும் பொறுப்புக் கூறவேண்டியவர்களாவர். ஆனால் இது இடம்பெறவில்லை.

மஹிந்தவும், ரணிலும் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு திராணியோ தைரியமோ எவையும் இல்லாதவர்கள். பொதுத்தேர்தலில் யார் ஆட்சி அமைத்தாலும் ர்ணிலோ, மஹிந்தவோ இனப்பிரச்சினைக்கான தீர்வைக் கொண்டு வரப்போவதில்லை.

தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைக்கப் போவதுமில்லை. இருவரும் ஆட்சி அதிகாரத்தை சுவைக்க வேண்டும். தமிழர்களின் வாக்குகளும் அந்த சுவைக்குச் சேர வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 600 | 800 | 800 | 700 | 600 |
| நண்டு | 250 | 500 | 400 | 400 | 250 | 450 |
| கணவாய் | 550 | 600 | 700 | 600 | 600 | – |
| பாரை | 600 | 600 | 600 | 700 | – | 430 |
| சுறா | 650 | 500 | 600 | 800 | – | 550 |
| சீலா | 300 | 400 | 500 | 500 | 450 | 350 |
| விளை | 700 | 450 | 400 | 500 | 600 | 400 |
| மூரல் | 300 | 400 | 400 | 450 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | – | 400 |
| கிழாக்கன் | 650 | 800 | – | 450 | – | – |
| ஓரா | 400 | 400 | 400 | 300 | 400 | – |
| திரளி | 250 | 300 | 220 | 250 | 250 | 300 |
| நகரை | 300 | 400 | 200 | 300 | – | 300 |
| ஆடை | 150 | 200 | 200 | 200 | 150 | 100 |
| ஒட்டி | 250 | 300 | 250 | 250 | 250 | 250 |
| திருக்கை | 150 | 350 | 250 | 400 | 350 | 150 |
| பாலை | 400 | 350 | 350 | 450 | 400 | – |
| வாழை | 100 | 200 | – | 250 | 300 | – |
| கொய் | 100 | 200 | 60 | 120 | 100 | – |
| மதனம் | 150 | 300 | 220 | 300 | 300 | 250 |

# சுடோக்கு எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங் கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட் டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க் கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | 9 | 2 | | 3 | | | 1 |
| | | 6 | | 8 | 5 | | | |
| | | 4 | 6 | 9 | | | | |
| 6 | 1 | | | | | 8 | | |
| | | 7 | | | | 2 | | |
| | | 5 | | | | | 1 | 3 |
| | | | | 1 | 6 | 9 | | |
| | | | 8 | 5 | | 1 | | |
| 4 | | 1 | 9 | 3 | 2 | | 7 | 8 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 9 | 5 | 2 | 7 | 8 | 3 | 1 |
| 8 | 5 | 3 | 6 | 9 | 1 | 4 | 7 | 2 |
| 7 | 2 | 1 | 4 | 8 | 3 | 9 | 6 | 5 |
| 5 | 1 | 7 | 9 | 3 | 4 | 6 | 2 | 8 |
| 6 | 4 | 8 | 2 | 1 | 5 | 7 | 9 | 3 |
| 9 | 3 | 2 | 7 | 6 | 8 | 5 | 1 | 4 |
| 2 | 8 | 4 | 1 | 7 | 9 | 3 | 5 | 6 |
| 3 | 9 | 6 | 8 | 5 | 2 | 1 | 4 | 7 |
| 1 | 7 | 5 | 3 | 4 | 6 | 2 | 8 | 9 |

## நாளை

**ஆடி-13 புதன்கிழமை**
**29.07.2015**

திதி: திரயோதசி மு.இ. 08.19 வரை
நட்சத்திரம்: மூலம் பி.ப.12.27 வரை
சுபநேரம்: 04.33–06.03 வரை
இராகுகாலம்: 12.03–01.33 வரை

**பிரதோஷ விரதம்**


# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 80 | 40 | 60 | 60–80 | 80 | 60 | 40 |
| கத்தரி | 100 | 80 | 90 | 80 | 60–80 | 80 | 80 | 35–40 |
| கரட் | 120 | 160 | 140–300 | 120 | 160–180 | 300 | 170 | 200 |
| மரவள்ளி | 60 | 50 | 60 | 40 | 50 | 80 | 60 | 45 |
| பயிற்றை | 90 | 80 | 100 | 80 | 80 | 80 | 120–140 | 90–100 |
| பாகல் | 120 | 160 | 140 | 120 | 120 | 160 | 160 | 90 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | 100 | 100 | 80 | 120 | 120 | 90 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 80 | 100 | 100 | 100 | 120 | 80–90 |
| சி.வெங்காயம் | 100 | 120–150 | 120–160 | 120 | 140 | 160 | 160 | 80–100 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 20–30 | 60 | 80 | 30 |
| தக்காளி | 130 | 120 | 120 | 140 | 100–120 | 160 | 140 | 100 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 60 | 40–60 | 40 | 160 | 30 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 15–20 | 20 | 40 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 20 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 200 | 300–350 | 200 | 360 | 400 | 400 | 220 |
| புடோல் | 40 | 40 | 40 | 40 | 60 | 60 | 80 | 60 |
| கோவா | 80 | 100 | 80 | 80 | 80 | 80 | 100 | 70 |
| வெண்டி | 60 | 60 | 40 | 40 | 120 | 120 | 80 | 40 |
| போஞ்சி | 160 | 200 | 200 | 180 | 100–180 | 300 | 180 | 140 |
| லீக்ஸ் | 100 | 120 | 160 | 120 | 100–120 | 100 | 120 | 100 |
| தேங்காய் | 50 | 35 | 60 | 40–50 | 50–60 | 40 | 35–50 | 35 |
| உருளைக்கிழங்கு | 80 | 50 | 80 | 90 | 80–100 | 90 | 100 | 100 |
| தேசிக்காய் | 80 | 80 | 80 | 60 | 60–70 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 10 | 30–40 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 140 | 200 | 120 | 180 | 200–260 | 200 | [illegible] | [illegible] |
| இராசவள்ளி | 120 | 150 | – | 140 | 80–100 | – | [illegible] | [illegible] |
| முருங்கைக்காய் | 150 | 160 | 120 | 120 | 120–140 | 140 | – | 110 |

# மதுவுக்கு அடிமையா

## கொய்யா சாப்பிடுங்கள்!

கொய்யாப்பழத்தில் விற்றமின் பி மற்றும் விற்மின் சி ஆகிய உயிர்ச்சத்துக்களும், கல்சியம், பொஸ்பரஸ், இரும்பு போன்ற தாது உப்புக்களும் நிறைந்துள்ளன. கொய்யாப்பழத்தை அரிந்து சாப்பிடுவதை விட பழத்தை நன்றாக கழுவிய பின்னர் பற்களில் படும்படி நன்றாக மென்று தின்பதே நல்லது. இதன்மூலம் பற்களும், ஈறுகளும் பலப்படும். வேறு எந்தப் பழத்திலும் இல்லாத விற்றமின் சி என்ற உயிர்ச்சத்து இந்தப் பழத்தில் அதிக அளவில் உள்ளது. எனவே, வளரும் குழந்தைகளுக்கு கொய்யாப்பழம் ஒரு வரப்பிரசாதமாகும். உடல் நன்கு வளரவும், எலும்புகள் பலம் பெறவும் கொய்யாப்பழம் உதவும். கொய்யாவின் தோலில் தான் அதிகசத்துக்கள் உள்ளன. அதனால் தோலுடன் சாப்பிட வேண்டும். முகத்துக்குப் பொலிவையும், அழகையும் தந்து தோல் வறட்சியை நீக்குகிறது. முதுமைத் தோற்றத்தைக் குறைத்து இளமையானவராக மாற்றுகிறது. மதுபோதைக்கு அடிமையான மதுப் பிரியர்கள் அந்தப்பழக்கத்தில் இருந்து விடுபட நினைத்தால் இந்தப் பழத்தை அதிகம் சாப்பிடலாம். இதனைத் தொடர்ந்து சாப்பிட்டால் மது அருந்தும் ஆசை பறந்து விடும். நோயால் அவதியுற்று மருந்து சாப்பிட்டு வருபவர்கள் இந்தப் பழத்தைச் சாப்பிட்டால் மருந்து முறிவு ஏற்படும். இருமல், தோல் தொடர்பான வியாதி உள்ளவர்கள் இந்தப் பழத்தைச் சாப்பிட்டால் நோய் அதிகமாகும். வாதநோய், ஆஸ்துமா போன்ற நோய் உள்ளவர்கள் இந்தப்பழத்தைச் சாப்பிடவே கூடாது. கொய்யாவை அளவுடன் சாப்பிட வேண்டும். அளவுக் கதிகமாகச் சாப்பிட்டால் பித்தம் அதிகரித்து வாந்தி, மயக்கம் ஏற்படும்.



## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....

### முன்னேறிச் செல்லுங்கள்

வீர இளைஞர்களே! முன்னேறிச் செல்லுங்கள். கட்டுண்டு கிடக்கச் செய்யும் தடைகளை வெட்டி வீழ்த்தவும், எளியவர்களின் துயரச்சுமையைக் குறைக்கவும், இருண்ட உள்ளங்களில் ஒளியேற்றவும் முன்னேறிச் செல்லுங்கள்.

நம்புங்கள். இறைவனின் கட்டளை வந்துவிட்டது. பாமரமக்களும், எளியவர்களும் நலம் பெற வேண்டும் உழைத்திடுங்கள். இறைவனின் கையில் நீங்கள் ஒருகருவி என்ற உணர்வுடன் பிறருக்கு சேவை செய்யுங்கள். உங்களிடம் நேர்மை இருக்கிறதா? பொது நலத்துடன் சேவை செய்கிறீர்களா? அன்பு இருக்கிறதா? இம்மூன்றும் இருந்தால் பயமே வாழ் வில் தேவையில்லை. சாவு கூட உங்களை நெருங்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு பாதுகாப்பு கிடைக்குமா?




உடுவிலூர் கலா

அன்று வீட்டுக்குள்ளேயே சிறைப்பட்டிருந்த பெண்கள், ஆண்களின் உடற்பசிக்கும், வயிற்றுப்பசிக்கும் தீனி போடுகிற இயந்திரங்களாக சமையலறைகளில் பம்பரமாய்ச் சுழன்றனர். பெண் விடுதலை நோக்கிய புரட்சிக் குரல்கள். காலச்சக்கரத்தின் சுழற்சியில் பெண்களுக்கான விடுதலையைப் பெற்றுத்தரத் தவறவில்லை. பெண் விடுதலையோடு, ஆணாதிக்கமும் பலமாக வலுவடைந்தது. பெண்விடுதலையின் மூலவேரான கல்வி கற்கும் உரிமையோடு களமிறங்கிய பெண்கள், பொறுமையோடு பயணித்து, சாதனையின் சிகரத்தில் கால் பதித்தனர். பெண்விடுதலைப் பயணத்தின் பாதையில் ஆணாதிக்கமும் கூடவே பயணம் செய்தது. அதனால் சிறுமி முதல் வயோதிப மாது வரை ஆணாதிக்கம் தனது கைவரிசையைக் காட்டித் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டே வந்தது, வருகிறது. பெண் விடுதலை என வாய் உச்சரித்தாலும், ஆணாதிக்கத்தின் முன் பெண் தோற்றுப்போய் நிற்பது நிதர்சன உண்மை. பெண்கள் மீதான அடக்குமுறைகளும், வன்புணர்வுகளும் இன்னமும் அதிகரிக்கின்றனவே தவிர முற்றுப்புள்ளியாகவில்லை.

ஆனால் பெண்கள் இல்லாமல் ஆண்களால் வாழ முடியாது. ஒரு குடும்பம் கோயிலாக பரிசுத்தப்படவேண்டுமானால், பெண் தெய்வமாக அங்கு கொலு இருக்க வேண்டும். ஒருவன் மனிதனாக வாழ வேண்டுமெனில், பெண்ணின் அன்பால் ஆளுமை செய்யப்பட வேண்டும். சமுதாயம் ஆரோக்



கியமடைய வேண்டுமானால், பெண்ணின் சக்தியானது பல முனைகளுக்கூடாக சேவையாக வழங்கப்பட வேண்டும். எனவே, தனிமனிதனுக்கும் சரி, குடும்பத்துக்கும் சரி, சமுதாயத்துக்கும் சரி, பெண்ணினது அன்பும், அரவணைப்பும், சேவையும் கட்டாயத் தேவைகளாகும். இது மறுக்க முடியாத யதார்த்தம். பெண்பிள்ளை பிறந்தால் கள்ளிப்பால் கொடுத்து, நெல்மணி வாய்க்குள் போட்டு சாகடித்த காலம் போய், பெண்பிள்ளைகளே மகாலட்சுமிகள் என்று கூறுமளவுக்கு பெண்களின் மகத்துவம் உணர்ந்து கொள்ளப்பட்ட இந்த வேளை, ஈனப்பாவிகளின் ஆணாதிக்க, அருவருக்கத்தக்க செயல்கள் பெண்ணினத்தை உலுப்புகிறது. பெண் விடுதலைக்கு சவாலாக இடம்பெறுகின்ற பாலியல் வன்முறைகளும், வன்புணர்வுகளும் பெண்மைக்கு எதிரான எச்சரிக்கைகளே.

பெண்களுக்கு விடுதலை வேண்டும். அவர்கள் சுயமாக வாழ வேண்டும். ஆண்களைப் போலவே தாயின் வயிற்றில் உருவாகி பத்து மாதங்களின் பின் உலகுக்கு வந்தவர்கள் பெண்கள். பெண்மை, தாய்மை இரண்டினாலும் ஆண்களை விட மேலானவர்கள் பெண்கள். ஆண், பெண் என இருபாலாரையும் படைத்த இறைவன், அந்தரங்கங்களையும் அவர்கள் உடலில் படைத்தான். இவற்றை உணர்ந்து கொண்ட மனிதன் வேட்டை யுகத்தில் இருந்து முன்னேறி மனித வாழ்வுக்கு அர்த்தம் கொடுக்கவே கணவன், மனைவி என சமூக அந்தஸ்தை திருமணம் மூலம் வழங்கி கட்டுப்பாட்டுக்குள் வரையறை செய்தான். கட்டுப்பாட்டுடன் வாழும் மனிதன் வாழ்வாங்கு வாழ்வான். கட்டுப்பாட்டை தூக்கி எறிபவன் காட்டுமிராண்டியாகத்தான் வாழ்வான். இந்தக் காட்டுமிராண்டிகளின் அராஜகமே வன்புணர்வுகள். பெண்ணின் சுகத்தைக் காட்டுமிராண்டித்தனமாக அனுபவிப்பதும் அனுபவித்து முடிவில் கொலை செய்வதும் இன்று சர்வசாதாரணமாகி விட்டன. இந்த ஆணாதிக்கச் சிந்தனாவாதிகள் தாய், சகோதரி, மனைவி, மகள் என்கிற பெண்மையின் அடுக்குகளை தரிசிப்பவர்கள்தான்.

வித்தியாவின் கொலைக்குப் பின்னராவது பாலியல் வன்புணர்வாளர்கள் ஓய்ந்தார்களா? ஆர்ப்பாட்டங்களும், பேரணிகளும் கண்ணீரோடும் வேதனையோடும் தொடர்ந்தவேளை, வேறு வேறு பாலியல் வன்முறைகளும், வன்புணர்வுகளும் அரங்கேறிக் கொண்டேயிருந்தன. பாலியல் வன்முறைகள், துடிதுடிக்க கொலை செய்யப்பட்ட பெண்பிள்ளைகள், சிறுமிகள் எத்தனை பேர்? கொஞ்சம் கூட ஈவிரக்கமின்றி வன்புணர்வு செய்யும் ஆண்களால் ஆண்மைக்கே பேரவலம். ஆண்மை என்றால் வீரம் எனத் திமிர் கொள்ளும் ஆண்கள் பற்றைக்குள்ளும், பாழடைந்த வீட்டுக்குள்ளும் எதற்காகப் பெண்களை வன்புணர்வு செய்கிறார்கள்? இவர்களா வீரர்கள்? வெறும் கோழைகள்.

எனவே, பெண்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். வன்புணர்வாளர்களுக்கு உரிய அவமதிப்பு அளிக்கப்பட்டு அதியுச்ச தண்டனை வழங்கப்பட வேண்டும். வன்புணர்வு செய்து, கொலையும் செய்த பின்னர் சாவுத்தண்டனை மூலம் அவர்களைக் கொல்வதில் தப்பேதுமில்லை. பெண்களுக்கான பாதுகாப்பு என்பது வன்புணர்வாளர்களின் சாவுத் தண்டனையில்தான் பரிபூரணமாகக் கிடைக்கும். வித்தியாவின் கொலையின் பின்னரும்கூட பல வன்புணர்வாளர்கள் தம் மைப் பதிவு செய்துள்ளார்கள். இவர்கள் துணிந்துதான் செய்கிறார்கள். எனவே, அவர்களுக்கான தண்டனையானது பெண்களைத் திரும்பிப் பார்க்கவே முடியாத அளவுக்கு அமைந்தால் பெண்கள் சுயமாக வாழ முடியும்.

# உங்கள் நிறம் எந்த நிறம்?

நிறம் என்பது ஒருவித மாயை. நீங்கள் எந்த உடை அணிகிறீர்கள், அதன் விலை என்ன என்பதல்ல முக்கியம். அது பிறரைக் கவர்வதுமில்லை. அணிகின்ற உடையின் நிறம் தான் மற்றவர்களை ஈர்க்கிறது. ஆயிரக் கணக்கில் கொட்டிக் கொடுத்து வாங்கிய உடையானாலும், அது உங்களுக்கேற்ற நிறமாக இல்லாவிட்டால், யாருமே உங்களைத் திரும்பிப் பார்க்கமாட்டார்கள். யார் யாருக்கு என்ன நிறம் பொருந்தும், எந்த மாதிரிச் சந்தர்ப்பங்களுக்கு என்ன நிறம் உடுத்தலாம்? இதோ சில குறிப்புக்கள்:



ஒவ்வொருவருக்கும் ஒரு நிற ஈர்ப்பு உண்டு என்பது தெரியுமா? உங்கள் பிறந்த திகதியை வைத்து, உங்களுக்கான நிறத்தை நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

உதாரணத்துக்கு:– உங்கள் பிறந்த நாள் 04.03.1981 என வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் பிறப்பு எண் 8. எட்டு என்பது வெள்ளி நிறத்துக்கான எண். இப்படி 1 முதல் 9 வரையிலான எண்களுக்கு ஒவ்வொரு நிறம் உண்டு. (1–சிவப்பு, 2– ஒரேஞ், 3–மஞ்சள், 4– பச்சை, 5– நீலம், 6– கரு நீலம், 7–ஊதா, 8– வெள்ளி நிறம், 9– வெளிர் சிவப்பு)

உங்கள் பிறந்த நாளுக்கான நிறம் உங்களுக்கு அதிர்ஷடமானது மட்டுமில்லை, உங்கள் நடத்தையையும் சொல்லிவிடுமாம்.

**அதன் படி....**


* சிவப்பு– தன்னிச்சையானவர்கள், ஆதிக்க குணம் உடையவர்கள். சவால் விரும்பிகள், எதிலும் சுயமான முடிவையே எடுப்பவர்கள்.
* ஒரேஞ் – சுறுசுறுப்புத் திலகங்கள். வெற்றி இவர்களை விடாது விரட்டும். புதிய சிந்தனை உடையவர்கள்.
* மஞ்சள்– தோழமையானவர்கள். சந்தோஷமானவர்கள். நல்ல குணமுடை யவர்கள்.
* பச்சை – பழமைவாதிகள், புத்திசாலிகள், நேர்மையானவர்கள்.
* நீலம்– எடுக்கிற முடிவில் உறுதியானவர்கள். ஒழுக்கமானவர்கள் எனப் பெயரெடுக்க விரும்புவார்கள். பொறுமையும், அமைதியும் வாய்க்கப் பெற்றவர்கள்.
* கருநீலம்– திருப்தியானவர்கள். பக்குவமானவர்கள், கடின உழைப் பாளிகள்.
* ஊதா– பிறரைக் கவர்பவர்கள், தாராள குணமுள்ளவர்கள், கிரகிப்புத்திறன் அதிகம் உள்ளவர்கள்.
* வெள்ளி – மிக உயர்ந்த அந்தஸ்தில் இருந்தாலும், மிகவும் சாதாரணமாகவே இருப்பார்கள். பழக இனிமையானவர்கள்.
* வெளிர் சிவப்பு– மென்மையானவர்கள், அப்பாவிகள், இளகிய மனம் படைத்தவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# பொலன்னறுவை

இலங்கையின் வடமத்திய மாகாணத்திலுள்ள ஒரு நகரம் பொலன்னறுவை ஆகும். தற்பொழுது இது பொலன்னறுவை மாவட்டத்தின் தலைநகராகவுள்ளது. எனினும் கி.பி. 10 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 13 ஆம் நூற்றாண்டுவரை பண்டைய இலங்கையின் தலைநகரமாகப் பெயரும், புகழும் பெற்று விளங்கியது இந்த நகரம். அநுராதபுரத்துக்கு பாதுகாப்பு வழங்குமொரு அரணாக விருந்த இந்த நகரை சோழர் இலங்கையின் தலைநகராகத் தெரிவு செய்தனர். பின்னர் இந்த நகரம் சிங்கள மன்னர் காலத்திலும் இலங்கையின் தலைநகரமாக விளங்கி யது. இந்த நகரைச் சுற்றிப் பல பெரிய நீர்ப்பாசனக் குளங்கள் மன்னர்களால் கட்டப்பட்டுள்ளன. இவை பொலன்னறுவையில் வாழ்ந்த பெருந் தொகையான மக்களின் உணவுத் தேவைக்காக, சுற்றியுள்ள பரந்த பிரதேசத்தில் விவசாயம் செய்வதற்காக பயன்பட்டன. சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் இந்தக் குளங்கள் இன்னமும் பயன்பாட்டில் உள்ளன. இங்கே பலபெரிய பௌத்தவிகாரைகளும், இந்துக் கோயில்களும் உள்ளன. கைவிடப்பட்ட பின்னர், பாழடைந்து, கிடந்த இந்தப் பண்டைய நகரின் இடிபாடுகள், 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில், தொல்பொருளாய்வாளர்களினால் வெளிக் கொணரப்பட்டன. அரண்மனைகள், மாளிகைகள், கோயில்கள், பௌத்த பிக்குகளுக்கான வசிப்பிடங்கள், மருத்துவமனைகள், பயணிகள் தங்குமிடங்கள், மற்றும் அலங்காரத் தடாகங்கள் முதலியவற்றின் இடிபாடுகள், நகரின் அந்தக் காலத்தின் வளத்துக்குச் சாட்சியாக உள்ளன.


# இரண்டு பக்கம் வேண்டும்



தந்தை ஒருவர் ஆர்வத்துடன் தமக்கு விருப்பமான பருவ இதழை வாசித்துக்கொண்டிருந்தார். அப்போது அவரது சின்ன மகள் அவரை ஓயாது நச்சரித்து கொண்டிருந்தாள். சின்ன மகளின் நச்சரிப்பில் இருந்து தன்னை விடுவித்துக்கொள்ள அவர், உலக வரைபடம் இருந்த ஒரு பேப்பரை எடுத்து அதனைத் துண்டு துண்டாகக் கிழித்து அதனை மகளிடம் கொடுத்தார். அந்த உலக வரைபடத்தை ஒன்றாக இணைக்கும்படி கூறிவிட்டு மீண்டும் இதழுக்குள் ஆர்வமாகத் தலையைச் செருகிக் கொண்டார் அவர். சில நிமிடங்கள் இருக்கும் சின்ன மகள், மிகச் சரியான உலக வரைபடத்தோடு அப்பாவின் முன் நின்றாள். ஆச்சரியத்தில் அகல வாய் திறந்த தந்தை, "எப்படி உன்னால் இவ்வளவு சீக்கிரம் செய்ய முடிந்தது?" என்று கேட்டார். அதற்கு சின்ன மகள்" ஓ அதுவா! பேப்பரின் அடுத்த பக்கத்தில் அமிர்தாப் பச்சனின் முகம் இருந் தது, நான் அவரது முகத்தைச் சரிசெய்து ஒட்டினேன். நீங்கள் கேட்ட உலகப்படம்தானாக வந்துவிட்டது என்று சொன்னாள் அந்தச் சின்னஞ் சிறிய குழந்தை. ஆம். வாழ்வின் ஒவ்வொரு சிக்கல்களுக்கும், பிரச் சனைகளுக்கும் இரண்டு பக்கங்கள் உள்ளன. அனேகமான தடவைகள் சிக்கல்களின் அடுத்த பக்கத்தைப் பார்க்காமல் அல்லல்படுகின்றோம். விவேகானந்தர் பின்வருமாறு அழகாக சொன்னார். "வாழ்வில் எப் போதும் இரண்டு பக்கம், இரண்டு கதவுகள் உண்டு. நாம் அடைபட்ட கதவை மட்டுமே பார்த்துக்கொண்டிருக்கின்றோம். எனவே எக்காரியங்களைச் செய்யும் முன்னரும் அதன் நன்மையையும் தீமையையும் நாம் சிந்திக்க வேண்டும்".





# விவசாயியின் கோழி



சந்தைக்குப் போன விவசாயி ஒருவர், தனது தோட்டத்தின் காய்கறிகளை விற்று விட்டு வரும் வழியில் புதிதாகக் கோழி ஒன்றை வாங்கி வந்தார். வீட்டுக்கு வந்த கோழிக்கு அது புதிய இடம் என்பதால் பயந்து பயந்து இரைகளைத் தேடி தின்றுக் கொண்டிருந்தது. அதனைக் கவனித்த விவசாயி, கோழியை கையில் பிடித்து பாசத் துடன் தடவி இரையூட்டினார். நாள்கள் கடந்தன. கோழியும் வளர்ந்து பெரிதாகியது. விவசாயியின் கோழியைப் போலவே பக்கத்து வீட்டில் ஒரு கோழி இருந்தது. அந்தக் கோழி விவசாயியின் கோழிக்கு வைக்கும் உணவையெல்லாம் திருடித் தின்று வந்தது. ஒருநாள் இதைப் பார்த்து விட்ட விவசாயியின் கோழி, சண்டை போட ஆரம்பித்தது. இரண்டும் கடுமை யாக மோதிக் கொண்டன. இதைப் பார்த்த விவசாயி, பக்கத்து வீட்டுக் கோழியை விரட்டியடித்தார். அதன் பின்னர் பக்கத்து வீட்டுக் கோழி, விவசாயியின் கோழியை எப்போதும் கிண்டல் அடித்துக் கொண்டும், வம்பு பேசிக் கொண்டும் சண்டைக்கு இழுத்துக் கொண்டும் இருந் தது. இதை எல்லாம் காதில் வாங்கிக் கொள்ளாமல் அமைதியாக இருந்தது விவசாயியின் கோழி.

சிறிது நாள்கள் கழித்து விவசாயியின் கோழி முட்டை இட்டுக்குஞ்சு பொரித்தது. அதுதன்னுடைய கோழிக் குஞ்சுகளைக் கண்ணும் கருத்துமாக பாதுகாத்து வந்தது. அதைப் பார்த்த பக்கத்து வீட்டுக் கோழி மீண்டும் கிண்டல் செய்து, கோப மூட்டி வம்புக்கு இழுத்தது.

ஒரு கட்டத்தில் பொறுமையிழந்த விவசாயியின் கோழி சண்டை போட ஓடியது. ஓடிய வேகத்தில் கால்களை தூக்கியடித்து, சண்ட போட ஆரம்பித்தது. அந்த நேரம் தனியே நின்ற குஞ்சுகளில் இரண்டு குஞ்சுகளைக் கழுகு தூக்கிச் சென்றது. கோழிக் குஞ்சுகள் கதறும் சத்தம் கேட்ட தாய்க் கோழி, சண்டையை விட்டுவிட்டு ஓடிச் சென்றது. ஆனால் அதற்குள் கழுகு குஞ்சுகளை உயரமாக தூக்கிச் சென்றுவிட்டது. ஏனைய குஞ்சுகளைச் சிறகுகளுக்குள் வைத்து காத்தது விவசாயியின் கோழி. தனது கோபத்தால் இரண்டு பிள்ளைகளை இழந்து விட் டோமே என்று நினைத்து கண்ணீர் விட்டு அழுதது.

கவலையாக இருந்த விவசாயியின் கோழியை மீண்டும் ஏளனமாகப் பேசி கிண்டல் செய்தது பக்கத்து வீட்டுக் கோழி, என்ன செய்வதென்று தெரியாமல் அமைதி யாய் இருந்தது விவசாயியின் கோழி. அடுத்த நாள் பக்கத்து வீட்டுக் கோழி கதறும் சத்தம் கேட்டு, என்ன சத்தம் என்று விவசாயியின் கோழி பார்த்தது. அங்கே பக்கத்து வீட்டுக் கோழியை கொன்று கறி சமைப்பதற்காகத் தூக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவனால் தாக்கப்பட்டவர் வைத்தியசாலையில் தஞ்சம்

தென்மராட்சி, ஜூலை 28

கணவனால் தாக்கப்பட்ட குடும்பப் பெண் தனது இரண்டு பிள்ளைகளுடன் சாவகச்சேரி மருத்தவமனையில் தஞ்சம் கோரியுள்ளார். வீட்டுக்குச் செல்ல அச்சம் தெரிவித்த பெண், தன்னையும் பிள்ளைகளையும் பாதுகாப்பான இடத்தில் தங்கவைக்குமாறும் கேட்டுள்ளார்.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் பெண்கள் பாதுகாப்பு அலுவலர் மருத்தவமனைக்கு வந்து முறைப்பாடு எடுக்க முடியாதெனத் தெரிவித்ததையடுத்து பொலிஸ் பாதுகாப்புடன் அம்புலன்ஸில் பிரதேச செயலகத்துக்கு இவர்களை அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தினமும் மதுபோதையில் வரும் தனது கணவர் தன்னையும் பிள்ளைகளையும் அடித்த துன்புறுத்துவதாகத் தெரிவித்த பெண், தான் வீட்டுக்குச் சென்றால் கணவர் கொலை செய்து விடுவார் என அச்சம் தெரிவித்து தன்னைப் பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்குமாறும் கேட்டுள்ளார்.

மதுபோதையில் வரும் கணவர்களால் தாக்கப்பட்ட ஐந்து பெண்கள் கடந்த வாரம் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-9)

# ஆங்கில மொழித் தின நிகழ்வு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில்

தென்மராட்சி, ஜூலை 28

வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான மாகாண மட்ட ஆங்கில மொழி தின நிகழ்வுகள் எதிர்வரும் 29, 30 ஆகிய திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் மாகாணத்தில் உள்ள அனைத்து வலயங்களைச் சேர்ந்த மாணவர்களும் கலந்துகொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மாகாண நிலை எழுத்தாக்கப் போட்டிகள் ஓகஸ்ட் முதலாம் திகதி வலய ரீதியாக பின்வரும் இடங்களில் இடம்பெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட வலயங்களின் மாணவர்களுக்கு யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மட மகா வித்தியாலயத்திலும், மன்னார் வலய மாணவர்களுக்கு மன்னார் புனித சேவியர் ஆண்கள் கல்லூரியிலும், கிளிநொச்சி முல்லைத்தீவு வலயங்களின் மாணவர்களுக்கு கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்திலும், வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, துணுக்காய் ஆகிய வலயங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு வவுனியா சைவப்பிரகாச மகா வித்தியாலயத்திலும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

# ஆக்கப் பொருள் கண்காட்சி இன்று

தென்மராட்சி , ஜூலை 28

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் ஆக்கப் பொருட் கண்காட்சி இன்று மு.ப. 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் திருமதி சி.கந்தசாமி தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் கலந்து கொள்வார். (த-9)

# 60 ஆண்டுகளாக செய்தது என்ன?

## கேள்வி கேட்கிறார் இரா. செல்வவடிவேல்

60 ஆண்டுகாலம் ஏகப் பிரதிநிதித்துவம் என்ற போர்வையில் வடக்கு – கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவம் செய்து நாடாளுமன்றம் சென்றவர்கள் இன்றுவரை தமிழ் மக்களுக்காகச் சாதித்தது என்ன?

இவ்வாறு கேள்வி எழுப்பினார், ஈபிடிபி கட்சியின் சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரான இரா. செல்வவடிவேல்.

திருநெல்வேலி பாற்பண்ணை வீதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார் என அவர் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் அவரது உரை குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

3 தசாப்தங்கள் பின்னோக்கி, திம்புப் பேச்சு அதனடிப்படையில் தீர்வு என்ற கணக்கில் இப்போது நிற்கிறோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களுடைய வரலாற்றினைப் பின்னோக்கி எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

வரலாற்றை ஒரு கணம் புரட்டிப் பாருங்கள். ஈபிடிபி கட்சி 3 நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்துக் கொண்டு யாழ். மாவட்டத்தில் செய்த பணிகள் மக்களுக்கே தெரியும்.

நாங்கள் அபிவிருத்தி செய்வோம் வாருங்கள் எனக் கேட்டபோது, அபிவிருத்தி வேண்டாம் முதலில் பிரச்சினைக்குத் தீர்வு என்று கூறியவர்கள், இன்று அரசுடன் இரண்டறக் கலந்து தங்களை மட்டும் அபிவிருத்தி செய்கிறார்கள். மக்கள் அபிவிருத்தி என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மிகவும் பிடிக்காத கொள்கை.

வடக்கு மாகாண சபை வந்து இன்று இரண்டு வருடங்களாகிவிட்டன. ஒரு போராளிக்காவது கூட்டமைப்பினர் வாழ்வாதாரம் கொடுத்தார்களா? கடந்த அரசில் நாங்கள் பங்குகொண்டபோது வடக்கு கிழக்கு எங்கும் போராளிகள் புனர்வாழ்வு பெற்றார்கள். கல்வி பெற்றனர். வேலைவாய்ப்புப் பெற்றனர்.

இன்று காணாமற்போனோர் தொடர்பாக அதிக கரிசனை காட்டும் கூட்டமைப்பினர் அவர்களில் ஒருவரையாவது தேடிக் கண்டுபிடித்தார்களா? நீதிமன்றத்தின் மூலம் ஒரு கைதியையாவது இலவசமாக விடுதலை செய்தார்களா? எனது உயிரினும் மேலான தமிழம் பேசும் மக்களே! நாங்கள் செய்வதைச் சொல்பவர்கள். மக்களை ஏமாற்றிப் பிழைப்பு நடத்தும் தேவை எமக்கு இல்லை.

இந்தத் தேர்தலில் உங்கள் மனச்சாட்சிப்படி வாக்களியுங்கள் – என்றார். (உ)

# மக்களை வறுமையிலிருந்து மீட்டெடுப்பதே எமது இலக்கு

## சுயேச்சைக் குழு ஆறின் தலைவர் தெரிவிப்பு

முதன்மைக் கட்சிகளுடைய தேர்தல் அறிக்கைகள், அரசியல் தீர்வைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்க, போரினால் பாதிப்புக்குள்ளான மக்களை முதலில் வறுமை கோட்டிலிலிருந்து மீட்டெடுப்பதை முதற் பொருளாகக் கொண்டே எமது தேர்தல் அறிக்கை அமையப்பெறும். இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் பரஸ்பர நல்லுறவையும் ஏற்டுத்தும் வகையிலேயே எங்களுடைய செயற் திட்டங்கள் அமையவுள்ளன.

இவ்வாறு தெரிவித்தார் ஆறாம் இலக்க சுயேச்சை குழுவில் போட்டியிடும் வேட்பாளர் வே. கணேஸ்வரன்.

செம்பியன்பற்று சன சமூக நிலையத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் நேற்று அவர் உரையாற்றினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் சமூக அரசியல் அரங்கில் ஒவ்வொரு தேர்தல் காலங்களிலும் எப்பொழுதும் பேசப்படும் விடயங்களே தற்போதும் பரப்புரை செய்யப்படுகின்றன. கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன கதைகளைக் கேட்டே தான் இம்முறையும் வாக்களிக்கப் போகின்றோமா? அல்லது நாங்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் மூலமாக புதிய மாற்றங்களை கொண்டு வரக்கூடிய பரப்புரைகளை கேட்டு சிந்தித்து வாக்களிக்கப் போகின்றோமா? நமது தீர்ப்பு புதிய சரித்திர திருப்பமுனையைக் கொண்டு வரக்கூடியதாக இருக்க வேண்டும்.

இங்கு எத்தனையோ அரசியல் சாணாக்கியமிக்க தலைவர்கள் இருந்த போதிலும், சரிந்து போய் உள்ள குடாநாட்டை கட்டி எழுப்ப வேண்டிய பொறுப்பை யாரும் நிறைவேற்றவில்லை. அந்தப் பொறுப்பு எல்லோருக்கும் இருக்கிறது. கடந்த காலத்தில் உங்கள் பிரதிநிதிகளாக நீங்கள் நாடாளுமன்றம் அனுப்பியவர்களால் என்ன பயனைக் கண்டுள்ளீர்கள் எனச் சற்று சிந்தித்துப் பாருங்கள். வாக்குப் போடும் அனைவரும் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

வரலாறு காணாத இறந்த காலத் தடங்கள் நம்மை உயிர்ப்பிக்க வேண்டும். இன்னுமின்னும் விளங்காதவர்களாகவும் புரியாதவர்களாகவும் நாம் இருக்க நியாயமே இல்லை. தமிழ் சமூகம் இன்னுமின்னும் முகாம் வாழ்க்கையிலோ கடுமையான வறுமைக் கோட்டிலோ வாழ வேண்டி இருக்கும் சூழல் மாறப்படவேண்டும்.

எந்தத் தலைமைத்துவமாக இருந்தாலும் ஒரே பல்லவியைப் பாடிக் கொண்டிருக்கிற ஒப்பாரிப் பாடல்களே இன்னும் எமது காதுகளில் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன.

தமிழர்களாகிய நாங்கள் குதர்க்கமான கதைகளைக் கேட்டு எங்களுடைய வாக்குகளை வீண்விரயம் செய்யாமல் எல்லாவற்றையும் மறந்து ஒரு புதிய உலகை நோக்கிப் பயணம் செய்ய வேண்டும். அதற்காக எமது சுயேச்சைக் குழு கேடயம் சின்னத்தில் களமிறங்கியுள்ளது. நாங்கள் எல்லா இன மக்களையும் ஒன்றிணைத்துக் கொண்டு யாத்திரை செல்லப் புறப்பட்டுள்ளோம். ஒன்றுபட்டால்தான் எமது பலம் புலப்படும். எமது சரியான தீர்ப்பைப் பொருத்தமாக வழங்க முடியுமாயின் எம்மை யாரும் இனிமேல் ஏமாற்ற முடியாது – என்று அவர் மேலும் தெரிவித்தார். (உ-300)

# புலமைப்பரிசில் வழிகாட்டல் கருத்தரங்கு

தென்மராட்சி, ஜூலை 28

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு சாவகச்சேரி பிரதேச இளைஞர் சம்மேளனத்தினர் தென்மராட்சி கல்வி வலயத்துடன் இணைந்து வழிகாட்டல் கருத்தரங்கினை எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள [illegible] நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளனர். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 7ஆம் மாத நினைவஞ்சலி



அருளாநந்தம் சபேசன்

தோற்றம் 04.11.1980

மறைவு 18.01.2015

ஆழக் கடலோடித் தேடிய முத்தே ......
"அம்மா" என்றழைத்து ஆனந்தம் தந்தவனே......
"நோய்" அழைத்து போனவனே......
நான் அழைப்பது கேட்கலையோ......

காலையடி தெற்கு, பண்ணாகம்.

தாயார் அருளாநந்தம் ஜெயலட்சுமி.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னையா தியாகேஸ்வரன்

தோற்றம் 25.10.1948

மறைவு 28.07.2014

எட்டாத தூரம் சென்று ஆண்டு ஒன்று ஆனதோ? அன்பான கணவனாய், பாசமான தந்தையாய், பண்பான மாமனாக, பிரியமான பேரனாக நீங்கள் வாழ்ந்த காலத்தை நாங்கள் நித்தம் அசைபோட்டுப் பார்க்கின்றோம்.
உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விஷ்ணு நிவாஸ் கரணவாய் மத்தி, கரவெட்டி.

திருமதி வள்ளிப்பிள்ளை மற்றும் குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்

தோற்றம் 10 * 04 * 1934



மறைவு 28 * 06 * 2015

திருமதி தெய்வானை தில்லையம்பலம்
(வள்ளிப்பிள்ளை)

எம்மையெல்லாம் பெற்று வளர்த்து ஆளாக்கி
கல்வி கேள்விகளில் வல்லவர்களாக்கி
நற் பண்புகள் பலவும் புகட்டிய -எமது
அன்புத் தாயே உம்மை என்றும் துதிக்கின்றோம் நாம்.

எமது குடும்ப குல விளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.07.2015) செவ்வாய்க்கிழமை காலை 5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத்தொடர்ந்து நடைபெறவிருக்கும் சபிண்டீகரண நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

கிணற்றடி வைரவர் கோயிலடி, புலோலி தென்மேற்கு, புலோலி.

(c 18172)

குடும்பத்தினர்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# போரை முடித்தது முப்படையினரே

## மஹிந்த அல்ல என்கிறார் மங்கள

கொழும்பு, ஜூலை 29
நாட்டில் இடம்பெற்ற போரை முடிவுக்குக் கொண்டுவந்தது முப்படையினரே தவிர, மஹிந்த அல்லவென வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.
வெலிகம பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.
போரை வெற்றிகொள்வதற்கான முயற்சியை இந்த நாட்டை ஆண்ட ஒவ்வொரு அரசும் முன்னெடுத்த என்று தெரிவித்த அவர், முல்லைத்தீவில் இறுதியாக இருந்த விடுதலைப் புலி உறுப்பினர்களை ராஜபக்ஷ தோற்கடித்து போர் வெற்றியை தனதாக்கிக் கொண்டார் என்றும் தெரிவித்துள்ளார்.
எனினும் போர் வெற்றியின் பயன்களை ராஜபக்ஷ குடும்பத்தினர் மட்டுமே அனுபவித்து வந்ததாகவும், மக்கள் அதன் பிரதிபலன்களை அடையவில்லையெனவும் குறிப்பிட்டார்.
போர் வெற்றிகொள்ளப்பட்டாலும் நாட்டில் உண்மையான சமாதானம் ஏற்படுத்தப்படவில்லையென தெரிவித்த அவர், தற்போதைய அரசின் ஆட்சியில் அதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.
(ற)

# எதிர்பார்ப்புகளுக்கு அமைவாக ஐ.ம.சு.மு. தேர்தல் விஞ்ஞாபனம்

## சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 28
மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு அமைவாகவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் அமையப் பெற்றுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.
இதேவேளை, தாமரைத் தடாகம், பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம் ஆகிய இரண்டில் ஒன்றிலேயே நாங்கள் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடவிருந்தோம். இறுதிநேரத்தில் அதற்கான அனுமதி மறுக்கப்பட்டதுடன் பின்னர் அவசரமாக ஏற்பாடுசெய்துள்ள ஹென்றி பெட்ரிஸ் மைதானத்திலும் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.
கொழும்பில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத் தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைச் சுட்டிக்காட்டியிருந்தார்.
அவர் அங்கு மேலும் கூறியிருந்ததாவது:-
தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமைகளால் மக்கள் எதிர்பார்க்கும் விடயங்கள், இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம், புரிந்துணர்வு, தேசிய பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி உள்ளிட்ட பல முக்கிய விடயங்களை உள்ளடக்கியதாக ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் அமையப் பெற்றுள்ளது.
நாங்கள் ஆரம்பத்தில் 27ஆம் திகதி வெளியிடுவதற்கான தயார்படுத்தல்களையே செய்தோம். அதற்காக தாமரைத் தடாகம், பண்டாரநாயக்க மா நாட்டு மண்டபம் என்பவற்றைக் கோரியிருந்தோம். இருந்தபோதிலும் எமக்கு அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை. பின்னர் நாங்கள் தற்போது ஹென்றி பெட்ரிஸ் மைதானத்தில் நாளை (இன்று) காலை 9 மணிக்கு வெளியிடவுள்ளோம். இந்த மைதானத்துக்கு வழங்கப்படும் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.
எமது தேர்தல் நடவடிக்கை களுக்கான தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலேயே தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படும் என்றார்.
இதன்போது, கட்சித் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைக்கப்படவில்லையா? என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பியபோது, அவர் தற்போது நாட்டில் இல்லாமையால் அவருக்கான அழைப்பு விடுக்கப்படவில்லை" என்றார் சுசில் பிரேமஜயந்த.
(ற-சி)

# ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

தென்மராட்சி, ஜூலை 28
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 5 வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று பி.ப. 2 மணிக்கு வலய கேட்போர் கூடத் தில் இடம்பெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் அறிவித்துள்ளார்.
(த-9)

# சாவகச்சேரி இந்துவின் முத்தமிழ் விழா இன்று

தென்மராட்சி, ஜூலை 28
சாவகச்சேரி இந்துக் கல்லாரியின் முத்தமிழ் விழா இன்று மு.ப.9.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.
கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக ஓய்வுநிலை வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும் எழுத்தாருமான கே.ஆர்.டேவிட்டும் சிறப்ப விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய தமிழ் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி க.ஶ்ரீதரனும் கலந்து கொள்வர்.
நிகழ்வில் மாணவர்களின் நடனம் , பேச்சு, நாடகம், நாட்டிய நாடகம், இசை நாடகம் அகியவை இடம்பெறும்.
(த-9)

# தமிழ்க் கூட்டமைப்பின் விஞ்ஞாபனம் சிங்கள மக்களிடம் முக்கிய இடம்

## இந்திய ஊடகம் செய்தி

புதுடில்லி, ஜூலை 28
தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்பொதுத் தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனம் சிங்கள மக்கள் மத்தியில் முக்கிய விடயமாக மாறி வருவதாக இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இது குறித்து அந்த ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுய நிர்ணய உரிமைக்கு குரல்கொடுத்துள்ளதுள்ளமை சுதந்திர தமிழீழத்திற்கான கோரிக்கையாக சிங்கள சமூகம் அர்த்தப்படுத்த தொடங்கியுள்ளது.
தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு 13ஆவது திருத்தத்தை நீக்கிவிட்டு மாகாண சபைகளுக்கு அதிகளவு அதிகாரங்களை வழங்கும் சமஷ்டி முறைக்கு கோரிக்கை விடுத்துள்ளது.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் தமிழ்ப் பிரிவினைவாதம் குறித்து அச்சம் வெளியிட தொடங்கியுள்ளனர்.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு நெருக்கமான கட்சிகளை அதன் தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து தெளிவுபடுத்துமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு வேண்டுகோள் விடுக்கத் தொடங்கியுள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தன்னை சிங்கள பௌத்த மக்களிடம் பலப்படுத்திக் கொள்ள உதவும் எனவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கடும் பரப்புரை காரணமாக பிரதமர் ரணில்விக்கிரமசிங்க ஒற்றையாட்சியின் கீழ் மாகாணசபைகளிற்கு அதிகாரத்தை வழங்க வேண்டும் என்பதே தனது கட்சி நிலைப்பாடு எனத் தெரிவித்துள்ளார்.
வடக்கு-கிழக்கு மாகாணசபைகளை இணைக்கவேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் காணப்படும் இன்னொரு சர்ச்சைக்குரிய விடயமாகும்,முஸ்லிம் கட்சிகள் இதனை பிரச்சினையாக கருதுகின்ற.
நல்லாட்சிக்கான ஐக்கிய தேசியக் கட்சி தனது நிலைப்பாட்டை இந்த விடயத்தில் தெளிவுபடுத்தாவிட்டால் கிழக்கு மாகாண முஸ்லிம்களில் ஒரு பிரிவினர் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களிக்கலாம்.
எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ்பிரேமச் சந்திரன் தனது கட்சி முந்திய தேர்தல் விஞ்ஞாபனங்களில் இருந்து வேறுபட்டதாக எதனையும் தெரிவிக்கவில்லை என குறிப்பிட்டார், என இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது.(ற)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சூசை மரியம்மா



சென் ஜேம்ஸ் வீதி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சூசை மரியம்மா நேற்று (27.07.2015) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற பிலிப்பு சூசையின் அன்பு மனைவியும் ஜேம்ஸ், யேசுதாசன், மேரிராணி, கத்தரின்மனோன்மணி, காலஞ்சென்ற ஜோசப், லூட்ஸ் மேரி, இராசநாயகம், மேரி வுளோரன்ஸ்(ஆசிரியை, இளவாலை கன்னியர் மடம் ம.வி) ஆகியோரின் அன்புத் தாயும், கொன்சி, செல்வராணி, இருதயநாதர், சந்திர சேனா, ராஜேஸ்வரி(ஜேர்மனி), ஜோண் பொஸ்கோ, ஜெயச்சந்திரா ஆகியோரின் மாமியும் இ.அ. தேவறாஜன், சலூரன்(பிரான்ஸ்), ஜெயசீலன், சுகிர்தறாஜன்(பிரான்ஸ்), சில்வெஸ் ரன், ஹமில்ரன், நிரஞ்சன், சுஜிதா, நிரோஸ்(ஆஸ்திரேலியா), றாஜிகா, நிமல், சங்கர், றொபேட், டனி வோல்டர், றூபினா, அல்வீனா, ஜூடினா, நிதர்சினி, நிலோஜன், டில்சானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அல்பிறின் ஜெய்டன், கௌசிகன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்கம் இன்று (28.07.2015) செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித யாகப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சென். ஜேம்ஸ் வீதி,
இளவாலை.
077 977 3650
(c 18173)
தகவல் :-
குடும்பத்தினர்.

## அருளானந்தம் சந்திரகுமாரன்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்பக்கல்லூரி உதவிநூலகர், பிரபல நகைச்சுவை நடிகர்)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் சந்திரகுமாரன் 25.07.2015 சனிக்கிழமை காலமாகி விட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான அருளானந்தம் - பாக்கியலெட்சுமி தம்பதியரின் அன்பு மூத்தமகனும்காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் கோகிலம் தம்பதியரின் பாசமிகு மூத்த மருமகனும் மாலினியின் அன்புக் கணவரும் சுசீலா(கிளி), சிறிகரன், ஜீவாகரன், சுதர்சன்(முருகா), பிறேமா, சர்மா ஆகியோரின் அன்பு மூத்த சகோதரனும் பிருந்தா, தனுசியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுரேஸ்வரன், ஆறுமுகதாசன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் உத்தமபுத்திரன்(செட்டி), ரதி, விமலராணி, சிறிநந்தினி(சூட்டி), பகீரதன், சந்திரகலா, பவானி, நளாயினி, சுரேஸ் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஸாத்வீகா, கீர்த்தனன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2015.07.28) செவ்வாய்க்கிழமை பி.ப 4.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

106/4 , வெற்றியார் ஒழுங்கை,
ஆனந்தன் வடலி வீதி, அரியாலை.
தொலைபேசி இல: 021 321 1393
(63420)
(3.9.6)
தகவல்:
குடும்பத்தினர்.

## விஸ்வலிங்கம் கதிர்காமநாதன்



இல - 9, இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் பழனியாண்டவர் ஒழுங்கை, கோண்டாவில்கிழக்கு, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் கதிர்காமநாதன் 26.07.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - பரிமளம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான காராளபிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சோதிமலர், முகுந்தினி, கேந்திரன், குமுதினி, சுகந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவீந்திரகுமார், அருளானந்தசிவம் லேனிகா, ஜெயபாலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரதீப், ஜனனி, அபிஷன், அனுஷன், கவிஷன், கனிஷன், சங்கீர்த்தனா, திப்ஷனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
தகவல் -
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் - மைத்திரி இடையே இரகசிய ஒப்பந்தம் கைச்சாத்து

*வாசுதேவ குற்றச்சாட்டு*

கொழும்பு, ஜூலை 28
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜனாதிபதி மைத்திரிக்கும் இடையில் இரகசிய ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும், ஜனாதிபதி மைத்திரி அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே செயற்பட்டு வருவதாகவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குற்றஞ்சாட்டியுள்ளார்.
ரணிலை பிரதமராக்கி ஐக்கிய தேசியக் கட்சியின் அரசை அமைப்பதே குறித்த ஒப்பந்தத்தின் நோக்கமென, வாசுதேவ மேலும் தெரிவித்துள்ளார்.
சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
சுதந்திரக் கட்சியை தோற்கடிக்கும் முயற்சியில் ஜனாதிபதி செயற்பட்டு வருவதாகவும், அதனால் சுதந்திரக் கட்சிக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.
அண்மையில் ஜனாதிபதி ஆற்றிய உரையானது அவர் ஐக்கிய தேசிய கட்சிக்கு சாதகமாக செயற்படுகின்றார் என்பதை தெளிவாக காட்டுவதாக வாசுதேவ ஏற்கனவே தெரிவித்திருந்தார். (ற)

# கொழும்பில் சஜித் போட்டியிடாதது தமக்குப் பயந்தே என்கிறார் விமல்

கொழும்பு, ஜூலை 28
தமக்குப் பயந்தே சஜித் பிரேமதாச கொழும்பில் போட்டியிடாமல் அப்பாந்தோட்டையில் போட்டியிடுகின்றார் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.
கொழும்பில் பிறந்த சஜித், அம்பாந்தோட்டையில் போட்டியிட இதுவே காரணமென கூறியுள்ளார்.
பெலியத்த பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே விமல் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
தமக்கு பயந்தே, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அம்பாந்தோட்டையில் போட்டியிடாமல் குருநாகலில் போட்டியிடுவதாக சஜித் பிரேமதாஸ ஏற்கனவே தெரிவித்திருந்தார்.
இதற்கு சவாலாகவே விமல் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.
இதேவேளை மஹிந்தவால் செய்ய முடியாத மாற்றத்தை அன்னப் பறவையால் செய்யமுடியுமென நம்பி, கடந்த ஜனாதிபதி தேர்தலில் மக்கள் அன்னப்பறவைக்கு வாக்களித்து ஏமாந்துபோயுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ற)

# வடக்குக்கு இன்று ஜனாதிபதி வருகிறார்

கொழும்பு, ஜூலை 28
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று கிளிநொச்சிக்கு உத்தியோக பூர்வ பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.
நாட்டில் நாடாளுமன்றத்தேர்தலுக்கான பரப்புரைகள் பரபரப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் ஜனாதிபதியின் வடக்குப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது.
கிளிநொச்சிக்கு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் செல்லும் மைத்திரிபால சிறிசேன மாலை 3.30 அளவில் கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட சதொச விற்பனை நிலையத்தை திறந்து வைக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
கிளிநொச்சிப் பயணத்தை முடித்துக்கொண்டு அவர் யாழ்ப்பாணத் திற்கும் தனிப்பட்ட பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

# அடையாள அட்டை இல்லாததால் பிக்குகள் வாக்களிப்பதில் சிக்கல்

*ஸ்ரீ சுமங்கல தேரர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 28
தேசிய அடையாள அட்டை இல்லாத காரணத்தால் எதிர்வரும் பொதுத் தேர்தலில் பௌத்த பிக்குகளுக்கு வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக, ரங்கிரி தம்புள்ள இனாமலுவே ஸ்ரீ சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.
பௌத்த பிக்குகளுக்கு அடையாள அட்டை வழங்கும் நடவடிக்கையானது 2004ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், அதற்கு ... ன்னரான காலப்பகுதியில் அடையாள அட்டை ... பெற்றுக் கொள்ள முடியாத ஆயிரத்து 250 பிக்குகளுக்கு வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், தேர்தல்கள் ஆணையாளர் இதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென தெரிவித்துள்ளார்.
எனினும் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் தற்காலிக அடையாள அட்டையை ப... ன்படுத்தி வாக்களிக்க முடியுமென, தேர்தல்கள் ஆணையாளர் ஏற்கனவே தெரிவித்துள்ளார். எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் 150 பௌத்த பிக்குகள் போட்டியிடவுள்ளனர். (ற)

*தொடர்ச்சி*

## வாக்காளர்

இந்த வாக்காளர் அட்டைகள், யாழ். மாவட ... தேர்தல்கள் திணைக் களத்தால் யாழ்ப்பாணத்தின் ... நம தபால கத்தில் நாளை காலை கையளிக்கப்படவு... து.
கையளிக்கப்படும் வாக்காளர் அட்டை... . முதலாம் திகதி முதல் பொது மக்களுக்கு விநியோ... க்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்று ... விக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, யாழ்ப்பாணத் தேர் தல் மா... ட்டத்தில் 10 தேர்தல் விதிமுறை மீறல்கள் பதிவாகியுள் ... தாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

# அடுத்த நிதியமைச்சர் மலிக் சமரவிக்ரம?

கொழும்பு, ஜூலை 28
ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த அரசாங்கத்தின் நிதி அமைச்சராக மலிக் சமரவிக்ரம தெரிவு செய்யப்படுவார் என தெரிவிக்கப்படுகிறது.
எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்டினால் நிதி அமைச்சராக மலிக் சமரவிக்ரம தெரிவு செய் யப்படுவார் என எதிர் பார்க்கப்படுகிறது. மலிக் சமரவிக்ரம ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர். அக் கட்சியின் தேசியப் பட்டியலில் மலிக் சமர விக்ரமவின் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளது.
மலிக் சமரவிக்ரம பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் மிக நெருங்கிய சகா என்பது குறிப்பிடத்தக்கது. மலிக் சமரவிக்ரம இது வரையில் பாராளுமன்றில் அங்கம் வகித்தது கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

**கண்டெடுக்கப்பட்டுள்ளது**
தெல்லிப்பழையைச் சேர்ந்த V.அருளம்பலம் என்பவரது காப்புறுதிப்பத்திரம் வரிப்பத்திரம் என்பன பலாலி வீதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.
தொடர்பு: 076 5462968

**காணி விற்பனைக்கு**
சாவகச்சேரி, டச்சு வீதி, மண்டுவில் காளி கோயிலுக்கு முன்னாலுள்ள 5 பரப்பு பயன் தரு மரங்களுடன் உள்ள காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு :077 940 1614

**நாலா மருத்துவ நிலையம்**
* தீர்க்க முடியாத அதிவேதனை தரும் நோய், எலும்பு பாதிப்புறும் வாதம், கையை தீவிரமாக நடுங்கச் செய்யும் பாக்கின் சீனியா, அல்சர், தீராபுண்
* குழந்தையின்மைக்கு அதிநுட்ப மருந்தியல்
வங்கிமுன்லேன்
சாத்தாவத்தை வைரவர் கோவிலடி (ஜெகபதிவீடு)
மானிப்பாய்
T.P : 077 321 2740



**ஆங்கிலம்** மூன்று மாத சனி, ஞாயிறு பயிற்சி நெறி
நீங்கள் ஆங்கிலம் பேசவேண்டுமா? இல்லையா?
தொழில்புரிவோர், பல்கலை புதுமுக மாணவர்கள் மாணவர்கள், இளைஞர், யுவதிகளுக்கானது.
3 வது பயிற்சிநெறி ஆரம்பம் : 01.08.2015
பிரிவு 1 : காலை 08.00-10.00 | பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 | பிரிவு 4 : மாலை 03.00-05.00
"ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட இப்பயிற்சியில் இணைந்து மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"
யாழ்நகர் 021 320 33 13
சங்கானை 021 567 41 33
நெல்லியடி 021 3200 807
SAAMSON Experts in English Training
யாழ்நகர். 077 621 4567 021 320 3313

advt@uthayan.com
021 567 1111

**அந்தணர் தேவை**
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்திற்கு அந்தணர்கள் தேவை.
தேவஸ்தானகாரியாலயத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு நேரம்-
காலை 6.00- 12.00 மணிவரை
மாலை 4.00 - 6.00 மணிவரை

**தவறிவிட்டது**
கோப்பாயைச் சேர்ந்த தம்பு இராமசாமி என்பவருடைய இந்தியன் கடவுச்சீட்டு (C 525618) மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பை ஒன்று கோப்பாய்க்கும் - யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
சரஸ்வதி விலாஸ்
கோப்பாய் சந்தி, கோப்பாய்.
T.P : 077 802 3234

**கட்டடம் வாடகைக்கு**
A9 பிரதான வீதி, கிளிநொச்சி, கரடிபோக்கு சந்தியில் உள்ள விகாரைக்கு அருகில் அமைந்துள்ள மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடம் வாடகைக்கு (நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு:- 077 806 3774
077 885 4971
077 769 6991

NORTH LANKA IIT
வழங்கும் அரிய சந்தர்ப்பம்!
SRI LANKAN UGC APPROVED CERTIFICATE!
நீங்களும் கணினிப் பட்டதாரியாகும் நேரத்தில Microsoft Engineer ஆகவும் முடியும்
* B.Sc. in Comp. Sc. + MCSE
Qualification:- O/L Pass
Duration:-2 - 3 Years
M.Ed. கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விரிவுரைகள்
யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள்
Address: North Lanka IIT,
Top Floor, People's Bank Building,
Stanley Road, Jaffna.
Telephone: 0777592666.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனவாத

அல்லது நிறம் எதுவானாலும், எங்கள் வாக்கு ஒரு சிங்கள பௌத்தருக்கே' என்று சிங்களத்தில் அச்சிடப்பட்ட சுவரொட்டிகள் கேகாலை மாவட்டத்தில் பரவலாக ஒட்டப்பட்டு வருகின்றன.

கேகாலை மாவட்டத்திலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் கபீர் காசிம் போட்டியிடுகிறார். அவரைத் தோற்கடிக்கும் நோக்கிலேயே, சிங்கள – பௌத்த இனவாதத்தை தூண்டும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருகின்றன. சிறுவர்கள் இந்தச் சுவரொட்டிகளை ஒட்டும் ஒளிப்படங்களும் வெளியாகியுள்ளன. இதுகுறித்து விசனம் வெளியிட்டுள்ள கபீர் காசிம், தேர்தல்கள் ஆணையாளரிடம் முறையிடவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (ற–5)

## புலனாய்வு

ஜெனரல் கபில ஹெந்தவிதாரண, தேசிய புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகப் பணியாற்றி யிருந்தார். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தவுடன், அவர் பதவியிலிருந்து விலகியிருந்தார். அந்த வெற்றிடத்துக்கே, ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிசிர மென்டிஸை நியமிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (ற–சி)

## கலாம்

சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று பி.டி.ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஷில்லாங்கில் இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்தில் மாணவர்களிடத்தில் உரையாற்றிக் கொண்டிருந்தபோது திடீர் உடல் நலக்குறைவு இவருக்கு ஏற்பட்டது. இதனையடுத்து தனியார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்றிரவு உயிரிழந்துள்ளார்.அப்துல் கலாம் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது மாரடைப்புக்கு உள்ளாகியிருக்கலாம் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

2002ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இந்தியாவின் 11ஆவது குடியரசுத் தலைவராக அப்துல் கலாம் பதவி வகித்தார்.

இறுதியாக யாழ்ப்பாணம் வந்திருந்த இவர் யாழ்ப்பாண பல்கலைக் கழகம் மற்றும் யாழ். இந்துக் கல்லூரிஆகியவற்றிற்கு பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் நான் கண்ட காட்சி மனதை உருக்கும் விதத்தில் இருந்தது. எல்லோர் முகத்திலும் புன்னகை இருந்தாலும், அவர்களது புன்னகைக்குப் பின் சொல்ல முடியாத ஏதோ ஒரு துன்பரேகை இழையோடுவதை கண்டுணர்ந்தேன். இலங்கையில் நடக்கக் கூடாத சம்பவம் நடந்து முடிந்துவிட்டது. இவ்வாறு அணுவிஞ்ஞானியும் முன்னாள் இந்திய ஜனாதிபதியுமான அப்துல் கலாம் தனது யாழ். விஜயம் தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தார்.

ராமேஸ்வரத்தில் ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி 1931ஆம் ஆண்டு பிறந்தார். இவர் 1998ஆம் ஆண்டு இந்தியா மேற்கொண்ட பொக்ரான் அணு ஆயுத சோதனையில் முக்கிய பங்கு வகித்தவராவார். இந்தியாவின் ஏவுகணை மனிதர் என்றும் அழைக்கப்படும் அப்துல் கலாம் பத்மபூஷன், பாரத ரத்னா ஆகிய விருதுகளை பெற்றுக்கொண்டவராவார். (ற–ரி)

## 12 கிலோ

நிலையப் பொறுப்பதிகாரி யு.வூட்லர் தெரிவித்தார்.

ஆனைக்கோட்டை ஆலடியை அண்மித்த பகுதியில் குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், யாழ்.பொலிஸ் நிலைய குற்றப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் இந்தக் கைது இடம்பெற்றது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞரை இன்று நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அதேவேளை, ஒன்றரைக் கிலோகிராம் கஞ்சாவைத் தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தாவடி தெற்கு கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். யாழ். துரையப்பா விளையாட்டரங்குக்கு அருகாமையில் குறித்த இளைஞர் சந்தேகத்துக்கிடமான பொதி ஒன்றுடன் நின்றபோது அதனைப் பொலிஸார் சோதனை செய்துள்ளனர்.

அதன்போதே அது கஞ்சா பொதி என்று தெரியவந்ததாகவும் அதனையடுத்துக் குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். யாழ்.மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழான புலனாய்வு பிரிவினர் அதனைக் கண்டறிந்தனர். அதனை யாருக்குக் கையளிக்க வைத்திருந்தார் என்பது உள்ளிட்ட விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை. (ற–4,106)

## சொத்து விவரம்

வீதமான வேட்பாளர்களே சொத்து விவரங்களை வெளியிட்டுள்ளதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

சொத்து விவரங்களை வெளியிடாத வேட்பாளர்களுக்கு வேட்பாளர் அடையாள அட்டை வழங்கப்படாதென்றும், தேர்தல்கள் திணைக்களத்தால் வழங்கப்படும் எந்தவித வரப்பிரசாதங்களையும் பெற்றுக் கொள்ள முடியாதெனவும் ஏற்கனவே தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்திருந்தார்.

எனினும், பிரதான அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் கூட இதுவரை சொத்து விவரங்களை வெளியிடவில்லை என்று அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. (ற)

## போதைப்பொருளை

சுற்றாடல் பாதுகாப்பை உறுதிசெய்தல் ஆகியனவே தனது ஆட்சிக் காலத்தின் நோக்கங்களாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த இலக்குகளை அடைவதற்கான ஆரம்பக்கட்டப் பணிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா அப்துல்லாவை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை சந்தித்தபோதே அவர் இந்தக் கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

மாலைதீவின் 50ஆவது சுதந் திர தின நிகழ்வில் பங்கேற்கச் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று நாடு திரும்பினார்.

மாலைதீவின் சுதந்திர தின நிகழ்வுகள் அந்நாட்டின் தலைநகரில் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றன.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்கேற்றிருந்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால மாலைதீவுக்கான பயணத்தின் போது அந்நாட்டு உயரதிகாரி களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ற–சி)

## வட்டுக்கோட்டை

கொழும்பில் அமைந்துள்ள எதிர்க் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்மொழியைப் பிரதானமாகக் கொண்டு வடக்கு, கிழக்கை இணைத்து சுயாட்சியை இவர்கள் கோருகின்றனர். அதுமட்டுமல்லாது, யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் சர்வதேச விசாரணையையும் வரவேற்றுள்ளனர்.

பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட முன்னர் த.தே.கூ. வடக்குக்கு வெளியே கொழும்பு உள்ளிட்ட 5 மாவட்டங்களில் போட்டியிடவுள்ளதாகத் தெரிவித்தனர். எனினும், அவர்கள் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கவில்லை என்பது ஏன் என்று தற்போதுதான் தெரிகின்றது. ஐ.தே.கவுடன் புரிந்துணர்வு அடிப்படையில் நெருக்கமான உறவை த.தே.கூ. பேணிவருகின்றது. இதற்கமையவே தற்போது தேர்தல் விஞ்ஞாபனத்தை அவர்கள் தயாரித்துள்ளார்கள். – என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இவை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஹெல உறுமய என்பன மௌனிகளாக இருக்காது நாட்டு மக்களுக்குத் தமது நிலைப்பாடு தொடர்பில் விசேட அறிவிப்பொன்றை விடுக்கவேண்டும்.

சர்வதேச நாடுகளின் தலையீட்டினாலேயே தேர்தல் நடத்தப்படுகின்றது. ஐ.நா. மனித உரிமைகள் சபை செப்டெம்பரில் கூடவுள்ள நிலையில், மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டவர்களுக்குத் தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாட்டை பயங்கரவாதத்திலிருந்து மீட்ட தலைமைத்துவத்தைக் காட்டிக்கொடுக்கக் கூடாது. அவரைப் பாதுகாப்பதற்காக மக்கள் எதிர்வரும் தேர்தலில் அவருக்கு வாக்களிக்கவேண்டும்.

தேர்தல் சட்டங்களை நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியே அதிகம் மீறுகின்றது. பொலிஸார் பக்கச்சார்பாக நடந்துகொள்வதுடன் எமது சுவரொட்டிகளை மாத்திரமே அகற்றுகின்றனர். எது எவ்வாறாயினும், எமது தேர்தல் பிரசாரங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. – என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தேசிய அமைப்பாளரும், ஐ.ம.சு.மு. பொதுச் செயலாளருமான சுசில் பிரேம ஜயந்த, முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் டிலான் பெரேரா மற்றும் மேல் மாகாண சபை முதலமைச் சரும் கம்பஹா மாவட்ட ஐ.ம.சு.மு. வேட்பாளருமான பிரசன்ன ரணதுங்க ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (ற–சி)

## நெற்பயிருக்குள்

3வயது சிறுமியை நானே பாலியல் துஷ்பிரயோகம் செய்தேன் என நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் எம்.ஐ. வஹாப்தீன் முன்னிலையில் ஒப்புக்கொண்டான் சிறுமியின் ஒன்றுவிட்ட சகோதரனான 14 வயது சிறுவன்.

கிளிநொச்சி எள்ளுக்காட்டு பகுதியை சேர்ந்த 3 வயதுக் குழந்தை ஜூன் மாதம் காணாமற்போனார். அதேவேளை, குஞ்சுப் பரந்தன் வயலுக்குள் பயிர்களின் நடுவே இருந்து 3 வயதுடைய குழந்தை ஒன்றின் [illegible] நிலையில் மீட்கப்பட்டது. அது காணாமற்போன குழந்தையினுடையதா என்று அடையாளப் படுத்தப்படாமல் கிளிநொச்சி வைத்தியசாலையில் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது.

குழந்தை காணாமற்போனமை தொடர்பான வழக்கு நேற்று கிளிநொச்சி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. குழந்தையின் சாவுக்குக் காரணமானவர் என்று குற்றஞ்சாட்டி ஒன்றுவிட்ட சகோதரன் முறையான 14 வயதுச் சிறுவனை பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தினர்.

குழந்தை காணாமற்போன சில நாள்களிலேயே இந்தச் சிறுவன் பொலிஸாரால் தீவிரமாக விசாரிக்கப்பட்டான். எனினும் பின்னர் அவன் விடுவிக்கப்பட்டிருந்தான். கடந்த 24ஆம் திகதி பொலிஸார் அவனை மீண்டும் கைது செய்திருந்தனர். சனி, ஞாயிறு இரு நாள்களும் காவலில் வைத்திருந்து நேற்று அவனை நீதிமன்றில் முற்படுத்தினர்.

ஆசை காரணமாக தங்கையை குஞ்சுப் பரந்தன் பகுதியில் உள்ள வயல் வெளிக்குள் கூட்டிச்சென்றதாகவும் அவளுடன் தவறாக நடந்து கொண்ட பின்னர் அவளை நெற்கதிர்களின் நடுவே விட்டு வந்து விட்டதாகவும் நீதிவான் முன்பாகச் சிறுவன் தெரிவித்தான்.

சிறுவனின் இந்த ஒப்புதல் வாக்குமூலத்தை அடுத்து சிறுவனை யாழ்ப்பாணம் அச்சுவேலியில் உள்ள சிறுவர் நன்னடத்தை பிரிவில் ஒப்படைக்குமாறு நீதிவான் எம்.ஐ வஹாப்தீன் உத்தரவிட்டார். அத்துடன் ஓகஸ்ட் மாதம் 10ஆம் நாளுக்கு வழக்கு விசாரணையை ஒத்தி வைத்தார்.

காணாமற்போன சிறுமியின் தாயார் கிளிநொச்சி பொது வைத்திய சாலையின் உளநல சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்து தங்க வைக்கப்பட்டுள்ளார். (உ – 21)

## போதையூட்டிய

திரவ வகைகள் கொண்ட 66 போதைப் போத்தல்களும், போதை கலந்த சீவல் பைக்கற்றுக்களும் கைப்பற்றப்பட்டன .– என்று யாழ்.பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகர் யு.வூட்லர் தெரிவித்தார்.

தனது தலைமையில் சிவில் குற்ற விசாரணைப் பிரிவின் கீழ் இந்தச் சுற்றி வளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ஒஸ்மானியாக் கல்லூரி வீதியில் உள்ள குறித்த நபரது வீட்டிலிருந்து அவை மீட்கப்பட்டன என்று அவர் தெரிவித்தார்.

தலைமைப் பொறுப்பதிகாரியின் நெறிப்படுத்தலில் சிவில் பொலிஸ் பரிசோதகரான சுனில் வீரக்கோன், தலைமைப் பொலிஸ் சார்ஜன்ட் றபீக் மற்றும் உடகெதர, கனங் கொள்ள, ஜெயந்த, றம்மியா அனி ஆகியோர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

30 வயதான நபர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. போதை வஸ்து பாவனைச் சட்டத்தின் கீழ் அவருக்கு எதிராக நீதிமன்றில் இன்று வழக்குத் தொடுக்கப்படவுள்ளது.– என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதுகுறித்து யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்ததாவது:–

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து நடத்தப்படும் போதைப் பொருள் விற்பனை பற்றி பொலிஸார் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதற்காக பொலிஸார் ரோந்து நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர். பாடசாலைகளை அண்மித்து ஐஸ்கிறீம், சிற்றுண்டிகள், இனிப்பு வகைகள் விற்பனை செய்யப்படுவதனைத் தடை செய்துள்ளோம்

இங்கு நடக்கும் குற்றச் செயல்கள், சட்டவிரோதச் செயல்கள் தொடர்பில் பொதுமக்கள் தற்போது பொலிஸாருக்கு அறிவிக்கின்றனர். பொதுமக்களுக்கு தற்போது பொலிஸ் மீது நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அதனால் தகவல்கள் வழங்குகின்றனர். அவ்வாறு வழங்கிய தகவலால் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு இந்தத் தொகை கொண்ட போதைப் பொருள்களைக் கைப்பற்ற முடிந்தது.

இவ்வாறான போதைப் பொருள் பாவனை மட்டுமன்றி குற்றச் செயல்கள், திருட்டுகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பிலும் பொலிஸாருக்குத் தகவல் வழங்குங்கள்.

பாடசாலை ரீதியாகவும், தனியார் வகுப்புக்கள் மற்றும் பெற்றோர்களைச் சந்தித்தும் எமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். தொடர்ந்தும் நாம் எமது செயற்பாடுகளை முன்னெடுப்போம்.

பொதுமக்கள் எமக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனர். இதற்கு நாம் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். இதேபோல எதிர்வரும் காலங்களிலும் பொதுமக்கள் எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.– என்றார். (ற–4)

## சந்திரிகா

வேட்பு மனு வழங்கப்பட்டமைக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்த சந்திரிகா, கடந்த 9 ஆம் திகதி வெளிநாட்டுப் பயணமொன்றை மேற்கொண்டார். அவரது அந்தப் பயணத்துக்கு மஹிந்தவுக்கு வேட்பு மனு வழங்கப்பட்டமையே காரணம் என்று அரசியல் வட்டாரங்கள் கூறியிருந்தன. அத்துடன் மஹிந்தவைத் தோற்கடிக்க சர்வதேச ரீதியான வியூகமொன்றை வகுக்கவே அவர் வெளிநாடு சென்றிருந்தார் என்றும் தகவல் வெளியாகியிருந்தது.

இந்தநிலையில் கடந்த 25 ஆம் திகதி சந்திரிகா நாடு திரும்பியிருந்தார். (ற)

## நாட்டைத்

தேர்தல் விஞ்ஞாபனத்தை முன்வைத்துள்ள நிலையில், தென்னிலங்கை அரசியல்வாதிகள் அதற்கு எதிராக குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளனர். அந்த வகையில், மாத்தளையில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில், மஹிந்த ராஜபக்ஷவும் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கைக்கு எதிராக கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் தேசிய அரசை அமைக்கப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி கூறி வருகிறது. ஆனால், தேசிய அரசை அமைக்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இணங்காது. நாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களைப் பெறும் நம்பிக்கை எமக்குள்ளது. எனவே தேசிய அரசு அமைக்கப்படாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையைக் குறித்தும், கூட்டமைப்பின் ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சி பெறுவது குறித்தும் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வடக்கு மாகாணத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுயாட்சி கேட்கிறது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு அதற்கு அனுமதிக்காது.

நாட்டைப் பிரிப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஒரு போதும் இடமளிக்காது. தமிழர்களின் நியாயமான கவலைகளுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு தீர்வு காணும். ஆனால் ஈழ அரசை உருவாக்கும் தீர்வுக்கு இணங்காது, என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாலைதீவுக்கு நேற்றுமுன்தினம் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அந்த நாட்டு உயர் அரச மரியாதை அளித்து வரவேற்கப்பட்ட போது...

# 75 மில்லியன் அமெ. டொலர் வருமான இழப்பு இலங்கைக்கு

## ஐரோப்பிய ஒன்றியத் தடையால்

கொழும்பு, ஜூலை 28

இலங்கை மீனவர்களால் பிடிக்கப்படும் மீனுக்கு ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள தடை மூலம் 75 மில்லியன் அமெரிக்க டொலர் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மீன்பிடிச் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதில் இலங்கை தோல்வி கண்டுள்ளதாக குற்றஞ்சாட்டி ஐரோப்பிய ஒன்றியம் கடந்த ஜனவரி மாதம் இந்தத் தடையை நடைமுறைப்படுத்தியிருந்தது.

நகர்வுகளைக் கண்டறியும் செயற்கைக் கோள் உபகரணங்கள் இன்றிக் கப்பல்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட இலங்கை அரசு அனுமதி வழங்கியுள்ளது என்று ஐரோப்பிய ஒன்றியம் கூறியுள்ளது.

இந்த நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்துள்ள விடயங்கள் குறித்து அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹிசினி கொலன்னே தெரிவித்துள்ளார்.

கடல்சார் விவகார மற்றும் மீன்பிடிப் பணிப்பாளர் நாயக அலுவலகத்தின் தொழில் நுட்ப மீளாய்வுக் குழு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் பிரசல்ஸுக்குச் சென்று தடையை நீக்குவதற்கான மேலதிக கலந்துரையாடல்களை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

சட்டவிரோத மீன்பிடி தொடர்பான சர்வதேச விதிகளை இலங்கை மீறுவதாக 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை செய்திருந்தது.

(த)

# இங்கிலாந்தில் போன்றே இம்முறை இலங்கையிலும் பொதுத் தேர்தல்

## விளக்கமளிக்கிறார் பிரதமர் ரணில்

"இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால், மலையக தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும்" – என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அத்துடன், இங்கிலாந்தில் போன்றே இம்முறை இலங்கையிலும் பொதுத் தேர்தல் நடக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

நுவரெலியாவில் நேற்றுமுன் தினம் மாலை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மக்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் மேலும் கூறியவை வருமாறு:–

"ஏனைய துறையினர் போன்று தோட்டத்துறையினருக்கும் சம்பள உயர்வு கிடைக்கவேண்டும் என்பதே எனது குறிக்கோள். மலையக தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் முதலாளிமார் சம்மேளத்திற்குமிடையிலான பேச்சு நாடாளுமன்றத் தேர்தல் காரணமாக தற்போது தடைப் பட்டுள்ளது.

தற்போது ஈரானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உடன்படிக்கையொன்றின் காரணமாக இலங்கையிலிருந்து மீண்டும் ஈரானுக்கு தேயிலை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் கிடைக்கும். அதற்கான நடிவடிக்கைகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறானதொரு தேர்தலை நடத்த முடியும் என்று நாங்கள் நினைக்கவில்லை. பொலிஸார் இன்று தேர்தல் ஆனையாளரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்றனர்.

எங்களுடைய சுவரொட்டிகளைக் கூட அகற்றுகின்றனர். ஆகவே, இங்கிலாந்தில் நடைபெற்ற தேர்தலை போன்றே இந்தத் தேர்தல் நடைபெறவுள்ளது. இது சாத்தியமானது. நல்லாட்சி மூலமாகவே நடைபெறுகின்றது" – என்றார்.

# மஹிந்தவின் 'செல்பி'



கொழும்பு, ஜூலை 28

சமூக வலைத்தளங்களைக் கடுமையாக விமர்சித்துவந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு ஏற்பட்ட தோல்விக்கு சமூக வலைத் தளங்களின் பங்களிப்பும் பிரதானமானது எனக் கூறியிருந்தார்.

ஆனால், இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிடும் அவர் சமூக வலைத்தளங்கள் ஊடாக பிரசாரம் செய்வதுபற்றியும் கூடுதல் கவனஞ் செலுத்தியுள்ளார். இதற்காக முகநூலில் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதிலளித்தல், டுவிட் பதிவுகளை இடுதல் என இணையம் பக்கம் கலக்கிவருகிறார்.

தற்போது ஒருபடி மேலேசென்று, அனைவரையும் . ஆக்கிரமித்துக் கொண்டுள்ள 'செல்பி' மோகத்தில் அவரும் மூழ்கியுள்ளார்போல் தெரிகிறது. தங்காலையிலுள்ள அவரது இல்லத்தில் ஆதரவாளர்களுடன் அவர் செல்பி எடுத்து அதை டுவிட் செய் துள்ளார்.

# நாடு முழுவதிலும் சுவரொட்டிப் போர்

கொழும்பு, ஜூலை 28

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் ஆதரவாளர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் தினமும் சுவரொட்டி தொடர்பான இழுபறிப்போர் ஒன்று நடந்து வருகிறது.

நாடாளுமன்றத் தேர்தல் சட்டங்களின்படி, வேட்பாளர்கள் சுவரொட்டிகளை ஒட்டவோ, பதாகைகளை காட்சிப்படுத்தவோ கூடாது. இந்த விதிமுறையை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் எவரும் பின்பற்றுவதாக இல்லை.

வடக்கு, தெற்கு என்று நாடு முழுவதிலும், சுவரொட்டிப் பரப்புரைகள் நடந்துவருகின்றன. ஆங்காங்கே பொலிஸாரிடம் சிலர் பிடிபட்டாலும், வேட்பாளர்கள் தமது விருப்பு வாக் குகளை அதிகரித்துக்கொள்வதற்காக சுவரொட்டிப் பரப்புரைப் போரில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், வேட்பாளர்களின் பரப்புரைச் சுவரொட்டிகளை அகற்றுவதற்கு ஆள்களைப் பணிக்கு அமர்த்தி நடவடிக்கைகளை எடுப்பதற்கு 75 மில்லியன் ரூபாவை தேர்தல்கள் திணைக்களம் ஒதுக்கியுள்ளது.

இரவாடு இரவாக வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் சுவரொட்டிகளை ஒட்டிச்சென்ற பின்னர், காலையில் பொலிஸார் சென்று அவற்றை அகற்றுகின்றனர். நாடு முழுவதும் இது நாளாந்த நடவடிக்கையாக

# ரகர் வீரரின் மரணம் விபத்தினால் அல்ல

## கொலையென பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை

கொழும்பு, ஜூலை 28

ரகர் விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீனின் மரணம் வாகன விபத்தினால் ஏற்பட்டது அல்ல, கொலை என இரகசிய பொலிஸார் நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

குறித்த வழக்கு தொடர்பான மேலதிக அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்த போதே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் குறித்த வழக்கில் உடற்கூற்றுப் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்ட மருத்துவர்களின் வாக்குமூலமும் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் இது விபத்தல்ல கொலை என தெரியவந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த வழக்கு குறித்த மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இரகசியப் பொலிஸார் நீதிமன்றில் சுட்டிகாட்டியுள்ளனர்.

இதேவேளை ரகர் விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீனின் மரணம் விபத்து என கடந்த மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது. எனினும் கடந்த ஜனவரி மாதம் மைத்திரி அரசு ஆட்சிக்கு வந்ததும் தாஜுடீனின் காதலி, தனது காதலனின் மரணம் கொலை எனவும் அதனை மஹிந்த ராஜபக்ஷவின் மகன் ரோஹித ராஜபக்ஷ செய்தார் எனவும் பொலிஸில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(த)

# 72 சிவில் அமைப்புக்கள் ஐ.தே.முயுடன் உடன்பாடு

பொதுத் தேர்தலில் ஆதரவு வழங்குவது தொடர்பில் ஐக்கிய தேசிய முன்னணியுடன் சிறந்த சமூகமொன்றுக்கான மக்கள் அமைப்பு உட்பட்ட 75 சிவில் சேவை அமைப்புகள் இன்று புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச் சாத்திடவுள்ளன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது

வின் வெற்றிக்காக உழைத்த மாதுலுவாவே சோபித தேரர் உட்பட்ட குழுவினரே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுகின்றனர். இலங்கை மன்றக் கல்லூரியில் காலை 9.30 மணிக்கு இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 48 பாடசாலைகளை புரட்டியெடுத்து சம்பியனானது சென்.ஹென்றிஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 28
கொழும்பு ஆனந்தாக்கல்லூரியால் அழைக்கப்பட்ட 48 பாடசாலைகளுக்கிடையில் நடத்திய சாம்சந்திரசிங்க வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் கொழும்பு வெஸ்லிக்கல்லூரியை வீழ்த்தி சம்பியன் ஆனது இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி.

கொழும்பு சுகாததாச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற குறித்த இறுதியாட்டத்தில் – ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே ஹென்றிஸின் ஆதிக்கம் மேலோங்குவதை வெஸ்ஸிக் கல்லூரியால் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஆட்டத்தின் 5ஆவது நிமிடத்தில் ஹென்றிஸின் அஜித் எதிர் வீரர்களுக்கு கண்கட்டி வித்தை காட்டி முதல் கோலை பதிவுசெய்ய ஹென்றிஸின் பக்கம் வெற்றிக் காற்று பலமாக வீசத்தொடங்கியது. பழிதீர்க்க வேண்டும் என்ற முனைப்பில் மும்முரமாக ஈடுபட்டனர் வெஸ்லியின் மைந்தர்கள். விடுவதாய் இல்லை ஹென்றியரசரின் புதல்வர்கள். வெஸ்லியின் போராட்டங்களை ஹென்றிஸ் ஊதித்தள்ள முதல்பாதியின் முடிவில் சென். ஹென்றிஸ் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது.

எதிர்பார்ப்புக்கள் இரட்டிப்பாக ஆரம்பமானது ஆட்டத்தின் இரண்டாவது பாதி. வெஸ்ஸியின் ஆதரவாளர்களுக்கு அந்த அணியின்மீது சிறிதேனும் நம்பிக்கை குறைய வில்லை. வெஸ்லி வெற்றியுடன் முடிக்கும் என்பதில் உறுதியாகவிருந்தனர். அன்னிய மண்ணில் தமக்கான ஆதரவு சிறிது குறைவாகக் காணப்பட்ட போதிலும் ஆதிக்கத்தையோ அல்லது போராட்டத்தையோ கைவிடவில்லை சென்.ஹென்றிஸ். இரண்டாம் பாதியின் 6ஆவது நிமிடத்தில் கில்மனின் உதவியால் ஹென்றிஸின் இரண்டாவது கோல் பதிவானது. 2–0 என்ற நிலைமை ஆட்டத்தின் முடிவுவரை தொடரப்பட முடிவில் சென்.ஹென்றிஸ் 48 பாடசாலைகளை ஊதித்தள்ளி சம்பியனானது. ஆட்டநாயகனாக சென். ஹென்றிஸின் அஜித்தும் சிறந்த கோல்காப்பாளரக இளவாலை சென்.ஹென்றிஸின் பிரசன்னாவும் தெரிவானார்கள்.

உதைபந்தாட்டத்தில் தனித்துவமான முத்திரை பதித்து ஜாம்பவான்களாக வலம்வந்த பற்பல பாடசாலைகளைப் பந்தாடி மகுடம் சூடிய சென்.ஹென்றிஸ் வீரர்கள் நேற்று சொந்தமண் திரும்பியதும் இளவாலை சந்தியில் இருந்து கல்லூரி வரை கல்லூரியின் பான்ட் வாத்திய இசையுடன் அழைத்துச் செல்லப்பட்டு அதிபர் தலைமையில் விழா எடுத்துக் கௌரவிக்கப்பட்டனர். (ம–23)



## மாகாணமட்டத்தில் தங்கப்பதக்கங்களைக் குவித்த பூவரசங்குளம் ம.வி. மாணவிக்கு கௌரவம்



யாழ்ப்பாணம், ஜூலை 28
வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற மாகாண மட்ட தடகளத்தொடரில் வவுனியா பூவரசங்குளம் மகாவித்தியாலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி மூன்று தங்கப்பதக்கங்களைக் கைப்பற்றிய மாணவி நேர்மதி குறித்த பாடசாலைச் சமூகத்தினால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

19வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டம், 1500 மீற்றர் ஓட்டம், 5000 மீற்றர் ஓட்டம் ஆகிய நிகழ்வுகளில் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றி தேசியமட்டத்திற்கு தெரிவான குறித்த மாணவி 800மீற்றர் தூரத்தினை 2 நிமிடங்கள் 36 செக்கன்கள் 3 மில்லி செக்கன்களிலும் 1500 மீற்றர் தூரத்தினை 5 நிமிடங்கள் 25 செக்கன்களிலும் ஓடிமுடித்து புதிய சாதனையை தனது பெயரில் பதிவு செய்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## தீபனின் விக்கெட் வேட்டையில் இறுதிக்குள் நுழைந்தது கலையொளி

கரணவாய், ஜூலை 28
தீபனின் ஹட்றிக் கைகொடுக்க கொக்குவில் பிரம்படி விளையாட்டுக் கழகத்தை 38 ஓட்டங்களால் வீழ்த்தி இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது இணுவில் கலையொளி விளையாட்டுக்கழகம்.

தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 5 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இந்தத்தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற குறித்த அரையிறுதியாட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பிரம்படி அணி முதலில் களத் தடுப்பைத் தெரிவு செய்ய துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கலையொளி விளையாட்டுக் கழகம் மோகனின் அதிரடியான துடுப்பாட்டத்தின் உதவியுடன் 5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் ஒரு இலக்கை மட்டும் இழந்து 52 ஓட்டங்களைப்பெற்றது. பந்துவீச்சில் பிரம்படி அணி சார்பில் பிரதீபன் ஒரு இலக்கைக் கைப்பற்றினார்.

53 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பிரம்படி அணி கலையொளியின் ஆக்ரோஷமான பந்துவீச்சிற்கு முகம் கொடுக்க முடியாது திணற பிரம்படியின் தோல்வி ஆரம்பத்திலேயே கிட்டத்தட்ட உறுதியாகியது. 3 பந்துப்பரிமாற்றங்கள் வரை மட்டுமே தாக்குப்பிடித்த பிரம்படி அணி சகல இலக்குகளையும் இழந்து 14 ஓட்டங்களை மட்டும் பெற்று 38 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. பந்துவீச்சில் கலையொளி அணி சார்பில் தீபன் ஹட்றிக் சாதனையுடன் 4 இலக்குகளையும் பிரதீபன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். (ம–108)

## இறுதிக்குள் த்ரிலாக நுழைந்தது ஸ்ரீமுருகன்

கரணவாய், ஜூலை 28
தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் துடுப் பாட்டத்தொடரில் ஒரு ஓட்டத்தினால் மகேசன் அணியை வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது கரவெட்டி ஸ்ரீமுருகன் அணி.

நேற்றுமுன்தினம் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மகேசன் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்ய துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஸ்ரீமுருகன் அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் அனுசன் ஒரு இலக்கினைக் கைப்பற்றினார்.

49 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மகேசன் அணி கடைசிப் பந்துவரை வெற்றிபெறு வதற்கு கடுமையாகப் போராடி இலக்கினை எட்டக்கூடிய நிலைமையில் இருந்த போதிலும் முயற்சி ஏமாற்றமளிக்க முடிவில் ஒரு ஓட்டத்தினால் தோல்வியடைந்தது.(ம–108)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 28

***விக்னேஸ்வரா வி.க.தொடர்***
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து நியூட்டன் அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்வாய் பாரதி அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதவுள்ளது. (ம–23)

***பாரதி வி.க.தொடர்***
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தவுள்ள அணிக்கு 7 வீரர்கள் கொண்ட உதைபந்தாட்டத் தொடர் இன்று முதல் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இந்தத்தொடரில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பிற்பகல் [illegible]30 மணிக்கு நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகமும், 4:30க்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை விளையாட்டக்கழகமும் மோதவுள்ளன. (ம–108)

***அமரர் பத்மநாதன் ஞாபகார்த்த தொடர்***
தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியின் முன்னாள் ஹொக்கிப் பயிற்றுனர் அமரர் பத்மநாதன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணங்களுக்காக பாடசாலைகளின் 15வயதுப் பிரிவு இருபால் அணிகளுக்குமிடையில் நடைபெறவுள்ள ஹொக்கி தொடரின் ஆட்டங்கள் இன்று [illegible]வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு மகாஜனக்கல்லூரி அதிபர் மணிசேகரம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தத்தொடரில் ஆண்கள் பிரிவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி, சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி, யூனியன் கல்லூரி அணி, மகாஜனக்கல்லூரி அணி ஆகிய அணிகளும் பெண்கள் பிரிவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணி, குளமங்கால் றோ.க.த பாடசாலை அணி, உடுவில் மகளிர் கல்லூரி அணி ஆகிய அணிகளும் மோதவுள்ளன.(ம–23)

## சம்பியனானது இலங்கை வங்கி

யாழ்ப்பாணம், ஜூலை 28
இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் வடமாகாணத்தின் நிதி நிறுவனங்களிற்கிடையில் முதன்முதலாக நடத்தப்பட்ட நட்பு ரீதியிலான மென்பந்து துடுப்பாட்டத் தொடரில் இலங்கை வங்கி அணி சம்பிய னாகியது.

கனகரத்தினம் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்தத்தொடரில் 12 அணிகள் பங்குபற்றியிருந்தன. அவற்றில் இருந்து செலான் வங்கி மற்றும் இலங்கை வங்கி அணிகள் இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றன. குறித்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபன வடமாகாண பிராந்திய முகாமையா ளர் பா.சத்தியன் கலந்துகொண்டார். (ம–ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்காவுக்காக இந்தியாவை வீழ்த்தியே தீருவோம்



இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்றி சங்கக்காராவிற்கு வெற்றியுடன் பிரியாவிடை வழங்கப்போவதாக இலங்கை அணித்தலைவர் மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை – இந்திய அணிகளுக்கிடையிலான 3 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் குறித்த தொடருக்கான தீவிர பயிற்சியில் இந்திய அணி ஈடுபட்டு வருகிறது. இலங்கையின் நட்சத்திர வீரரான சங்கா இந்தத்தொடரின் இரண்டாவது ஆட்டத்துடன் ஓய்வினை அறிவித்துள்ளார். மஹெலவின் வெற்றிடத்துடன் சங்காவின் வெற்றிடமும் சேர்ந்துவிட்டால் இலங்கை ஒன்றுமில்லாமல் போய்விடும். இதனால் பலம்பெற்றிருக்கும் இந்தியாவை வீழ்த்துவது கடினம் என்ற எதிர்பார்ப்பு இருந்து வரும் நிலையில் இந்தியாவை வீழ்த்துவோம் என்று மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

குறித்த தொடர் தொடர்பாக மத்தியூஸ் தெரிவித்ததாவது சங்கக்காராவை சிறப்பாக வழியனுப்ப இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பற்பல ஏற்பாடுகளை செய்து வருகிறது. கட்டுப்பாட்டுச்சபை என்ற ரீதியில் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தனது பங்களிப்பை சிறந்த முறையில் செய்து வருகிறது. சக வீரர்கள் என்ற ரீதியில் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்றி சங்கக்காராவை வெற்றியுடன் வழியனுப்புவதே அவருக்கு கொடுக்கும் சிறந்த மரியாதை எனக் கருதுகின்றோம். இதனால் இந்தத்தொடரில் எங்களின் ஆட்டம் ஆக்ரோஷமானதாக இருக்கும். நிச்சயம் இந்தியா எங்களிடம் விழும் என்றார். (ம)

# சென்றலைட்ஸ் வி.கழகத்தின் காலிறுதி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை28

யாழ்.மத்திய கல்லூரியின் நிறுவுனர் தினத்தை முன்னிட்டு குறித்த கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்டத்தில் உள்ள 14 பாடசாலைகளின் பழைய மாணவ அணிகளுக்கு இடையில் நடத்தி வரும் துடுப்பாட்டத் தொடரின் காலிறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியின் மைதானத்தில் நடைபெற்றது.

***சென்றலைட்ஸ் எதிர் ஜொலிஸ்ரார்***

சென்றலைஸ் அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் அணி மோதிக் கொண்ட காலிறுதியாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணியினர் 5 பந்துப்பரி மாற்றங்கள் நிறைவில் எதுவித இலக்குகள் இழப்பின்றி 79 ஓட்டங்களைக் குவித்தது. ஆரம்ப வீரர்களான மணிவண்ணன் 48 ஓட்டங்களையும், மதுசன் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

80 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணியினர் 4.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் ஏதுவித இலக்குகள் இழப்பின்றி இலக்கினை அடைந்து வெற்றியீட்டியது. ஆரம்பவீரர்களான செல்ரன் மற்றும் ஜெனேசன் இருவரும் 36 ஓட்டங்களைப் பெற்றனர்.

***ஜொனியன்ஸ் எதிர் கே.ஸி.ஸி.ஸி***

ஜொனியனஸ் அணிக்கும் கே.ஸி.ஸி.ஸி. அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணியினர் 5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் ஒரு இலக்கினை இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றனர். அதிகபட்சமாக சஞ்சேயன் 22 ஓட்டங்களைப் பெற்றார்.

60ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி. அணி 5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 43 ஓட்டங்களை மட்டும் பெற்று 16 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக ஜெயறூபன் 13 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஜொனியன்ஸ் அணி சார்பில் சண்சேயன், காண்டீபன், டக்சன் மூவரும் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர்.

***மானிப்பாய் பரிஸ் எதிர் விக்டோ ரிஸ்***

மானிப்பாய் பரீஸ் அணிக்கும் விக்டோரிஸ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய விக்டோரிஸ் அணி 5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 48 ஓட்டங் களைப் பெற்றது. அதிகபட்சமாக சுவிதன் 20 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் மானிப்பாய் பரிஸ் அணி சார்பில் அன்சிலின் 3 இலக்குகளை வீழ்த்தினார்.

49 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஸ் அணியினர் 4.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் எதுவித இலக்குகள் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தனர். அதிகபட்சமாக அன்சலின் 33 ஓட்டங்களைப் பெற் றார். (ம-23)

# ராஜ மரியாதையுடன் வீடு திரும்பிய ஸ்ரீசாந்த்



ஐ.பி.எல். சூதாட்ட வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டதால் நான் எனது மகளுக்கு குற்றவாளியாக தெரியமாட்டேன். என்று ஸ்ரீசாந்த் நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

2013ஆம் ஆண்டு நடைபெற்ற 6 ஆவது ஐ.பி.எல். தொடரில் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக ராஜஸ்தான் அணியில் விளையாடிய ஸ்ரீசாந்த், அங்கீத் சவான், அஜய் சண்டிலா ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இதைத் தொடர்ந்து இந்த 3 பேருக்கும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை ஆயுட்காலத் தடை விதித்தது. இந்த வழக்கு டெல்லி நீதிமன்றத்தில் நடந்து வந்த நிலையில், ஸ்ரீசாந்த் உட்பட 36 பேர் மீது போதிய ஆதாரம் இல்லை என்று விடுதலை செய்யப்பட்டனர். வழக்கில் வெற்றிபெற்று வீடு திரும்பிய ஸ்ரீசாந்துக்கு அவரது குறித்த பகுதி மக்களால் மகத்தான கௌரவம் வழங்கப்பட்டது.

இது தொடர்பாக ஸ்ரீசாந்த் தெரிவித்ததாவது என்மீது முறைப்பாடு செய்யப்பட்டதும் எனது தந்தை மிகவும் உடைந்து போனார். இதனால் அவருக்கு இரண்டு தடவைகள் மாரடைப்பு ஏற்பட்டது. தற்போது நான் விடுதலை ஆனதால் அவர் மகிழ்ச்சியில் உள்ளார். இப்போது தான் எனது மனதிற்கு நிம்மதியாக உள்ளது. எனக்கு கிரிக்கெட் விளையாட மீண்டும் வாய்ப்பு கிடைத்துள்ளது. விரைவில் முறைப்படியான பயிற்சியை தொடங்குவேன் மேலும், எனக்கு குழந்தை பிறந்து 3 மாதம் ஆகிறது. எனது மகள் நாளை வளர்ந்துவரும்பொழுது நான் ஒரு கிரிக்கெட் வீரராகத்தான் தெரிய வேண்டும். குற்றவாளியாக தெரியக்கூடாது என்றார். (ம)

# மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் விபத்து காயத்துடன் தப்பிப்பிழைத்தார் ஸ்டோனேர்

மோட்டார் சைக்கிள் பந்தய முன்னாள் உலகச்சம்பியன் சசே ஸ்டோனெர். இவர் நேற்று நடைபெற்ற மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் கலந்து கொண்டார். அப்போது இவரது மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகி தூக்கி வீசப்பட்டது. ஆனால் ஸ்டோனேர் காயத்துடன் உயிர்பிழைத்தார்.

பந்தயம் தொடங்கியதும் ஸ்டோனெர் தனது மோட்டார் சைக்கிளில் சீறிப்பாய்ந்தார். பைக் சிறிது தூரம் சென்றதும் ஒரு வளையில் திரும்பிய போது கட்டுப்பாட்டை இழந்து ஓடுபாதையை விட்டு விலகிச் சென்று விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளுடன் ஸ்டோனெர் பல மீற்றர் தூரம் தூக்கி வீசப்பட்டார். அப்போது, அவருக்கு காயம் ஏதும் ஏற்பட்டதாக தெரிய வில்லை. ஆனால், பின்னர் தனக்கு கை மற்றும் காலில் காயம் ஏற்பட்டதாக டுவிட்டரில் தகவல் தெரிவித்து படத்தையும் வெளியிட்டுள்ளார். (ம)

# இந்தியாவுடன் விளையாடிவிட்டால் அடுத்து ஓய்வுதான் -மிஷ்பா



இந்தியாவுக்கு எதிராக டெஸ்ட் ஆட்டமொன்றில் விளையாடிவிட்டால் உடனே ஓய்வுபெற்றுவிடுவேன் இவ்வாறு தெரிவித்துள்ளார் பாகிஸ்தானின் அணித்தலைவர் மிஷ்பா உல் ஹக்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் டெஸ்ட்தலைவர் மிஸ்பா உல் ஹக், ஒரு நாள் ஆட்டம் மற்றும் ரி–20 ஆட்டங்களில் இருந்து ஏற்கனவே ஓய்வு பெற்றுவிட்டார். டெஸ்டிலும் அவர் விடைபெறும் காலத்தை நெருங்கி விட்டார். இது தொடர்பாக 41 வயதான மிஸ்பா நேர்காணல் ஒன்றில் தெரிவித்ததாவது எனக்கு இன்னும் சிறிது காலமே கிரிக்கெட் வாழ்க்கை எஞ்சியிருக்கிறது என்பதை நான் நன்கு அறிவேன். எனது தனிப்பட்ட வாழ்க்கைக்கான முழு கவனத்தையும் செலுத்துவதற்கு முன்பாக மேலும் சில டெஸ்ட் ஆட்டங்களில் விளையாட விரும்புகிறேன். ஆனால் இது மட்டும் எனது திட்டமல்ல. இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் நடத்தப் பட்டால், அதில் விளையாடிவிட்டு சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றுவிடுவேன். எனவே இந்திய தொடர் என்பது கடைசித் தொடராக இருக்கும் என்றார்.

இந்தியா பாகிஸ்தான்டெஸ்ட்தொடர் எதிர்வரும் டிசெம்பர் மாதம் ஆரம்ப [illegible] யாக அறிவிக்கப்படவில்லை. (ம)

# ஹென்றிஸை மிக இலகுவாக வீழ்த்தியது விக்டோறிஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 28

தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் ரி–20 தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் சென்.விக்டோறிஸ் அணி 9 இலக்குகளால் சென்.ஹென்றிஸை வீழ்த்தி வெற்றியை பதிவு செய்தது.

மன்னார் பொதுவிளையாட்டு மைதானத்தில் மதியம் 2 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஹென்றிஸ் அணியினர் 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றனர். அதிகபட்சமாக றொபின் 28 ஓட்டங்களைப் பெற்றார்.

119 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.விக்டோறிஸ் அணி 8.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் ஒரு இலக்கினை இழந்து 120 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. அதிகபட்சமாக ஐங்கரன் 52 ஓட்டங்களைப் பெற்றார். (ம-23)

# பந்துவீச்சு தொடர்பான கருத்தரங்கு

வலி வடக்கு, ஜூலை 28

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் ஏற்பாட்டில் முறையற்ற பந்துவீச்சு தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கும் செயலமர்வும் எதிர்வரும் 31ஆம் திகதி தம்புள்ள சர்வ்தேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஆஸ்ரேலியாவில் இருந்து வருகைதரவுள்ள டந்துவீச்சு பரிசோதனை தொடர்பான நிபுணர் இந்த செயலமர்வையும் பயிற்சியையும் வழங்கவுள்ளார். குறித்த செயலமர்வில் யாழ்ப்பாணம், அனுராதபுரம், பொலனறுவை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களின் கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் நாற்பது பேர் இந்த செயலமர்வில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

# கோஹ்லிக்கு ராவிட் பாராட்டு

ஆஸ்திரேலிய 'ஏ' அணிக்கு எதிராக விளையாட விருப்பம் தெரிவித்த கோஹ்லிக்கு இந்திய 'ஏ' அணியின் பயிற்சியாளராக இருக்கும் ராகுல் ராவிட் பாராட்டு தெரிவித்துள்ளார். இந்திய அணி அடுத்த மாதம் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. இந்த தொடரில் தன்னை மேம்படுத்திக்கொள்ள ஆஸ்திரேலிய 'ஏ' அணிக்கு எதிராக நாளை நடக்கும் ஆட்டத்தில் இந்திய 'ஏ' அணிக்காக விளையாட டெஸ்ட் அணித்தலைவராக இருக்கும் கோஹ்லி விருப்பம் தெரிவித்தார். இது தொடர்பாக 'ஏ' அணியின் பயிற்சியாளராக உள்ள ராவிட் தெரிவித்ததாவது இலங்கை தொடருக்கு முன் தன்னை மேம்படுத்திக்கொள்ள கோஹ்லி ஆர்வமாக உள்ளது சிறப்பான விடயம். இதற்காக இந்திய 'ஏ' அணியில் இணைந்து விளையாட அவர் விரும்பியது அற்புதமானது– என்றார்.(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# கரீபியன் பிரிமியர் லீக், சம்பியனாகியது டிரினிடாட் அன்ட் டொபாக்கோ

நடப்பு ஆண்டுக்கான கரீபியன் லீக் கிண்ணத்தை கைப்பற்றி அசத்தியுள்ளது டிரினிடாட் அன்ட் டொபாக்கோ அணி.

இந்தியாவில் நடைபெறும் ஐ.பி.எல். தொடரைப் போன்று மேற்கிந்தியத் தீவுகளிலும் கரீபியன் பிரிமியர் லீக் என்ற தொடர் கடந்த 2013ஆம் ஆண்டில் இருந்து நடத்தப்படுகிறது. இந்த ஆண்டுக்கான கரீபியன் லீக் தொடரின் இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் டிரினிடாட் அன்ட் டொபாக்கோ – பார்படோஸ் டிரிடென்ட்ஸ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற டிரினிடாட் அன்ட் டொபாக்கோ அணி முதலில் துடுப்பெடுத்தாடி 5 இலக்குகள் இழப்புக்கு 178 ஓட்டங்கள் குவித்தது. 179 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பார்படோஸ் டிரிடென்ட்ஸ் அணி இறுதிவரை போராடி 158 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதனால் 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று நடப்பு வருடத்தின் கரீபியன் பிரிமியர் லீக் சம்பியனாகியது டிரினிடாட் அன்ட் டொபாக்கோ. (ம)




## கொட்டும் மழையில் குதுகலம்

பங்களாதேஷில் தென்னாபிரிக்கா வீரர்கள் தங்கியிருக்கும் விடுதிக்கு முன்பாக இருக்கும் திறந்த வெளியில் கொட்டும் மழையில் சிறுவர்களுடன் தென்னாபிரிக்க வேகப் பந்து வீச்சாளர் ஸ்ரெயின் கால்ப் பந்து விளையாடி அவர்களுக்கு இன்ப அதிர்ச்சி அளித்துள்ளார்.

தென்னாபிரிக்கா பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் மழையின் ஆதிக்கத்தினால் சமநிலையில் முடிவடைந்தது. குறித்த ஆட்டத்தின் நான்காவது நாளில் மழையின் தாக்கம் சற்று அதிகமாக இருந்தது. இதனால் அன்றைய நாளுக்கான ஆட்டம் கைவிடப்பட்டதாகத் தெரிவித்ததையடுத்து தென்னாபிரிக்க வீரர்கள் அவர்களது விடுதிக்கு திருப்பியனுப்பப்பட்டனர். விடுதி திரும்பியதும் விடுதிக்கு முன்பாக இருக்கும் திறந்த வெளியில் கொட்டும் மழையில் சிறுவர்கள் கால்ப்பந்து விளையாடிக் கொண்டிருப்பதை ஸ்ரெயின் பார்த்தார். உடனே அவர்களுடன் இணைந்து கால்ப் பந்து விளையாடிய ஸ்ரெயின் அவர்களுடன் புகைப்படங்களையும் எடுத்துக் கொண் டார். (ம)

## மீண்டும் வருவேன்




சூதாட்டக் குற்றச்சாட்டில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ள ஸ்ரீசாந்த் 2019ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடரில் விளையாடுவதுதான் எனது கனவு என்று தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி சார்பில் விளையாடிய கேரளாவை சேர்ந்த ஸ்ரீசாந்த் சூதாட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவித்து கடந்த 2013ஆம் ஆண்டில் கைதுசெய்யப்பட்டார். இதனால் அவருக்கு ஆயுட்காலத்தடையை விதித்தது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை. பின்னர் ஸ்ரீசாந்த் மீது சுமத்தப்பட்ட குற்றத்துக்கு போதிய ஆதாரமில்லை என்று தெரிவித்து அவரை விடுவித்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இதைத் தொடர்ந்து ஸ்ரீசாந்த் தனது சொந்த ஊரான கொச்சியில் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். சமீபத்தில் வெளியான தீர்ப்பு தொடர்பாகவும் எதிர்கால கிரிக்கெட் வாழ்க்கை தொடர்பாகவும் வழங்கிய நேர்காணலில் ஸ்ரீசாந்த் தெரிவித்ததாவது:– 2019ஆம்ஆண்டுநடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடரில் விளையாடி இந்தியாவிற்கு கிண்ணத்தை வென்று தருவதுதான் எனது கனவு. இது நம்புவதற்கு கடினமாக இருக்கும். ஆனால் என் மீதும் என் திறமை மீதும் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ளேன். அந்த நம்பிக்கைதான் எனக்கு இரண்டு உலகக்கிண்ணத் தொடரில் விளையாடிய முதல் கேரள வீரர் என்ற பெயரை பெற்றுத் தந்துள்ளது என்றார். (ம)

## 2 முறைப்படி திருமணம் செய்யவுள்ள தினேஸ் கார்த்திக் – தீபிகா பல்லிகல்



கிரிக்கெட் வீரர் தினேஷ் கார்த்திக், ஸ்குவாஷ் வீராங்கனை தீபிகா பல்லிகலை அடுத்த மாதம் 2 முறைப்படி திருமணம் செய்யவிருக்கிறார்.

இவர்களுக்கு கடந்த 2013ஆம்ஆண்டிலேயே முறைப்படி திருமணம் நிச்சயிக்கப்பட்டு விட்டது. இருவரும் விளையாட்டில் அதிக நேரத்தைச் செலவிட்டிருந்ததால் திருமணத்தை தொடர்ந்துதள்ளிவைத்தனர். இந்த நிலையில் இந்த ஆண்டுதிருமணம் செய்து கொள்ள முடிவெடுத்திருந்தனர். அதன்படி அடுத்த மாதம் இவர்களது திருமணம் சென்னையில் நடைபெறவுள்ளது. தீபிகா பல்லிகல் கிறிஸ்தவர் என்பதால் அவர்களது முறைப்படி ஆகஸ்ட் 18ஆம் திகதியும்,தினேஷ் கார்த்திக் இந்து என்பதால் அவர்களது முறைப்படி ஆகஸ்ட் 20ஆம் திகதியும் திருமணம் நடைபெறவுள்ளது. (ம)

மாபெரும் இலவச கருத்தரங்கு

Science for Technology
Engineering Technology
காலம் 28/07, 29/07(8.30-3.00) மாதிரி வினாத்தாளுடன் முழு பாடத்திட்டங்களும் உள்ளடங்கலாக.
NEC
மணிக்கூட்டு வீதி,
யாழ் நகர்
077 469 6695

வாடகைக்கு

நல்லூர் பகுதியில் அரச பணிபுரியும் பெண்களுக்கு மட்டும் சமையலறையுடன் கூடிய, இணைந்த குளியலறை வசதியுடன் அறை வாடகைக்குண்டு.
தொடர்பு : 075 629 2982

வாக்காளர்களே விழிப்பாயிருங்கள்!
தேர்தல் கால சட்ட மீறல் களுக்கு உடந்தையாக இருக்காதீர்.

* புதிய நியமனங்கள், இடமாற்றங்கள் வழங்குதல், பெறுதல்.
* வாக்காளர்களைக் கவரும் நோக்கில் அன்பளிப்புக்களை உதவித்திட்டங்களை வழங்குதல், பெறுதல்.
* அரச சொத்துக்களை பிரச்சாரத்துக்கு பயன்படுத்தல்.
* வேட்பாளர்கள் பிராசார பதாகைகள், சுவரொட்டிகளை காட்சிப்படுத்தல்.
* போலி வாக்குச்சீட்டுக்களை பயன்படுத்தல்.
* ஊர்வலங்கள் ஒலிபெருக்கியை அனுமதியின்றிப் பயன்படுத்தல்.
* வேறொருவரின் வாக்காளர் அட்டையை வைத்திருத்தல்.
* வேட்பாளர்கள் வீடுவீடாகச் சென்று வாக்குக் கேட்டல்.
* தேர்தல் தினத்தன்று வாக்காளர்களை வாகனத்தில் ஏற்றி இறக்குதல்.
* வாக்களிக்க விடாமல் தடுத்தல், விரட்டுதல்.
* வாக்காளர் அட்டை விநியோகத்திற்கு ஊறு விளைவித்தல்.

(c18138)
(5.3.7) அனுசரணை- கரித்தாஸ் யாழ்ப்பாணம் கியூடெக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.